விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 15 செவ்வாய்க்கிழமை (28.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 099

புருசோத்தமன் எழுதும்
தமிழரின் தலைவிதி எப்படியாகும்?
கட்டுரை உள்ளே...

# 4000 ஏக்கர் காணி யாழில் விடுவிக்கப்படும்


## மேஜர் ஜெனரல் மகேஸ் தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாதுகாப்பு படைத் தலைமையகத்தினால் இருபது ஆயிரம் ஏக்கர் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டாயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இதில் மேலும் நான்காயிரம் ஏக்கர் காணிகள் விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதியாக இருந்து பதவி உயர்வு பெற்றுள்ள மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார். (23-ம் பக்)

## யாழ். கட்டளைத் தளபதியாக மேஜர் தர்சன நியமனம்



(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு படைகளின் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாரச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு படைகளின் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க இல 23

## அச்சுவேலி முக்கொலை வழக்கு

## "கழுத்தில் பிடித்து தூக்கியபடி சரமாரியாக வெட்டினார்"

### கணவனுக்கு எதிராக மனைவி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

என்னை கழுத்தில் பிடித்து மேலே தூக்கி சரமாரியாக வெட்டினார் என அச்சுவேலி முக்கொலை வழக்கில் கணவனுக்கு எதிராக மனைவி சாட்சியமளி 04

## பிரபாகரன் காலத்தில் பெண்களுக்கு சிறப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் காலத்தில் தமிழ்ப் பெண்கள் சகல துறைகளிலும் சிறந்து விளங்கினார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

விழுதுகள் நிறுவனத்தினரால் நேற்று நடத்தப்பட்ட செங்கோலோச்ச விழையும் பெண்களுக்கோர் பாரா 04

## விளக்கமறியல் கைதி மரணம்!

(மல்லாவி)

வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த விளக்கமறியல் கைதி ஒருவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நுரையீரலில் நோய் தொற்று ஏற்பட்டமைக்காக சிகிச்சை 24

## ரஜினி # போராட்டம்




(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய திரைப்பட நடிகர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை இலங்கைக்கு அழைத்து வருமாறு வலியுறுத்தியும், ரஜினியின் வருகையை அரசியலாக்கினார்கள் என திருமாளவன், வேல்முருகன் ஆகியோருக்கு எதிராகவும் யாழ். நல்லூரில் நேற்றைய 23

## வீதி விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சாவு

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் சங்குப்பிட்டி பாலத்தருகில் இடம்பெற்றுள்ளது.

இதில் வீரசிங்கம் வீதி கச்சாய் 23

## வவுனியாவில் 100 பேருக்கு டெங்கு!

(வவுனியா)

வவுனியாவில் மார்ச் மாதத்தில் மாத்திரம் 100 பேர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந் நிலையில் பொலிஸ் சிவில் பாதுகாப்பு பிரிவு மற் றும் சுகாதார 24

## சந்திரிகா தெரிவித்தது அரசியல் நலனுக்கானது

### விக்கி கருத்து

(யாழ்ப்பாணம்)

போர்க்காலத்தில் நாட்டை காப்பாற்றிய இராணுவ வீரர்களை ஒருபோதும் தண்டிக்க போதில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, அரசியல் நலன்களுக்காகவே கூறியுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச் 23


## பனிப் போர் நல்லது அல்ல!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் பனிப் போர் தமிழ் மக்களை பொறு 23

## மக்களின் போராட்டங்களை கண்டு கொள்ளாத அரசாங்கம்

### சுவிஸ் தூதரிடம் வடக்கு முதல்வர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கில் மக்களுடைய உரிமை போராட்டங்கள் வலுப்பெற்று வரும் நிலையில் அது தொடர்பில் ஒன்றும் நடக்காதது போன்று மத்திய அரசு மௌனமாக இருப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது 23

## நாட்டில் தொடரும் கடும் வரட்சி

(கொழும்பு)

நாட்டில் தொடரும் கடும் வரட்சி காரணமாக சுமார் பத்து இலட்சம் அளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்து 23

## அரசியலமைப்புக்கு அங்கீகாரம் அவசியம்

(கொழும்பு)

அரசியலமைப்பிலுள்ள 12ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி அனைத்து இன மக்களும் பயனடையும் பொருட்டு புதிய அரசியல் சாசனத்தை அமைப்பது குறித்து முன்னெடுப்புக்கள் இடம்பெற்று 23

## நாட்டுக்கு எதிராக சதிவலை!

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கான சர்வதேச நீதிம 23

## கடனுக்கு பதிலாக முதலீட்டு அழைப்பு

(கொழும்பு)

மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிச்சுமையை குறைத்து அந்த இலாபத்தை மக்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். 04

## ரூ.9கோடியே 50இலட்சம் நிதியில் 190 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம்

(கொழும்பு)

ஓமந்தை அரச உத்தியோகத்தர் குடியிருப்பைச் சேர்ந்த 190 குடும்பங்களுக்கு தலா 05 இலட்சம் ரூபா வீதம் புதிய வீடுகளை அமைப்பதற்கு 09 கோடியே 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் குடியிருப்பில் உள்ள ஏனைய குறைபாடுகளையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

கடந்த 2011 ஆம் ஆண்டு காணிகள் அற்ற நிலையில் வீட்டு வசதிகள் இன்றி வவுனியா மாவட் 04

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பம்

யாழ் - கொக்குவில் தொழில்நுட்பவியல் கல்லூரியில் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கற்கைநெறிக்கு க.பொ.த. (உயர்தரம்) 3 பாடங்களுடன் பொது ஆங்கிலத்தில் குறைந்தது சாதாரண சித்தி பெற்றவர்கள் அல்லது யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் ஆங்கில சான்றிதழ் தர கற்கை நெறி பயின்றவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் தரம் 10 வரை கல்வி கற்றவர்களுக்கான வெல்டிங் (Welding) கற்கை நெறியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் தொழில்நுட்பவியல் கல்லூரியில் தொழில் வழிகாட்டல் அலுவலருடன் தொடர்பு கொண்டு மேற்படி கற்கைநெறிகளுக்கு இணைந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)

# பிரதமருக்கு கடிதம்!


இலங்கையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரியுள்ளார்.

கடிதம் ஒன்றை அனுப்பி அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கடந்த தினம் 12 தமிழக மீனவர்கள் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

அவர்களுடன் தற்போது 38 தமிழக கடற்றொழிலாளர்கள் இலங்கையில் தடுப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# வீதி விபத்து; இருவர் காயம்



கரணவாய் நாவலர் மடத்தடியில் மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இவ்விபத்தில் கரணவாயைச் சேர்ந்த சோ. ராகவன் (வயது-29) மற்றும் சமரபாகுவைச் சேர்ந்த இ. சேதுலிங்கம் (வயது-46) ஆகியோரே படுகாய மடைந்தனர்.

யாழ்ப்பாண பக்கமாக இருந்து வந்து கொண்டிருந்த துவிச்சக்கரவண்டியுடன் அதேபக்கமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி பின்னர் வீதியால் பயணித்த பஸ்ஸுடன் மோதி வீதியின் மருங்கில் தூக்கி வீசப்பட்ட நிலையில் பிரஸ்தாப நபர்கள் இருவரும் படுகாயமடைய நேரிட்டது.

இதுதொடர்பில்நெல்லியடிப்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-60


## காயத்திரி திருமண சேவை

காயத்திரி திருமாங்கல்ய சேவையினூடாக தங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கி விடுங்கள். நாங்கள் தங்களின் விருப்பத்திற்கேற்ற வகையில் விரைவான சேவையினை வழங்கி கொண்டிருக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:-

**0769416424, 0212232222**

**ஞான வைரவர் கோவிலடி**

உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

(8427)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

உயர் பட்டப்ப்டிப்புகள் பீடம்

புதிய அனுமதிகள்

1. நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா 2017/18 (அணி IV)
2. பண்பாட்டியல் முதுகலைமாணிக் கற்கைநெறி - 2017/2018 (அணி III)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா **2017/18** (அணி IV)

அனுமதிக்குரிய தகைமைகள்

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏதாவது ஒரு கற்கைநெறியில் பட்டம்
2. ஆங்கிலத்தில் திருப்திகரமாக தொழில் செய்வதற்கான அறிவு
3. கணனிப் பிரயோகத்தில் திருப்திகரமான அறிவு (முன்னுரிமை)

தற்போது நூலக வேலையுடன் தொடர்புடைய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கற்கை நெறிக் காலம் : ஒரு வருடம்
மொழி மூலம் : தமிழ்
தெரிவு முறைமை : நேர்முகத்தேர்வு
கற்கை நெறிக்கட்டணம் : 85,000/-

பண்பாட்டியல் முதுகலைமாணிக் கற்கைநெறி - **2017/2018** (அணி III)

அனுமதிக்கான தகைமைகள்

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது ஒரு கற்கைநெறியிற் பட்டதாரியாக உள்ள எவரும் விண்ணப்பிக்கலாம்.

அல்லது

- பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக் கூடிய வேறு தகுதிகளும் அனுபவமும் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

கற்கை நெறிக் காலம் : ஒரு வருடம்.
மொழி மூலம் : தமிழ்
தெரிவு முறைமை : நேர்முகத்தேர்வு
கற்கை நெறிக்கட்டணம் : 100,000/-

விண்ணப்பப் படிவம் பெறும் முறை :

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையில் 162-1001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு 1000/= கட்டணத்தை செலுத்தி உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்ப படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23 x 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர் உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் www.jfn.ac.lk/grad எனும் பல்கலைக்கழக வலைதள வசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தளமூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா. 1000/- பெறுமதியான காசுக்கட்டளையை / மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கற்கை நெறியின் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 30.04.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர் (C - 7929)


காதல் விவகாரம்

# இளைஞன் படுகொலை

காதல் விவகாரம் காரணமாக 19 வயதுடைய இளைஞனை படுகொலை செய்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு - வத்தளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை குறித்த இளைஞரை சிலர் கடுமையாக தாக்கி கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த 19 வயதுடைய இளைஞன் கண்டி, நித்த வெலையை பிறப்பிடமாக கொண்டவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த சம்பவத்தின் போது இளைஞன் மது போதையில் இருந்துள்ளதாகவும் காதல் விவகாரமே இக் கொலைக்கு காரணம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (செ-11)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அறிவித்தல்

கலைப்பீட 3ம், 4ம் வருட மாணவர்களுக்கான கற்கை நடவடிக்கைகள் 29.03.2017 (புதன்கிழமை) அன்று ஆரம்பமாகும்.

விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்கள் 28.03.2017 (செவ்வாய்க்கிழமை) இன்று மாலை முதல் தத்தம் விடுதிகளுக்கு திரும்பலாம்.

பதிவாளர்
27.03.2017

(சி-7928)



## CERTIFICATE IN PHARMACY

மருந்தகங்களில் பணிபுரிபவர்களுக்கும், மருத்துவ பிரதிநிதிகளுக்குமான ஆறு மாத சான்றிதழ் பயிற்சி நெறி (CERTIFICATED COURSE) வகுப்புக்கள் (5th Batch) சித்திரை 2017 - புரட்டாதி 2017ஆம் மாதம் வரை நடாத்தப்படவுள்ளது.

வயது எல்லை இல்லை.

கல்வித்தகைமைகள் :- G. C. E O/L இல் விஞ்ஞானம், ஆங்கிலம் அடங்கலாக ஆறு பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும்.

வகுப்புக்கள் நடைபெறும் இடம் :- பார்மசிக் கல்வி மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி, வெளிவாரிப் பட்டப்படிப்பு, 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஆறுமாத காலமும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1 மணிக்கு ஒரு பிரிவினருக்கும் (1st Batch). மற்ற பிரிவினர்களுக்கு (2nd Batch) புதன்கிழமைகளில் காலை 9 மணிக்கும் வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளது. 02/04/2017 திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பயிற்சிநெறிக்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கல்லூரிப் பதிவுக் கட்டணம் ரூபா 500/= பயிற்சி நெறிக்கான மாதாந்த கட்டணம் 1500/=

தொடர்பு:-
நடராசா இராசநேரு, மருந்தக கல்வி இணைப்பாளர், 077 625 6292

(8428)



## IF YOU WANT TO BE A QUALIFIED PHARMACIST?

### மருந்தாளர் வெளிவாரிப் பரீட்சை

வயது எல்லை இல்லை. கல்வித்தகைமைகள் G. C. E O/L ஆங்கிலப்பாடத்தில் சாதாரண சித்தி. G. C. E A/L ஒரே தடவையில் மூன்று கணித/உயிரியல் பாடங்களில் (இரசாயனம் உட்பட) சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும். தற்போது சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றது. நீங்களும் மருந்தாளராக வர விரும்பினால்!

(8428)

தொடர்பு:- நடராசா இராசநேரு, மருந்தாளர் கல்வி இணைப்பாளர், யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு), 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P 077 625 6292


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சகோதரத்துவ உறுப்பினரும் ஆசிரியருமான திரு. த. சுபாஸ்கரன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர்

**தவசுப்பிரமணியம் சறோஜாதேவி**



தோற்றம்:- 18.08.1947 மறைவு:- 27.03.2017

அன்னாரின் பிரிவால் ஆழ்ந்த துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(C-7926)

# பொறுப்புக்கூறல் பொறிமுறை விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்கமாட்டார்கள்

## வெளிவிவகார பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

**பொறுப்புக்கூறல் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்றாலும் விசாரணைகளில் ஈடுபடமாட்டார்கள் என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**




2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தில், இலங்கை யின் நீதிப் பொறிமுறை வெளிநாட்டு, மற்றும் கொமன் வெல்த் நீதிபதிகளின் பங்களிப்புடன் உருவாக்கப்பட வேண்டும் என்றே குறிப்பிடப் பட்டுள்ளது.

பங்களிப்பு என்பதற்கு பல வரையறைகள் உள்ளன. சில தரப்புகள், பங்களிப்பு என்பதன் அர்த்தம், வழக்குகளை வெளிநாட்டு நீதிபதிகள் விசாரிக்கின்ற கலப்பு நீதிமன்றமே என்று கூறுகின்றன.

ஆனால் ஜனாதிபதி பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் கலப்பு நீதிமன்றம் அமைக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை என்று தெளிவாக கூறியுள்ளனர்.

கலப்பு நீதிமன்றம் ஒன்றை அமைக்க முடியாமைக்கு பல காரணங்கள் உள்ளன. இலங்கையின் அரசியலமைப்பின் படி வெளிநாட்டு நீதிபதிகள் வழக்குகளை விசாரிக்க முடியாது.

இன்னொரு வகையில் சொல்வதானால், பங்களிப்பு என்பது, கலப்பு என்று அர்த்தமாகாது. இதனைப் புரிந்து கொள்வதில் சிலருக்கு நிச்சயமாக சிக்கல்கள் உள்ளன.

பங்களிப்பு என்பதை, நிபுணத்துவ அல்லது அவதானிப்பு என்றும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் வழக்குகளை விசாரிக்க முடியாது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் தலைமை நீதிபதி பகவதி, நிபுணத்துவ மற்றும் அவதானிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டார்.

இந்தோனேசியாவின் முன்னாள் சட்டமா அதிபர் தருஸ்மன் உள்ளிட்ட பல உதாரணங்கள் இதற்கு உள்ளன.

அரசியல் இலாபம் கருதி செயற்படும் தரப்புகள் தான், பங்களிப்பு என்பதை கலப்பு நீதிமன்றம் என்றும், விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்பர் என்றும், மக்களைக் குழப்ப முனைகிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## சுகாதார அமைச்சர் ராஜிதவுக்கு டெங்கு



(கொழும்பு)

அண்மைக்காலமாக இலங்கையை அச்சுறுத்தும் விடயமாக டெங்கு நோய்த் தொற்று உள்ளது. அதனை கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நிலையில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவும் டெங்கு தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ராஜி டெங்குத் தொற்றுக்கான சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த இரண்டு, மூன்று நாட்களாக அவர் ஓய்வில் உள்ளார் என கூறப்படுகின்றது. (இ-7)

## தனக்கு எதிரான செய்திகளை நிறுத்துமாறு சர்வதேச ஊடகங்களுக்கு கோத்தா கடிதம்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய, தனக்கு எதிரான செய்திகளை வெளியிடுவதை நிறுத்திக் கொள்ளுமாறு சர்வதேச ஊடகங்களுக்கு சட்டத்தரணிகள் ஊடாக கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் எதிர்க்கருத்துக் கொண்டிருப்பவர்களை அடக்கி வைக்கும் பொருட்டு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இரகசிய படைப்பிரிவொன்றை பேணி வந்ததாக ஏ.எப்.பி. நிறுவனம் அண்மையில் செய்தியொன்றை வெளியிட்டிருந்தது.

இச்செய்தியை மேற்கோள் காட்டி அல்ஜெசீரா நிறுவனம் விசேட நிகழ்ச்சித் தொகுப்பொன்றை அண்மையில் ஒளிபரப்பியிருந்தது.

எனினும் குறித்த செய்தி உண்மைக்குப் புறம்பானதும், தவறான ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்துள்ளதாகவும் கோத்தபாய தனது சட்டத்தரணிகள் ஊடாக குறித்த செய்தி நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

எனவே தன்னைப் பற்றிய தவறான செய்திக்கு கொடுத்த முக்கியத்துவத்தை அச்செய்தியை திருத்தி ஒளிபரப்பும் போதும் முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்புமாறு அவர் குறித்த கடிதத்தின் வாயிலாக கேட்டுக் கொண்டுள்ளார்.

கோத்தபாயவின் சார்பில் அவரது சட்டத்தரணி சனத் விஜேவர்த்தன சட்ட நிறுவனம் குறித்த கடிதத்தை அனுப்பிவைத்துள்ளது. (இ-7)

## விளையாட்டு பணிப்பாளர் பதவிக்கு ராணுவ அதிகாரியா?- நீதிமன்றம் தடை

(கொழும்பு)

கல்வி அமைச்சின் விளையாட்டு பணிப்பாளர் பதவி தொடர்பில் இராணுவ கேணல் ஒருவரை நியமிக்க, உயர் நீதிமன்றம் நேற்று தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக அதிகாரிகள் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட மனுவை ஆராய்ந்த வேளை, உயர் நீதிமன்றம் குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மனுவை முன்வைத்த போது, அச் சங்கத்தினர் உயர் நீதிமன்றத்தில் கூறியதாவது, கல்வி அமைச்சின் விளையாட்டு பணிப்பாளர் பதவிக்கு இராணுவ அதிகாரி ஒருவரை நியமிப்பது, கல்விச் சேவையாப்புக்கு முரணானது என்றனர்.

இதனால் அந்த நியமனத்திற்கு தடையுத்தரவு பிறப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம், வழக்கை விசாரிக்க அனுமதியளித்ததோடு, அடுத்த கட்ட வழக்கு விசாரணையை ஜூலை 24ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளனர். (இ-7)

## வங்கி முறி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கவும்

### அமைச்சர் கபீர் வலியுறுத்து



(கொழும்பு)

வங்கிமுறி மோசடியில் தொடர்புடையவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதற்கு அரசாங்கம் வாய்ப்பளித்துள்ளதாக அமைச்சர் கபீர்ஹாசிம் தெரிவித்துள்ளார். தற்போதைய அரசாங்கத்தினால், சர்ச்சைக்குரிய வங்கி முறி தொடர்பாக சுயாதீன விசாரணை மேற்கொள்வதற்கு அவசியமான சூழலை தயார்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஹோமாகம பொது விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் கபீர் ஹாசிம் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## விமல் வீரவன்சவை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியவில்லை

### வைத்திய அதிகாரி அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவை, நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியாது என நேற்று சிறைச்சாலை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

விமலின் உடல் நிலை குறித்து வைத்திய அதிகாரி நீதிமன்றத்திற்கு வழங்கியுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப்பேச்சாளர் மொகமட் முஸம்மில் சரத் பொன்சேகாவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கு தொடர்பில் சாட்சியம் அளிப்பதற்காகவே விமலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் அவரது உடல் நிலை காரணமாக அவரால் நீதிமன்றில் முன்னிலையாக முடியாது என வைத்தியர் அறிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது ஊழலில் ஈடுபட்டார் என சரத் பொன்சேகா மீது மொகமட் முஸம்மில் வழக்கு தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## "கழுத்தில் பிடித்து ...

த்துள்ளார்

அச்சுவேலி முக்கொலை வழக்கின் தொடர் விசாரணை யாழ் மேல நீதிமன்றில் நேற்றைய தினம் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது. அந்த வழக்கின் சாட்சிய பதிவின் போதே எதிரியின் மனைவி மேற்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பகுதியில் வசித்து வந்த பொன்னம்பலம் தனஞ்சயன் என்பவர் கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி தனது மாமியாரான நற்குணானந்தன் அருள்நாயகி, மைத்துனி யசோதரன் மதுசா, மைத்துனன் நற்குணானந்தன் சுபாஸ்கரன் ஆகியோரை கொலை செய்ததாகவும் மனைவி தனஞ்சயன் தர்மிகா மற்றும் மைத்துனியின் கணவர் தங்கவேல் யசோதரன் ஆகியோரை கொலை செய்ய எத்தனித்தார் என்ற 5 குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதவான் நீதிமன்றில் சுருக்க முறையற்ற விசாரணை இடம்பெற்றது.

அதன் அடிப்படையில் 3 கொலைகள், 2 கொலை முயற்சிகளை மேற்கொண்டதாக இவர் மேல் குற்றம் சாட்டப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் கடந்த 2016 ஆம் ஆண்டு யாழ். மேல் நீதிமன்றில் குற்றப்பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கை விரைவில் நடத்துமாறு அறிவிக்கப்பட்டது. அந்த வகையில் இவ் வழக்கின் தொடர் விசாரணை யாழ். மேல் நீதிமன்றில் நேற்றைய தினம் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது.

வழக்கு தொடுநர் தரப்பில் அரச சட்டத்தரணி நிஷாந் நாகரட்ணம் ஆஜராகியிருந்ததுடன் எதிரி தரப்பில் சட்டத்தரணிகள் திருக்குமரன் மற்றும் கே.ரஞ்ஜித்குமார் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். மேற்குறித்த வழக்கில் உள்ள 14 சாட்சிகளில் முறையே 4ஆம், 5 ஆம், 2 ஆம 3 ஆம், 6 ஆம் சாட்சிகளின் சாட்சியப்பதிவு விசாரணை நேற்றைய தினம் இடம்பெற்றது.

வழக்கு தொடுநர் தரப்பின் 4 ஆவது சாட்சியும் எதிரியின் மனைவியுமான தனஞ்சயன் தர்மிகா (வயது 27) சாட்சியமளிக்கையில்

கதிரிப்பாய் அச்சுவேலிப்பகுதியல் கடந்த 2014 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 4 ஆம் திகதி இரவு நானும் எனது அம்மா மற்றும் எனது தம்பி ஆகியோர் எமது வீட்டின் சாமி அறையில் படுத்துறங்கினோம். புதிதாக திருமணமான எனது அக்கா, அவருடைய கணவர் மற்றும் எனது மகனான விஷ்னுஜன் ஆகியேர் மற்றைய அறையில் படுத்துறங்கினார்கள். அன்றைய தினம் நள்ளிரவு 12 மணிக்கு பின்னர் என்னை ஒருவர் வெட்டுவது போல் உணர்ந்தேன். தனஞ்சயன் வெட்டிப போட்டான் என அம்மாவின் குரல் கேட்டது திடீரென எழுந்த போது அம்மாவும் தம்பியும் எழுந்து நிற்பதனை அவதானித்தேன். அம்மா தனது கழுத்தை பிடித்தவாறு நின்றிருந்தார். அப்போது அறை வாசலில ஒரு உருவம் நிற்பதை கண்டேன். அது தனஞ்சயுன் என்பதை உணர்ந்தேன்.

நான் உடனேயே வெளியில் ஓடிச்சென்று "அக்கா அத்தான் கதைவை திறக்காதேங்கோ தனஞ்சயன் வெட்டீட்டான்" என்று கத்தினேன். யாராவது காப்பாற்றுங்கள் என கத்தியவாறு வெளியில் சென்றேன். அப்போது எனது கழுத்தை தனஞ்சயன் பிடித்து இறுக்கினார். என்னால் கத்த முடியவில்லை. அன்று நிலவு வெளிச்சம் மிக தெளிவாக இருந்தது அதில் தனஞ்சயனை நான் நன்றாக அடையாளம் கண்டேன்.

"4 மணித்தியாலமாய் பார்த்துக் கொண்டு இருக்கிறேன் என்ன கும்மாளம் போடுறீங்களோ குடும்பத்தோட செத்துப்போங்கோ" என கூறி என்னை வெட்டுவதற்கு வந்தார். நான் இரு கைகளாலும் அந்த வாளை பிடித்து தடுத்தேன். ஒரு நிமிடம் தான் என்னால் போராட முடிந்தது. அதன் பின் என்னால் முடியவில்லை கைகள் இரண்டிலும் காயம் ஏற்பட்டது. பின்னர் அவரது கையால் எனது கழுத்தில் பிடித்து என்னை மேலே தூக்கி வலது கை இடது கை, முழங்கை என பல இடத்திலும் தாறுமாறாக வெட்டினார். இறுதியாக முதுகில் ஓங்கி வெட்டிய பின் என்னை தூக்கி வீசி விட்டு அம்மா இருந்த அறைக்குள் சென்றார்.

என்னால் ஓரளவுக்கு எழும்பக் கூடியதாக அப்போது இருந்தது. எழும்பி வீட்டு வேலியின் ஓடையால் குனிந்து வீதிக்கு வந்து வெளியில் பயத்தின் காரணமாக கொஞ்ச தூரம் சென்று விட்டேன். பின்னர் அக்காக்கு என்ன நடந்தது என அறிவதற்கு வீட்டுக்குமுன் வந்து மதிலால் எட்டிப்பார்த்தேன் அப்போது வெளியில் வெளிச்சம் போடப்பட்டிருந்தது. தனஞ்சயன் கையில் ஒன்றரை அடி நீளத்தில் வாள் போன்ற ஆயுதத்துடன் வீட்டு விறாந்தையில் நின்றதனை அவதானித்தேன்.

அப்போது அயல் வீட்டில் இருந்தவர் எனது சத்தத்தை கேட்டு ஆட்டோவை எடுத்துக்கொண்டு வந்தார். அப்போது அத்தான் வீட்டில் இருந்து முகம் முழுவதும் இரத்தத்துடன் வந்தார். அவருக்கு தலையில் பாரிய வெட்டுக் காயம் இருந்தது. அக்கா எங்கே என கேட்டேன். மதுவுக்கு என்ன நடந்தது என தனக்கு தெரியாது என கூறினார். ஆட்டோவில் இருவரும் ஏறி அச்சுவேலி வைத்தியசாலைக்கு சென்றோம்.

நானும் தனஞ்சயனும் 9 மாதங்களாக இல்லறவாழ்வில் இருந்து பிரிந்து வாழ்கிறோம். எனக்கு நெஞ்சில் வருத்தம் இருப்பதாகவும் நான் இரண்டு வருடங்களில் இறந்துவிடுவேன். என தனஞ்சயன் கூறினார். அதன் பின்னர் பிள்ளையை பராமரிப்பதற்காக எனது அக்காவை மறுமணம் செய்து தரும்படி கேட்டார். அவரே என்னை எனது அம்மா வீட்டில் கொண்டுவந்து விட்டார். அடிக்கடி எமது வீட்டுக்கு வந்து தகராறு செய்வார். பிள்ளையை காட்டும் படி பல முறைகளில் கோரிக்கை விடுத்தார். ஆனால் அது உண்மையான பாசமாக தெரியவில்லை. நான் பிள்ளையை அவருக்கு காட்டவில்லை.

தனஞ்சயனுக்கு பயந்து எனது அக்காவுக்கு நாம் இரகசியமான முறையில பதிவுத்திருமணம் செய்து வைத்தோம். சம்பவ தினத்துக்கு முதல் நாள் தான் அக்காவும் அத்தானும் கிளிநொச்சியில் இருந்து எமது வீட்டுக்கு வந்திருந்தார்கள். தனக்கு அக்காவை மறுமணம் செய்து தரவில்லை என்ற காரணத்தால் தான் எமது குடும்பத்தையே அழித்தார். என கண்ணீர் மல்க மன்றில் எதிரியின்மனைவி சாட்சியம் அளித்தார்.

5 ஆம் சாட்சியான தங்கவேல் யசோதரன் சாட்சியமளிக்கையில்

2014.05.04 ஆம் திகதி நள்ளிரவு 12.45 மணியளவில் நாம் படுத்துறங்கிய அறைக்கு பக்கத்து அறையில் இருந்து காப்பாற்றுங்கள் என கூக்குரல் கேட்டது. தனஞ்சயன் வெட்டுறான் என கத்தினார்கள். வெளியே செல்ல வேண்டாம் என எனது மனைவி மதுசா கூறினார். நான் உடனடியாக கதவை திறந்து கதவுக்கு போட்டிருந்த தாள்ப்பாளை எடுத்துக்கொண்டு அந்த அறையை நோக்கி சென்றேன். அப்போது தனஞ்சயன் என்னை நோக்கி வாளால் வெட்டுவதற்கு வந்தார். நான் தடுக்க முற்பட்ட போது எனது கையில் வெட்டு விழுந்தது. நான் நிலைதடுமாறி விட்டேன். அதன் பின்னர் எந்த இடங்களில் வெட்டு விழுந்தது என நினைவில்லை. வெளியில் வந்து எனது மனைவியின் தங்கை என்னை பிடித்து ஆட்டோவில் ஏற்றுவது நினைவிருந்தது. எனது இரண்டு கைகள், நெஞ்சு, முதுகு பகுதிகளில் வெட்டுக் காயம் இருப்பது பின்னர் தான் அறிந்தேன். எனது மனைவிக்கு என்ன நடந்தது என்று தெரியாது. சில நாட்களின் பின்னர் தான் அவர் இறந்து விட்டார் என உணர்ந்தேன் என சாட்சியமளித்தார்.

2 ஆம் சாட்சியான கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில்,

குறித்த சம்பவம் இடம்பெற்று பல மணி நேரங்களின் பின்னர் தான் எனக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிய வந்தது. சம்பவ இடத்துக்கு வந்த போது எனது சகோதரி அருள்நாயகி, மருமகள் மதுசா ஆகியோர் இறந்து கிடந்தார்கள். தர்மிகாவின் குழந்தை மருமகள் மதுசாவின் சடலத்தின் அருகே பயந்தபடி இருந்ததை அவதானித்தேன். சடலங்களை வைத்திய சாலைக்கு கொண்டு சென்றேன். அங்கு சென்ற போது மருமகன் சுபாஸ்கரனும் இறந்த நிலையில் இருந்ததை கண்டேன் என சாட்சியமளித்தார்.

அதே போன்று 3 ஆம் சாட்சியான பொன்னுத்துரை கௌரிகாந்தன் சாட்சியமளிக்கையில் அன்றைய தினம் இரவு காப்பாத்துங்கோ என கூக்குரல் கேட்டது. உடனடியாக ஆட்டோவை எடுத்துக்கொண்டு அந்த வீட்டின் அருகே வந்தேன். தர்மிகாவும் அவரது மைத்துனனும் காயத்துடன் வருவதை கண்டேன். உடனடியாக வைத்திய சாலைக்கு கொண்டு சென்றேன் என சாட்சியமளித்தார். அத்துடன் 6 ஆம் சாட்சியான கணபதிப்பிள்ளை செல்வநாயகம் என்பவரும் சாட்சியமளித்தார்.

மேற்குறித்த வழக்கின் சிவில் சாட்சியங்களின் சாட்சியப்பதிவு நிறைவுற்ற நிலையில் இவ் வழக்குடன் தொடர்புடைய சான்றுப்பொருள அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தில் இருப்பதாகவும் பகுப்பாய்வு அறிக்கையையும் சான்றுப் பொருளையும் நாளை புதன்கிழமை மன்றில் சமர்ப்பித்து சான்றுப்பொருளை அடையாளம் காட்டுவதற்கு மீண்டும் சாட்சிகளை அழைக்க அரச சட்டவாதி மன்றில் அனுமதி கோரியிருந்தார். அதற்கு நீதிபதி அனுமதி வழங்கியதுடன் தொடர் விசாரணை இன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. அத்துடன எதிரியை விளக்கமறியில் வைக்க நீதிபதி உத்தரவிட்டிருந்தார். (செ-9)

## கடனுக்கு பதிலாக ...

கடன் பெற்று நாட்டின் கடனை திருப்பிச் செலுத்த முடியாது எனவும், கடனுக்குப் பதிலாக முதலீடுகளை வரவழைக்க வேண்டுமெனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

ஆசிய பசுபிக் வலயத்தின் சிறந்த நிதி அமைச்சருக்கான விருது ரவி கருணாநாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் த பேங்கர் சஞ்சிகையின் ஆசிய பசுபிக் வலயத்தின் 2017ஆம் ஆண்டிற்கான சிறந்த நிதி அமைச்சராக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவு செய்யப்பட்டார்.

புதிய பொருளாதார புரட்சி ஒன்றிற்காக இலங்கை மக்கள் மத்தியில் உள ரீதியிலான மாற்றுச் சிந்தனைகளை தோற்றுவிக்கும் வகையிலான பொருளாதார கொள்கையினை நடைமுறைப் படுத்தியமையால் இந்த விருது நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்நிலையில் விருது பெற்ற அமைச்சரை பாராட்டும் வகையில் நிதியமைச்சில் நடைபெற்ற விசேட நிகழ்வில் அமைச்சர் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

கடன் பெற்று கடனை செலுத்த முடியாது. கடனுக்குப் பதிலாக முதலீடுகளை வரவழைக்க வேண்டும். நாட்டை புதிய பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும். 1948ஆண்டு சுதந்திரம் கிடைத்த போது ஜப்பான் மற்றும் எமது நாட்டின் பொருளாதாரம் ஒரே நிலையிலேயே காணப்பட்டது. எனினும் ஜப்பானின் தனிநபர் வருமானம் 55,000 அமெரிக்க டொலர்களை தாண்டியுள்ளது எனினும் எமது நாட்டின் தனிநபர் வருமானம் 4,000 டொலர்களை தாண்டவில்லை.

எம்மைவிடவும் பின்தங்கிய நிலையில் இருந்த கொரியா, தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற நாடுகள் எம்மைவிடவும் முன்நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன. ஆகவே தவறை திருத்திக் கொள்ள வேண்டும். அது தொடர்பில் சிந்திக்க வேண்டும். சர்வதேச நாடுகளுடனான கொடுக்கல் வாங்கலில் காணப்படும் பிரச்சினைகளை அறிந்துகொள்ள வேண்டும்.

புதிதாக சிந்திக்க வேண்டும். நாங்கள் நாட்டை பொறுப்பேற்கையில் கடன் சுமை காணப்பட்டது. எங்களது வருமானம் கடனை திருப்பிச் செலுத்தவே போதுமானதாக இருந்தது. பொதுமக்களின் ஒற்றுமை மற்றும் உதவியின் ஊடாக நாட்டின் கடன் சுமையை குறைக்க எம்மால் முடிந்தது. தற்போது வருமானம் அதிகரித்துள்ளது. எமது எதிர்காலம் மிகச் சிறப்பாக அமையுமென நாங்கள் நினைக்கின்றோம்.

செலவழிப்பதில் பிரயோசனமிருக்க வேண்டும். அரசாங்கம் பெற்றுக்கொள்ளக்கூய வருமானம் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். அரசாங்கம் விதிக்கும் வரியானது மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைய வேண்டும். கடனை செலுத்துவதற்கு குறுகிய காலத்தில் இலாபத்தை பெற்றுக்கொள்ள எதிர்ப்பார்க்கின்றோம். காலம் செல்வதற்கு முன்னர் வரிச்சுமையை குறைத்து அந்த இலாபத்தை மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றார். (செ-11)

## ரூ. 9 கோடியே ...

டத்தில் கடமையாற்றும் 700 அரச உத்தி யோகத்தர்களுக்கு தலா 1/4 ஏக்கர் காணி வழங்கப்பட்டு அதில் வீடுகளை அமைக்குமாறு கூறப்பட்டுள்ளது.

ஆயினும் இதுவரை, அதில் 65 குடும்பங்களே வீடுகளை அமைத்து குடியேறியுள்ளனர்.

ஏனைய காணிகள் பற்றைக்காடாகவே காணப்படுகின்றது.

இந் நிலையில் கடந்த 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30, மணியளவில் இக் குடியிருப்பு மக்கள் பல்வேறு இடர்பாடுகளை முன்வைத்து வீதியில் இறங்கி கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதனையடுத்து நேற்று திங்கட்கிழமை குடியிருப்புக்கு சென்ற தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட பிரிவினர் குடியிருப்பு பகுதிகளைச் சுற்றி பார்வையிட்டு குறைபாடுகளை ஆராய்ந்துள்ளார்கள்.

இதன் போது குடியிருப்பு காணிகளைப் பெற்றுள்ள 700 குடும்பங்களில் 190 குடும்பங்கள் சிற்றூழியர்களது குடும்பங்களாகவுள்ளமை இனம் காணப்பட்டுள்ளது.

இதையடுத்து தேசிய வீடமைப்பு அதிகார சபையின் செமட்டசெவண திட்டத்தின் ஊடாக தலா 05, இலட்சம் ரூபா வீதம் 190 குடும்பங்களும் 09 கோடியே 50 இலட்சம் ரூபா பணத்தை புதிய வீடுகளை அமைப்பதற்கு வழங்கவுள்ளனர்.

இந்த 190 குடும்பங்களும் எதிர் வரும் ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது காணிகளை துப்புரவு செய்து விட்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-15)

## பிரபாகரன் கால ...

ட்டுவிழாவில் விருந்தினராக கலந்து கொண்டபோதே மேற்கண்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

எமது தமிழினத்தின் அரசியல் வரலாற்றில் பெண்களுக்கு தனியான ஒரு இடம் இருக்கிறது. பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவர்கள் அரசியலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

சிலர் வெற்றி பெற்றிருக்கின்றார்கள், பலர் தோல்வியுற்று இருக்கிறார்கள். ஆனால் விடுதலைப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் பெண்கள் பல்பரிமாணத்துறைகளில் வளர்ச்சி பெற்றிருந்தார்கள்.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் எமது பெண்களே. அதற்குப் பின்னர் பெண்கள் அரசியலில் ஈடுபடவே அஞ்சினார்கள்.

கடந்த முறை நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலிலும் பெண்களை பங்கு கொள்ள முயற்சித்தோம். யாரும் முன் வரவில்லை தற்போது அரசியலில் ஈடுபட பெண்கள் எத்தனிப்பது மிகவும் ஆரோக்கியமானது.

எங்களுடைய கட்சியிலும் பெணகள் அணி உண்டு. நூற்றுக் கணக்கானவர்கள் அதில் அங்கத்தவராக உள்ளார்கள். நாங்கள் 25 வீதம் என்று இல்லாது அதிலும் அதிகமாக பெண்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவோம்.

ஆனால் எங்களுடைய கட்சி சாதாரண கட்சியல்ல. அது விடுதலைக்கான பயணத்தில் ஈடுபட்டு இருக்கின்ற கொள்கை இலட்சியம் என்பவற்றை வென்றெடுப்பதற்கான அரசியல் இயக்கம்.

2009வரை விடுதலைப்புலிகள் சுமந்த பணிகளை எங்களுடைய கட்சி இலட்சியம் வெல்லும் வரை ஜனநாயகப் பாதையில் போராடும்.

நீங்களும் எங்களுடைய கட்சியல் இணைந்து கொள்ளுங்கள். வரலாற்றில் அரசியலில் ஈடுபட்டிருந்த பெண் தலைவர்களால் எத்தனை பெண்களை மேலதிகமாக அரசியலுக்கு கொண்டுவர முடிந்தது.

ஆனால் தலைவர் பிரபாகரனால் பெண்களை அரசியல், படையியல் செயற்பாடுகள் என சகல துறைகளிலும் வளப்படுத்திக் கொண்டார் என சிறீதரன் எம்.பி மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சாந்தி சிறிஸ்கந்தராசா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஹெலி இலங்கையில் அறிமுகம்



(கொழும்பு)

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தரமான மற்றும் வசதியான ஹெலிகொப்டர்களை இலங்கை உட்பட பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது.

அண்டைய நாடுகளில் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் இந்தியாவின் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்வதற்காக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் வியட்நாம், மியன்மார், இந்தோனேஷியா மற்றும் இலங்கையுடன் கலந்துரையாடல் மேற்கொண்டுள்ளதாக இந்தியாவின் எச்.ஏ.எல்.நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ-7)


## தவறிவிட்டது

வீரசிங்கம் விஜிதரன் புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறை எனும் விலாசத்தையுடைய எனது வாகன சாரதி அனுமதிப்பத்திரம், இரண்டு வாகனங்களுக்குரிய காப்புறுதி மற்றும் வரிப்பத்திரங்கள், ATM காட் அடங்கிய பேர்ஸ் 21.03.2017 செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் நல்லூர் அரசடிக்கும் யாழ். நகருக்குமிடையில் தவறிவிட்டது.

தயவு செய்து கண்டெடுத்தவர்கள் "லிங்கம் கூல் பார்" நல்லூர் அல்லது H/P: 077 408 6781 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (8426)


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் (ஓய்வுபெற்ற இலிகிதர்– CTB)



மாவிட்டபுரம் மதவடியைப் பிறப் பிடமாகவும் வவுணாவத்தை, துர்க்காபுரம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை – சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் – சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச சபை), சிவரூபன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), கௌரி (ஆசிரியை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), பாலரூபன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தகப்பனும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் இரத்தினம் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சாவித்திரி மற்றும் ராணி, காலஞ்சென்ற கெங்காதேவி மற்றும் சிவலிங்கம் (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும், தினேஷ் (கள உத்தியோகத்தர், SOND நிறுவனம்), அனுசா (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), செந்தூரன் (மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தன்யஶ்ரீ, துளசிகன், தரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (29.03.2017) நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வவுணாவத்தை, துர்க்காபுரம், தெல்லிப்பழை. (8425) தகவல் :- குடும்பத்தினர் (021 205 9850)


## கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)- கிளிநொச்சி அரிசியாலை வாடகைக்கு வழங்கல்

கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான உரிய அனுமதிப் பத்திரங்களுடன் உருத்திரபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள நவீன இயந்திரங்களைக் கொண்ட அரிசியாலை மாத வாடகை அடிப் படையில் குத்தகைக்கு வழங்குவதற்கான மூடிய கேள்விக் கூறுகள் கோரப்படுகின்றன.

❖ நாள் ஒன்றிற்கு 12000 கிலோ நெல்லினை அரிசியாக உற்பத்தி செய்யக்கூடிய வகையிலான நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

❖ இவ் அரிசியாலையினை வேலை நாட்களில் சங்கத் தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பார்வையிட முடியும்.


❖ விண்ணப்பிக்க விரும்புவோர் மூடிய கேள்விக்கூறுகளை 20.04.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் தலைவர், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கனகபுரம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் அரிசியாலை வாடகைக்கான கேள்விக்கூறு எனக் குறிப்பிடவும்.

❖ கேள்விக்கூறுகளுக்கான விண்ணப்பப்படிவத்தினை சங்கத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்வதுடன் விண்ணப்பிப்பவர்கள் பெயர்,முகவரி, தொ.பே.இலக்கம் என்பவற்றை தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

❖ மேலதிக விபரங்களுக்கு 021 228 5752 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர், கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கனகபுரம், கிளிநொச்சி.** (C-7925)


## 10 ஆம் வருட நினைவலைகள்



திருமதி
**லியோணா யூலியஸ்ராணி பசில்ராஜ்குமார்**

ஆசிரியை :-
யா/புற்றளை மகா வித்தியாலயம், புலோலி.
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி.

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
ஓட்டத்தை முடித்துவிட்டேன்.
விசுவாசத்தை காத்துக்கொண்டேன்"
(2.தீமோ.4:17)

28.03.2017

(8404)

பத்து அகவைகள்
பறந்தோடியும் நீங்கள்
எம்முடன் வாழ்ந்த நாட்களை
நாம் இன்னும்
மறக்கவில்லை, என்றும்
உங்கள் நினைவுகள்
எம்முடன் வாழும்...

உங்கள் நினைவுகளுடன்:
கணவர் – பசில்ராஜ்குமார், மகன் – பசில் பியன்ரோ,
அம்மா, அண்ணன் மற்றும் குடும்பத்தினர்.

சென்.அன்ரனிஸ் வீதி, பருத்தித்துறை.

# இராசி பலன்

**மீனம்:** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், வரவு வந்தாலும் அதற்கேற்ப செலவுகள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் கைகூடும் நாள்.

**மேடம்:** தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், கொடுக்கல்- வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**இடபம்:** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வீட்டை அலங்கரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

| | | | |
|---|---|---|---|
| சூரி,புத சந்,சுக் | செவ் | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூசம், உத்தரம் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**இராசி பலன்**

28.03.2017
(பங்குனி 15, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு
அமாவாசை காலை 9.00மணிவரை
உத்திரட்டாதி பிற்பகல் 2.19 மணிவரை
சுபநேரம் 10.44-12.14 மணிவரை
இராகுகாலம் 3.14-4.44 மணிவரை
குழந்தைவேற்சுவாமி குருபூசை

வளவன்

**கடகம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், உடல் நலம் சீராகும், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**மகரம்:** சகோதர வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேர லாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்வு அவசியம், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது.

**தனுசு:** தொழில் நலனில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** ஒளிமயமான எதிர்காலத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**துலாம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், போட்டிகளைச் சமாளித்து வெற்றி காண்பீர்கள், பலரும் உங்களுக்கு உதவ முன்வரலாம், ஆரோக்கியமான நாள்.

**கன்னி:** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், விரும்பிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

# கடற்படை நன்னீர் எடுப்பதை தடுத்து நிறுத்த வேண்டும்

## சந்திரிகாவிடம் பொன்னாலை மக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

கடற்படையினர் பொன்னாலையிலிருந்து நன்னீர் எடுத்துச் செல்வதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கக்கோரி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் பொன்னாலை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் பொன்னாலை கடற்கரையில் அமைக்கப்படவுள்ள உவர்நீர்த் தடுப்பணைக்கான வேலைகளை அந்த அலுவலகத்தின் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தார். இதன்போது பொன்னாலை மற்றும் கல்விளானில் உள்ள அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக பொன்னாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் மக்கள் சார்பில் கொடுக்கப்பட்ட மகஜரிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது பிரதேசம் அண்மையிலேயே மீள்குடியேற்றப்பட்ட இடம் என்பதால் அங்கு வீடு அற்றவர்களுக்கு வீட்டுத்திட்டங்களை வழங்கி, வீதிகள், குடிதண்ணீர்ப் பிரச்சினை போன்ற உள்ளகக் கட்டமைப்புக்களை சீராக்கவேண்டிய தேவைகள் அதிகம் உள்ளன.

சுழிபுரம் சம்பில்துறையில் உள்ள கடற்படை முகாமுக்கு பொன்னாலையில் இருந்து தினமும் 40 ஆயிரம் லீற்றர் தொடக்கம் 50 ஆயிரம் லீற்றர் வரையான தண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடற்படையினர் தினமும் நன்னீரை எடுத்துச் சென்றுகொண்டிருப்பதால் அந்தக் கிணறுகளில் உள்ள நன்னீரின் தன்மையில் மாற்றும் ஏற்பட்டுள்ளது என்றும் அடுத்துவரும் சில வருடங்களில் நன்னீர் உவர்நீராக மாறும் நிலை காணப்படுகிறது.


பொன்னாலையில் உள்ள மக்களுக்கு தினமும் காலை ஒரு மணித்தியாலம் மட்டும் நன்னீர் விநியோகிக்கப்பட்டு கொண்டிருக்கும் நிலையில், கடற்படையினர் பெருமளவு நீரை எடுத்துச் செல்வது எந்த வகையில் நியாயம். பொன்னாலையில் நன்னீர் வளம் இல்லாமற்போனால் கடற்படையினர் கொழும்பில் இருந்து கப்பல்களிலோ விமானம் மூலமாகவோ நன்னீரைக் கொண்டுவந்து பயன்படுத்த முடியும். ஆனால் சாதாரண மக்கள் நன்னீருக்காக ஆங்காங்கே அலையவேண்டிய நிலை ஏற்படும்.

மேலும், பொன்னாலை, கல்விளான் மக்கள் மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் அதை நிவர்த்தி செய்வதற்காக அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டியுள்ளது.

அத்துடன், பொன்னாலையில் உள்ள நூற்றுக்கணக்கான கடற்றொழிலாளர்கள் வலைகளை உலர்த்துவதற்கான இளைப்பாற்று மண்டபம் ஒன்றை அமைத்துத்தர வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. யாழ்.காரைநகர் சேவையில் ஈடுபடுகின்ற இ.போ.ச. தனியார் பேருந்துகள் எவையும் பொன்னாலை. கல்விளான் ஊடாக சேவையில் ஈடுபடுவதில்லை எனவும் இதனால் மாணவர்களும் மக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என மேலும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மகஜரைப் பெற்றுக்கொண்ட சந்திரிகா இந்த விடயங்கள் தொடர்பாக விரைவில் சாதகமான பதில் வழங்குவதாக தெரிவித்தார். (இ-9)





இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய யாழ். சாலையின் புதிய முகாமையாளராக அபுல்கு தாமூசீம் நேற்று திங்கட்கிழமை பதவியேற்றார். இந்நிகழ்வில் தமிழ்த்தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம், ஜாதிக சேவக சங்கம், ஸ்ரீலங்கா சுதந்திர போக்குவரத்து ஊழியர் சங்கம் ஆகிய மூன்றும் தொழிற் சங்கத்தலைவர்கள், வடபிராந்திய பிரதான முகாமையாளர் (செயலாற்று), பிரதான முகாமையாளர் (பொறி), ஊழியர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

## தொண்டராசிரியர்களுக்கு அவசர கலந்துரையாடல்

யாழ். மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தொண்டராசிரியர் சங்கத்தலைவர் அறிவித்துள்ளார். (இ-3)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

சுன்னாகம் தாளையடி அருள்மிகு ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் 30 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14 தினங்கள் மஹோற்சவம் இடம்பெறவுள்ளது. இதில் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை இரவு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ-3)

## மணல் பகிரங்க ஏலவிற்பனை

யாழ். நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு தொகுதி மணல் 11.04.2017ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த மணலை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஏலத்தில் மணலை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும். அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் மணலை அன்றைய தினம் உடனடியாகவே வளாகத்தில் இருந்து அகற்ற வேண்டும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

## முன்பள்ளியின் விளையாட்டு விழா

தம்பசிட்டி சதாவதானி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சதாவதானி முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

திருமதி.குணரூபன் பவானி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சீ.தில்லைநாதன், புலோலி மத்தி ஜே/410 கிராம அலுவலர் தி.ரங்க நாதன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சு.பாலலோஜினி, கௌரவ விருந்தினர்களாக மு.தர்மலிங்கம், செ.விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3,60)

## யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதிக்கு நேற்று கௌரவம்



யாழ்.மாவட்டத்தில் சமூகத்துடன் ஒன்றிணைந்து அதிகளவான அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டமையை பாராட்டி யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க நேற்றைய தினம் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகத்தினால் கௌரவிக்கப்பட்டார்.

யாழ்.பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க அண்மையில் இலங்கை இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் யாழ். மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் பிரியாவிடை நிகழ்வு நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ்.படைகளின் கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய காலத்தில் யாழ்.மாவட்டச்செயலகத்துடன் ஒத்துழைத்தும் சமூகத்துடன் ஒன்றிணைந்தும் அதிகளவான பல்வேறு அபிவிருத்தி பணிகளை யாழ்.மாவட்டத்தில் மேற்கொண்டமையை பாராட்டி யாழ் . மாவட்ட அரச அதிபரால் கௌரவிக்கப்பட்டு நினைவுப் பரிசிலும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட செயலக அதிகாரிகள், படைத்தரப்பு அதிகாரிகள் கலந்து கொண்டனர். (இ-9)

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்க புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் கடந்த 24 ஆம் திகதி மருதனார் மடத்தடியில் அமைந்துள்ள யாழ்.விவசாயக் கல்லூரியில் நடைபெற்றது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர் என்.இன்பம் தலைமையில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடகிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசனின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்ட இயக்க தலைவராக இரத்தினசிங்கம் முரளிதரன், செயலாளராக இரத்தினசிங்கம் இரத்தினராசா, பொருளாளராக எஸ்.கயந்தினி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு 11 பேர் கொண்ட நிர்வாக குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (இ-9)

12

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?


இரண்டு தேசியப் பட்டியல் எம்.பி.பதவியில் ஒன்றை சுரேஷ் பிரேமச்சந்திரனுக்குக் கொடுக்க வேண்டும் என்ற கருத்து கூட்டமைப்பிற்குள் நிலவியதாயினும் சுரேஷ் பிரேமச்சந்திரனை எப்படியும் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் எனத் திட்டமிட்ட கூட்டமைப்பின் தலைமை தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை சுரேஷ் பிரேமச்சந்திரனுக்குக் கொடுக்குமென எதிர்பார்க்க முடியாது.

இந்நிலையில் பெண் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருப்பது நல்லதல்ல. ஆகையால் தேசியப் பட்டியலில் கிடைத்த ஒரு ஆசனத்தை முல்லைத்தீவைச் சேர்ந்த திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசாவுக்கு வழங்குவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

அப்படியானால் இரண்டாவதாக இருக்கும் எம்.பி. பதவி யாருக்கு என்ற கேள்வி எழுந்தபோது அது துரைரட்ணசிங்கத்திற்குக் கொடுக்க வேண்டும். எனக்கு வயது போய் விட்டது. இனி அடிக்கடி திருகோணமலைக்குப் போய்வர முடியாது. ஆகையால் அந்தப் பதவியை துரைரட்ணசிங்கத்திற்கு வழங்கவேண்டும் என்று சம்பந்தர் கூற,

அதனை மறுத்துரைக்க யாருமின்றி துரைரட்ணசிங்கத்திற்கு எம்.பி. பதவி கிடைத்தது.

ஆக, இரா.சம்பந்தருக்கு வயது போனதால் இரண்டு எம்.பி. பதவி அவருக்குத் தேவைப் பட்டுள்ளது என்று கூறுவதில் தவறில்லை. தவிர, தேர்தலில் இரண்டு பெண் வேட்பாளர்களை நிறுத்திய கூட்டமைப்பிற்கு அவர்கள் இருவரும் தோல்வியை தழுவிய நிலையில், தேசியப் பட்டியலில் கிடைத்த இரண்டு ஆசனங்களில் ஒன்றையேனும் பெண் ஒருவருக்கு கொடுக்க வேண்டும் என்ற கருத்து எழுந்தது. இக் கருத்தின் அடிப்படையில் தமக்கு ஆதரவானவருக்கு அந்த எம்.பி.பதவியைக் கொடுப்பதே பொருத்தம் என கூட்டமைப்பின் தலைமை முடிபு செய்தது.



இங்குதான் தமிழர்களின் நலன் என்பதற்கு அப்பால் தங்களின் வார்த்தைக்குக் கட்டுப்படக் கூடியவர்களுக்கு தேசியப் பட்டியலில் இடம் கொடுக்க வேண்டுமென கூட்டமைப்பின் தலைமை நினைத்தது. அந்த நினைப்பை கனகச்சிதமாக நிறை வேற்றியது.

இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கக்கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கையெழுத்திட்டு ஐ.நாவுக்கு மகஜர் அனுப்பி வைத்ததாக ஒரு தகவல். இதில் வன்னி எம்.பி. திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவும் கையெழுத்திட்டார் எனச் செய்தி வந்தபோது அவர் பட்டபாடு கொஞ்சமல்ல. நான் கையொப்பம் வைக்கவேயில்லை என்று அவர் கத்திக் குழறினார். கையெழுத்து வைத்தால் சம்பந்தரதும் சுமந்திரனதும் கோபத்திற்கு ஆளாக வேண்டிவரும் என்ற பயத்திலேயே சாந்தி எம்.பி. கத்திக் குழறி அந்தக் குற்றச்சாட்டில் இருந்து தன்னை நிரபராதியாகக் காட்டினார்.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த இறுதி யுத்தத்தை- இன அழிப்பைத் தாங்கிக் கொண்ட முல்லைத்தீவு மண்ணில் இருந்து பாராளுமன்றம் சென்ற ஒருவர் கால அவகாசம் வழங்கக்கூடாது என்று துணிந்து சொல்ல முடியாமல் தலையில் அடித்து ஐயா நான் கையொப்பம் இடவில்லை என்று புலம்பினார் என்றால் அந்த எம்.பி.பதவியை வெற்றிடமாக வைத்திருந்தால் மிகவும் நல்லதாக இருந்திருக்கும் என்று நினைப்பதில் நியாயம் இருக்கவே செய்யும்.

எது எப்படியாயினும் தேசியப் பட்டியல் எம்.பிக்கள் இருவரும் கூட்டமைப்பின் தலைமை எதைச் சொல்கிறதோ அதைச் செய்வதற்கு எப்போதும் தயாராக இருக்கின்ற னர் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆக, கூட்டமைப்பு எவ்வாறாகத் திட்டம் தீட்டியதோ அந்தத் திட்டம் மிகக் கச்சிதமாக நிறைவேறியது. இப்படித்தான் துரியோதனின் திட்டங்களும் நிறைவேறிய தாம். ஏன் அவ்வாறு நிறைவேறியது எனில்,

துரியோதனனின் கர்வம் தலைக்கேறி அதர்ம காரியங்களைச் செய்தான். எனவே அவனுக்கு அழிவை ஏற்படுத்தி தர்மத்தை நிலைநாட்ட வேண்டிய தேவை கண்ணபரமாத்மாவுக்கு ஏற்பட்டபோது துரியோதனன் செய்த அத்தனை அநியாயங்களும் சர்வசாதாரணமாக நிறைவேறியதாம். அவ்வாறு நிறைவேறினால் தானே கௌரவர் சேனை அழியும் என்று அறம் உரைப்போர் கூறுவர்.

அப்படியானால் கூட்டமைப்பின் தலைமையின் சதித்திட்டங்கள் ஏன் கனகச்சிதமாக நிறைவேறின என்றால், தமிழ்மக்கள் துன்பப்பட வேண்டும் என்பது விதியாயிற்று அல்லவா!. அதனால்தான் யாரை வெளியேற்ற வேண்டும், யாரை உள்ளொடுக்க வேண்டுமென்றெல்லாம் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை கருதியதோ அவை அனைத்தும் மிக எளிமையாக நிறைவேறிற்று.

இருந்தும் தமிழர் செய்த ஒரு பூர்வ புண்ணிய பயனாக ஓர் இடத்தில் மட்டும் கூட்டமைப்பின் தலைமையின் திட்டம் அதற்குச் சாதகமற்றுப் போயிற்று.

ஆம், வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராக ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை சம்பந்தர் நிறுத்தினார்.

வடக்கு மாகாண சபையின் முதன்மை வேட்பாளராகத் தான் போட்டியிட வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்த மாவை. சேனாதிராஜாவுக்கு சம்பந்தரின் முடிவு மிகப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. சம்பந்தரின் முயற்சியைக் குழப்பி அந்த இடத்தை எப் பாடுபட்டாவது பிடித்து விட வேண்டும் என மாவை. சேனாதிராஜா முயற்சித்தாராயினும் அது நடக்கவில்லை. வடக்கின் முதன்மை வேட்பாளர் நீதியரசர் சி.வி.விக் னேஸ்வரன் தான் என்பதில் சம்பந்தர் மிகவும் உறுதியாக இருந்தார்.

நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களை சம்பந்தரே தேர்தலுக்கு அழைத்து வந்தாராயினும் அதுபற்றி எதுவும் அலட்டிக்கொள்ளாத மாவை. சேனாதிராஜா விக்னேஸ்வரன் மீது ஆத்திரம் கொண்டார்.

எய்தவன் இருக்க அம்பை நோகின்ற கலாசாரம் மாவையிடம் வேலை செய்தது. உண்மையில் மாவை. சேனாதிராஜாவின் கோபம் சம்பந்தர் மீது இருந்திருக்க வேண்டும். தன்னை நம்ப வைத்து சம்பந்தர் ஏமாற்றி விட்டார் என்ற குற்றச்சாட்டுக்காகவன்றி, எனக்குத் தராமல் விக்னேஸ்வரன் அவர்களுக்கு முதன்மை வேட்பாளர் பதவியைக் கொடுத்தது என்மீது நம்பிக்கையின்மையால் அன்றோ! இது முறையோ! நீதியோ! என்று சம்பந்தரை அதட்ட வேண்டிய மாவை. அதைச் செய்யாமல் ஏதுமறியாத சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள்மீது தீராக் கோபம் கொண்டார்.

கூட்டமைப்பில் இருக்கக் கூடிய அனைத்துக் கட்சிகளும் கேட்டால்-ஏற்றால் நான் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட முடியும் என்றவர் விக்னேஸ்வரன்.

அதாவது கூட்டமைப்பில் இருக்கக்கூடிய ஒரு கட்சி எதிர்த்தாலும் தேர்தலுக்கு வரமாட்டேன் என்பது நீதியரசர் விக்னேஸ்வரனின் முடிவு.

நிலைமை இதுவாக இருந்தும் மாவை. சேனாதிராஜா அவர்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் பகை கொண்டது நியாய மற்றதே.

சி.வி.விக்னேஸ்வரனின் வீடு சென்று அவரை சம்பந்தர் அழைத்துவர விக்னேஸ்வரன் அவர்களே பொருத்த மான வேட்பாளர் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வழி மொழிய வடக்கு மகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராக நீதியரசர் விக்னேஸ்வரன் களமிறங்கினார்.



(வளரும்)

-புருசோத்தமன்-

# சுழற்சி முறையிலான உணவு ஒறுப்பு போராட்டம் வவுனியாவில் 32-வது நாளாகவும் தொடர்கிறது



(மல்லாவி)

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு தீர்வு கிடைக்கும் வரையில் முன்னெடுத்திருக்கும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை 32 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தின் போது மூன்று கோரிக்கைகளை போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகள் முன் வைத்துள்ளனர்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரால் வழங்கப்பட்ட உறுதி மொழிக்கு அமைவாக கொழும்பில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாத நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒன்றிணைந்து மீண்டும் தமது போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

ஜனாதிபதி அல்லது பிரதமர் அல்லது எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரில் ஒருவர் நேரில் வந்து சாதகமான பதில் வழங்கும் பட்சத்தில் மட்டுமே தமது போராட்டத்தை நிறுத்துவதாகவும், அதுவரை தமது உறவுகளைத் தேடிய போராட்டம் தொடரும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர். (2-5-15)

# 20 ஆவது நாளாகவும் முல்லையில் தீர்வின்றி போராட்டம் தொடர்கின்றது



முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் போராட்டம் நேற்று 20 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவுள்ள வீதியின் அருகாமையில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (2-5-15)

# யானைகளின் அட்டகாசத்தினால் வீடுகள் சேதம்; ஒருவர் காயம்



(குருமன்காடு)

வவுனியா கள்ளிக்குள கிராமத்தினுள் உள்நுழைந்த யானைகள் வீடுகளை சேதப்படுத்தியதுடன் யானையொன்று துரத்தியதில் ஒருவர் காயம் அடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,


கள்ளிக்குளம் கிராமத்தில் தற்காலிகமாக வீடுகள் அமைத்து தங்கி வாழ்ந்த மக்களின் வீடுகளையே யானைகள் சேதப்படுத்தியுள்ளன.

இதேவேளை அக்கிராமத்தைச் சேர்ந்த இளைஞனொருவரை யானை துரத்திய போது பிரஸ்தாப இளைஞன் ஓடிச்சென்று கிணறொன்றினுள் குதித்த நிலையில் அவர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் அப்பகுதியில் மக்களின் காணிகளில் நின்ற பயன்தரு மரங்களையும் யானைகள் சேதப்படுத்தியுள்ளன. (2-5-15-250)

## 5 ஆவது நாள்

# முள்ளிக்குளம் கிராம மக்களின் போராட்டம் கண்காணிப்பின் மத்தியிலும் முன்னெடுப்பு



(மல்லாவி)

மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட முசலி பிரதேசச் செயலக பிரிவில் உள்ள முள்ளிக்குளம் கிராம மக்கள் நேற்று திங்கட்கிழமை ஐந்தாவது நாளாகவும் கடற்படையினரின் தீவிர கண்காணிப்பின் மத்தியிலும் தமது கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது கிராமத்தை விடுவிக்குமாறு வலியுறுத்தி கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை தொடக்கம்கவனயீர்ப்பு போராட்டத்தை மக்கள் முள்ளிக்குளம் கிராம நுழைவாயிலின் வீதி ஓரத்தில் உள்ள மரநிழலில் ஆரம்பித்தனர்.

முள்ளிக்குளம் மக்களின் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் அருட்தந்தையர்கள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தக சங்கத்தினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபையின் உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், இன, மத, மொழி வேறுபாடுகளின்றி முஸ்லிம் மக்கள் எனப் பலரும் இணைந்து கொண்டு ஆதரவு வழங்கியுள்ளார்கள்.

தங்களின் இந்த அகிம்சை ரீதியிலான கவனயீர்ப்பு போராட்டத்திற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தவறினால் தங்கள் போராட்டத்தின் வடிவம் மாறும் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த முள்ளிக்குளம் பகுதியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லத்திற்கு சொந்தமான 53 ஏக்கர் காணியையும்ஸ்ரீலங்கா கடற்படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். (2-5-15)

வன்னி வலம்

# சுயசக்தி கடன் விண்ணப்பத்தை கையளிக்க மக்கள் முண்டியடிப்பு



அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 10 இலட்சம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்கான சுயசக்தி கடன் விண்ணப்பத்தை கையளிப்பதற்காக வவுனியா மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் மக்கள் நேற்றுக் காலை முதல் முண்டியடித்துக் கொண்டு நின்றார்கள்.


பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழான தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் ஊடாக நாடு முழுவதும் 10 இலட்சம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்குடன் சுயசக்தி என்னும் பெயரில் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இளைஞர், யுவதிகளின் தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் முகமாக சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் வரை குறைந்த வட்டி வீதத்தில் வங்கிகள் மூலம் அவர்களது தொழில் தகைமை மற்றும் தொழில் நடவடிக்கைக்கு ஏற்ப கடன் வழங்க குறித்த அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி இதற்கு விண்ணப்பிப்பதற்காக இளைஞர்கள், யுவதிகள், தாய்மார், முதியவர்கள் எனப் பலரும் மாவட்ட செயலகத்தில் உள்ள அலுவலகத்திலும், வவுனியா பிரதேச செயலகத்திலும் விண்ணப்பங்களை பெறுவதற்கும் அதனை சமர்ப்பிப்பதற்கும் முண்டியடித்து வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக விண்ணப்பங்களைப் பெறும் மற்றும் வழங்கும் நடவடிக்கைகள் நடைபெற்று வரும் நிலையில் இதுவரை வவுனியா மாவட்டத்தில் ஐந்தாயிரம் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்ட நிலையில் ஆயிரத்து 500 விண்ணப்பங்கள் வரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. (2-5-250)

# சாதகமான பதில் கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடமாட்டோம்



கிளிநொச்சி பன்னங்கண்டி மக்களின் போராட்டம் எவ்வித தீர்வுகளும் எட்டப்படாத நிலையில் நேற்று 6 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தர கோரி ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சிவா பசுபதி என்பவரிற்கு உரித்தான 33 ஏக்கர் காணியில் சுமார் 18 ஏக்கர் காணியில் 65 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அதே போன்று சரஸ்வரி என்பவருக்கு உரித்தான காணி எனப்படும் சரஸ்வதி கமத்தில் 47 ஏக்கர் காணியில் சுமார் 30 ஏக்கரில் இவ்வாறு மக்கள் வாழ்ந்து வரும் அதே வேளை ஜொனி குடியிருப்பு என அழைக்கப்படும் கிராமத்தில் 16 குடும்பங்கள் வாழ்கின்றனர். குறித்த காணிகள் ஒதுக்கீட்டு காணிகளாகவும் காணப்படுகின்றன.

இதில் கடந்த 4 ஆம் திகதி முதல் சிவா பசுபதி கம மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு 15 ஆம் நாள் காணி உரிமையாளரின் சம்மதத்துடன் வீட்டுத்திட்டம் வழங்கப்படும் என அரசாங்க அதிபர் தெரிவித்ததை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் மற்றைய இரு கிராமங்களையும் சேர்ந்த மக்கள் கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-5-15)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை கிளிநொச்சியில் சந்தித்தார் ஆனந்தசங்கரி

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் நேற்று 36 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. கடந்த மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் எவ்வித முடிவுகளுமின்றி தொடர்கின்றது.






நேற்று தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை சந்தித்து கலந் துரையாடி ஆதரவு வழங்கினார். (2-5-15-312)

# வட்டக்கச்சி விவசாயப் பண்ணையிலுள்ள இராணுவத்தை வெளியேறக்கோரி போராட்டம்

(மல்லாவி)



கிளிநொச்சி வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் முகாம் அமைத்துள்ள இராணுவத்தினரை வெளியேற காணியை கையளிக்க கோரி நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. வட்டக்கச்சி விவசாயப்பண்ணை முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம், மாவட்ட செயலகம் வரை சென்றடைந்து ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டவர்களுக்கு மகஜர்கள் கிளிநொச்சிமாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டன. குறித்த போராட்டம் கிளிநொச்சி மாவட்ட விவசாய சம்மேளனத்தினால் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், விவசாயிகள், சிவில் அமைப்புக்கள் என பெருமளவானோர் பங்கு கொண்டிருந்தனர். (2-5-15-312)






# திருவூர்வலம்

கிளிநொச்சி இரணைமடு திருவருள் மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயிலின் 54 ஆவது வருடாந்த திருவூர்வலம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை நிறைவடையவுள்ளது.

இத்திருவூர்வலமானது அம்பிகை வில்சன் வீதி இரத்தினபுரம், திருவையாறு 1ஆம் 2ஆம் 3 ஆம் பகுதிகள், சாந்தபுரம், இந்துபுரம், திருமுருகண்டி, கனகாம்பிகைக்குளம், ஆனந்தபுரம், உதயநகர், கிளி- அங்காடி கனகபுரம், ஜெயந்திநகர், கணேசபுரம், உருத்திரபுரம் 7ஆம் 8ஆம் வாய்க்கால், குஞ்சுப்பரந்தன், பெரியபரந்தன் 5ஆம் வாய்க்கால், கரடிப்போக்கு, கிளிநொச்சி நகர் 3ஆம் வாய்க்கால், முரசுமோட்டை, பழையகமம், பன்னம்கண்டி, சிவிக்சென்ரர் வட்டக்கச்சி பிரதான வீதி, இராமநாதபுரம் 6 ஆம் 7ஆம் 5ஆம் யுனிட்கள், புதுக்காடு, மாயவனூர், வட்டக்கச்சி ஆகிய கிராமங்களுக்கு தரிசனம் வழங்கி அருள்பாலிக்கவுள்ளார். (5-23)

# வார இறுதி நாட்களில் இ.போ.ச. சேவையின்றி அவதியுறுகின்றோம்

## பயணிகள் ஆதங்கம்

(பூநகரி)

வார நாட்களில் தினமும் அதிகாலையில் பூநகரி முக்கொம்பன் சந்தியில் இருந்து புறப்பட்டு செக்காலை வரை சென்று மீண்டும் திரும்பி அக்கராயன் ஊடாக கிளிநொச்சி வரை செல்லும் இ.போ.ச. பேருந்து சேவை வார இறுதி நாட்களில் (சனி, ஞாயிறு) சேவையில் ஈடுபடுவதில்லை என இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி சாலை முகாமையாளரிடம் இப்பகுதி பொது அமைப்புப் பிரதிநிதிகள் தொடர்பு கொண்டு வினாவிய போது இச் சேவை பாடசாலை மாணவர்கள் நலன் கருதியே நடத்தப்படுவதால் சனி, ஞாயிறு இச்சேவை நடத்தப்படுவதில்லை என தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிடுகின்றார்கள்.

வார இறுதி நாட்களில் இச்சேவை நிறுத்தப்படுவதால் முக்கொம்பன், நேரடம்பன், செக்காலை, அரசபுரம் ஆகிய கிராமங்களில் இருந்து பயணிக்கும் நோயாளர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் பெரிதும் சிரமப்படுவதாக தெரிவிக்கும் மகளிர் குழு அமைப்பினர் இச் சேவை நடத்தப்பட வேண்டிய அவசியத்தை உணராமல் தொடர்ந்து பாராமுகமாக இருந்ததால் மாற்று நடவடிக்கையில் ஈடுபட வேண்டி ஏற்படுமென எச்சரித்துள்ளனர். (2-5-84)

# புத்தாண்டு விளையாட்டுப்போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(குருமன்காடு)

வவுனியா கலைமகள் விளையாட்டுக்கழகமும் கலைமகள் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் 33 ஆவது வருட சித்திரை புத்தாண்டு விளையாட்டுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி சித்திரை வருடப்பிறப்பன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இவ் விளையாட்டுப் போட்டியில் 10 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான 50 மீற்றர் மற்றும் 100 மீற்றர் ஓட்டம், 45 கிலோ மீற்றர் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம், திருமணமாகாத பெண்களுக்கான முட்டி உடைத்தல், ஆண்களுக்கான முட்டி உடைத்தல், 5 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான மூன்று சில்லு சைக்கிள் ஓட்டம் (சைக்கிளுடன் சமுகமளிக்க வேண்டும்), அணிக்கு 4 பேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி, 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான தடை தாண்டல் ஓட்டம், திருமணமான பெண்களுக்கான சங்கீதக் கதிரை, 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான விநோத உடை, 15 வயதுக்குட்பட்ட பெண்பிள்ளைகளுக்கான நிதான ஓட்டம் போன்ற போட்டிகள் இடம் பெறவுள்ளன.

இந்நிலையில் கரப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் கலைமகள் விளையாட்டுக்கழக நிர்வாகத்திடம் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்பாக நேரடியாகவோ அல்லது தலைவர், செயலாளர், கலைமகள் விளையாட்டுக்கழகமும் கலைமகள் சனசமூக நிலையமும் மன்னார் வீதி வவுனியா என்ற முகவரிக்கு தபால் மூலமாவோ கிடைக்க ஆவன செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை போட்டிகள் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 077 736 3175, 077 603 1512 , 077 631 3658, 077 612 0854 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற முடியும் என நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (2-250)

# தெளிகரை, அரசபுரம் கிராமங்களில் அன்னாசிச் செய்கை வெற்றியளிப்பு

பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள தெளிகரை, அரசபுரம் ஆகிய விவசாயக் கிராமங்களில் வடக்கு மாகாணத்திற்காக குறித்தொதுக்கப்பட்ட நிதித் திட்டத்தின் கீழ் அன்னாசிச் செய்கை கடந்த 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு வெற்றியளித்துள்ளது.

இத் திட்டம் 2 ஏக்கர் நிலப்பரப்பில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இத் திட்டத்துக்கென 8 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு பயனாளிக்கும் தலா 1/4 ஏக்கர் வீதம் வழங்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு அன்னாசிச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது இச் செய்கை வெற்றியளித்து பூக்கள் வெளி வந்து காய்க்க ஆரம்பித்துள்ளன.

இச் செய்கைக்கான அறுவடை ஒரு வருட காலத்தின் பின்னர் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (2-5-84)

# இ.போ.ச. மன்னார் சாலைக்கு புதிய முகாமையாளர் நியமனம்




இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார் சாலை புதிய முகாமையாளராக கனகலிங்கம் காண்டீபன் நியமிக்கப்பட்டு நேற்றைய தினம் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை அரச போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலையில் கடமையாற்றிய கனகலிங்கம் காண்டீபன் என்பவரே மன்னார் சாலையின் புதிய முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் மன்னார் சாலையின் புதிய முகாமையாளராக நியமிக்கப்பட்ட க்னகலிங்கம் காண்டீபன் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் மன்னார்-தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள இலங்கை அரச போக்குவரத்து சபையின் மன்னார் சாலையில் கையொப்பமிட்டு தமது பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இந்த நிலையில் மன்னார் வங்காலை கிராமத்தைச் சேர்ந்த ஏ.ஜே.லெம்பேட் கிளிநொச்சி முகாமையாளராகவும் ஏற்கனவே மன்னார் முகாமையாளராக கடமையாற்றிய முஹமட் சாஹீர் வவுனியா முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரச போக்குவரத்து சபையின் மன்னார் சாலைக்கு புதிய முகாமையாளராக கடந்த 15 வருடங்களின் பின்னர் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த முகாமையாளர் கடமையை பொறுப்பேற்க முடியாத வகையில் அரசியல் ரீதியிலான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்த நிலையில் கிளிநொச்சியில் கடமையாற்றிய ஒருவர் மன்னார் சாலை முகாமையாளராக நியமிக்கப்பட்டார். (2-4-5-9)

# 4 கிராமங்களில் 100 விவசாயிகள் தெரிவாகி விதை கச்சான் நடுகை

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவின் உலக உணவுத் திட்டத்தின் நிதியுதவியுடன் பூநகரி கமநல சேவை திணைக்களத்தினூடாக முக்கொம்பன், தெளிகரை, தம்பிராய், ஆலங்கேணி ஆகிய இடங்களைச் சேர்ந்த 100 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு விதை கச்சான் இலவசமாக வழங்கப்பட்டு நடுகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது நடுகை செய்யப்பட்டுள்ள விதை கச்சான்கள் பூநகரி கமநல சேவை திணைக்களத்தின் அதிகாரிகளினால் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றது.

ஒரு பயனாளிக்கு தலா 20 கிலோகிராம் வீதம் 2 ஆயிரம் கிலோ கிராம் விதை கச்சான் 100 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு நடுகை முடிவு பெற்றுள்ளது.

இதேவேளை நடுகை செய்யாத விவசாயிகளிடம் இருந்து விதை கச்சான் மீளப் பெறப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நடுகை செய்யப்பட்டு 3 மாத காலத்தின் பின்னர் அறுவடை நடைபெறுமென தெரிவிக்கப்படுகின்றது. (2-5-84)

## நீதிமன்றத்தின் மீது செலுத்தும்

# அரசியல் அழுத்தங்களுக்கு எதிராகவே விமல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்

## தேசிய சுதந்திர முன்னணி விளக்கம்



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச சிறைச்சாலையினுள் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தமை நீதிமன்றத்திற்கு எதிராகவல்ல என அவரது கட்சி தெரிவித்துள்ளது.

இந்த அரசாங்கம் நீதிமன்றத்தின் மீது செலுத்தும் அரசியல் அழுத்தங்களுக்கு எதிராகவே அவர் போராட்டத்தை மேற்கொண்டு வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் பிரதித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

பிட்டகோட்டையில் உள்ள கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

தமது கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச 84 மணித்தியாலங்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டுக்கு அநீதி இழைக்கப்படும் போது அந்த அபாயத்திலிருந்து பாதுகாக்கும் முகமாக அவர் குரல் எழுப்புவார் என, நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர மேலும் தெரிவித்தார்.(இ-7)




## காற்று மாசு;கண்டி தெரிவு



இலங்கையில் அதிக காற்று மாசடையும் இடமாக கண்டி பெயரிடப்பட்டுள்ளது.

கண்டியிலுள்ள குட்ஷெட் பேருந்து நிலையம் காற்று மாசு நிறைந்த பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் பிரதான 10 நகரங்களில் மேற்கொள் ளப்பட்ட ஆய்விற்கமைய இந்த விடயம் தெரியவந்துள்ளது.

கண்டி - கொழும்பு நகரங்களுக்கு செல்லும் பிரதான பேருந்து நிலையமான குட்ஷெட்டில் காணப்படுகின்ற காற்று மாசு நிலைமை, உலகசுகாதார அமைப்பின் முழுமையான காற்று மாசுவை விடவும் அதிகமாகும்.

கண்டி நகரம் மலைகளினால் மூடப்பட்டுள்ளமையினால் இந்த நிலைமை அதிகமாக காணப்படுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சியாளர் எச்.டீ.எஸ். பிரேமசிறி தெரிவித்துள்ளார். (இ-7)

## பல நீதிமன்றங்களால் பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்ட உதேஷ் கைது

நாட்டின் பல இடங்களில் இடம்பெற்ற கொலை, கொள்ளை மற்றும் வழிப்பறிகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் நீண்ட காலத்திற்குப் பின்னர் நேற்று முன்தினம் கதிர்காமத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நாட்டின் பலப் பகுதிகளில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பில் குறித்த நபருக்கு எதிராக பல நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டிருந்த நிலையில் எட்டு பிடி விராந்துகளும் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

சட்டவிரோத துப்பாக்கியை வைத்துக்கொண்டு கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில், குறித்த நபருக்கு எதிராக பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் கதிர்காமத்தில் வைத்து நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கதிர்காமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உபாலி காரியவசமிற்கு கிடைக்கப்பெற்ற அவசரத் தகவலொன்றினையடுத்து விரைந்த பொலிஸார். வீடொன்றில் மறைந்திருந்த நபரை கைது செய்துள்ளனர்.

"ரத்கம உதேஷ்" என்றழைக்கப்படும் குறித்த நபர், போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி இந்தியா, சவுதி, நேபாளம் மற்றும் மாலைதீவு போன்ற நாடுகளுக்குச் சென்று வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(இ-7)

## இந்தியாவின் "ஐ.என்:எஸ்.டர்ஷக்" இலங்கையில்





(கொழும்பு)

இந்திய கடற்படையின் நீர்ப்பரப்பு ஆய்வுக்கப்பல் "ஐ.என்.எஸ். டர்ஷக்" கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த கப்பல் பயிற்சி வழங்கும் நோக்கில் இலங்கைக்கு வந்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் நாட்களில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது டன் பல நட்பு ரீதியான கூடைப்பந்தாட்ட மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த "டர்ஷக்" நாளை மறுதினம் 30 ஆம் திகதி புறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, "ஐ.என். எஸ். டர்ஷக்" தென்பகுதியில் தனது பயிற்சி நடவடிக்கைகளை முடித்துக்கொண்டதன் பின்னர் திருகோணமலைக்கும் தனது விஜயத்தை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சைட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலை.மாணவர்கள் போராட்டம்



(கொழும்பு)

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக மருத்துவப்பீட மாணவர்கள் பிரதேச மக்களுடன் இணைந்து அநுராதபுரம் - யாழ்ப்பாண சந்திக்கு அருகாமையில் மாலபே சைட்டம் கல்வி நிறுவனத்துக்கு எதிராக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

மாலபே சைட்டம் திருட்டுக் கல்விக்கடையை மூடுமாறும் தகுதியற்ற மாணவர்களை பணத்துக்காக இணைத்துக்கொண்டு மருத்துவப்பட்டத்தை வழங்குகிறார்கள்.

நாம் இங்கு போராடுவது எதிர்காலத்தில் தகுதியற்ற வைத்தியர்கள் உருவாகி விடக் கூடாது என்ற நோக்கத்திலுமாகும்.

ஓர் சமூகத்தின் முன்னேற்றதுக்கு அடிப்படையானது கல்வியாகும். அதனை இல்லாது ஒழிப்பது என்பது முழு மானிட சமூகத்துக்கும் இழைக்கும் அநீதியாகும்.

கல்விக்கு அநீதி இழைப்பது என்பது அந்த சமூகத்தில் மாணவர்களை தாழ்வுபடுத்தும் ஒரு செயலாகும். இதனை எவரும் மேற்கொள்ள முடியாது.

கல்வியை இழக்கச் செய்வது என்பது மாணவ சமூகத்தின் உரிமையை இல்லாதொழிக்கும் ஒரு செயற்பாடாகும் என அவர் குற்றம் சுமத்தினார். (இ-7)

## அரசின் செயற்பாடுகள் மீது ஆளும் கட்சியினர் வெறுப்பு

அரசாங்கம் தொடர்பாக வெறுப்படைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தன்னுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தவறான முகாமைத்துவம் காரணமாக நாட்டில் இருக்கும் அரச சொத்துக்களை ஒன்றன் பின் ஒன்றாக விற்பனை செய்யுமாறு மத்திய வங்கியின் ஆளுநர் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு விற்பனை செய்யவில்லை என்றால், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, கிரேக்கத்தை விட மிக மோசமான நிலைமைக்கு நாடு செல்லும் என மத்திய வங்கியின் ஆளுநர் கூறியுள்ளார்.

எனினும் நான் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டேன். நாட்டின் அரச வளங்களை விற்பனை செய்வது முற்றிலும் தவறானது. இது எதிர்கால சந்ததிக்கு சொந்தமானது என்பதே இதற்குக் காரணம்.

எதிர்கால சந்ததியினரின் பொறுப்பாளிகள் நாங்கள். வளங்களை பாதுகாத்து நாம் அடுத்த தலைமுறைக்கு அதனை வழங்க வேண்டும். இவற்றை விற்பனை செய்தால், அந்த பாவத்தை நாங்கள் அனுபவிக்க வேண்டும்.

அரசாங்கத்தின் ஆயுள் மிகவும் குறுகியது. சட்டத்தை இயற்றி அரசாங்கத்தை நான்கு வருடங்களுக்கு முன்னர் கலைக்காமல் வைத்துள்ளனர்.

இப்போது இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. இன்னும் இரண்டரை வருடங்களில் அவர்கள் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள வேண்டும். எனினும் அதற்கு முன்னர் அரசாங்கத்திற்குள் பிளவு ஏற்படும். அரசாங்கத்திற்கு வேறு வழிகள் இல்லை. நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடையும் போது அவர்களுக்கு செய்வதற்கு ஏதுமில்லை.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெறுப்படைந்துள்ளனர் எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

## பிணைமுறியால் 950 கோடி நட்டம்

(கொழும்பு)

**ஊழியர் சேமலாப நிதி மூலமாக மேற்கொள்ளப்பட்ட மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கல்களில் 950 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது. மத்திய வங்கியின் உள்ளக கணக்காய்வு அறிக்கை மூலம் குறித்த தகவல் தெரியவந்துள்ளது.**

ஊழியர் சேமலாப நிதி மூலமாக மேற்கொள்ளப்பட்ட மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கல்களில் 950 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

மத்திய வங்கியின் உள்ளக கணக்காய்வு அறிக்கை மூலம் குறித்த தகவல் தெரியவந்துள்ளது.

மத்திய வங்கியின் முக்கிய அதிகாரி ஒருவரும், ஊழியர் சேமலாப நிதிய பணியகத்தின் அதிகாரி ஒருவரும் தனியார் முகவர் நிறுவனமொன்றுடன் இணைந்து இந்த மோசடியை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பான முழுமையான அறிக்கை மத்திய வங்கியின் நிதிக்கட்டுப்பாட்டுச் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள போதிலும், பொறுப்புக் கூறவேண்டிய அதிகாரிகளோ குற்றவாளிகளைப் பாதுகாப்பதில் கரிசனை கொண்டிருப்பதாக தெரியவந்துள்ளது. (இ-3)

## தொடர்மாடிகளுக்கு கீழ் தபால் பெட்டிகள் கட்டாயம்

(கொழும்பு)

புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற தொடர்மாடி வீடுகளுக்கு கீழ் மாடியில் தபால் பெட்டிகளை நிர்மாணிப்பதன் முக்கியத்துவம் குறித்து தபால் சேவைகள் அமைச்சர் எம்.எச்.எம். ஹலீம் விளக்கமளித்துள்ளார்.

அண்மையில் இந்த யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட போது அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இதன் தேவை தொடர்பில் அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

இதன்போது, தொடர்மாடி வீடுகளில் காணப்படும் தபால் சேவை குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே இந்த யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது.

நிர்மாணிக்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதால், கடிதங்களை விநியோகிப்பதற்கு தபால் விநியோகஸ்தர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, தான் இந்த தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் எம்.எச்.எம்.ஹலீம் தெரிவித்துள்ளார். (இ-7)

## இலங்கையிலிருந்து கடத்தப்பட்ட 10 கோடி ரூபாய் பெறுமதியான தங்கத்துடன் ஒருவர் கைது!




(கொழும்பு)

இலங்கையிலிருந்து கடத்தப்பட்டதாக கூறப்படும் சுமார் 10 கோடி பெறுமதியான, 16.5 கிலோ தங்கக்கட்டிகளைக் கொண்டு சென்ற ஒருவரை, தமிழக பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையிலிருந்து கடல் வழியாக தங்கக்கட்டிகள் ராமநாதபுரத்துக்கு கடத்தப்பட்டு, அங்கிருந்து சென்னைக்கு கொண்டு செல்லப்படுவது தொடர்பாக அந்நாட்டு புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலை தொடர்ந்தே, 16.5 கிலோ தங்கக்கட்டிகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தமிழக மத்திய புலனாய்வு பிரிவினர் மற்றும் சுங்கத்துறை அதிகாரிகள் இணைந்து இராமேஸ்வரம், தனுஷ்கோடி, பாம்பன், மண்டபம் மற்றும் கிழக்கு கடற்கரைச்சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அதிரடி சோதனைகளை நடத்திய நிலையில், கொரியர் வண்டியில் பதுக்கப்பட்டிருந்த சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான தங்கக்கட்டிகளை மீட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கடத்தல் தங்கம் யாருக்கு கொண்டு செல்லப்பட்டது மற்றும் குறித்த கடத்தல் பின்னணியில் இருப்பவர்கள் தொடர்பில், இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (இ-7)

## ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் நிகராகரித்துள்ளனர்

### சந்திம வீரக்கொடி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள்நிராகரித்துள்ளனர்என பெற்றோலிய வள அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

பென்தர அல்பிட்டியவில் நேற்று முன்தினம்நடைபெற்ற சுதந்திரக் கட்சிக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் இன்று நிராகரித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்களின் எண்ணங்களை புரிந்து கொள்ள முடியவில்லை.



இந்த விடயத்தை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். எதிர்கால தேர்தலில் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய அரசியல் பிரவாகம் ஒன்றை உருவாக்க வேண்டுமாயின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இருக்க வேண்டும்.

இவ்வாறான நிலையில் கட்சியை பிளவடையச் செய்ய சில ஒப்பந்தக்காரர்கள் முயற்சிக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் கைப் பாவைகளாக யார் செயற்படுகின்றார்? நாங்களா செயற்படுகின்றோம்?

அரசியல் மேடைகளில் ஏறி எமது கட்சியையும், எம்மையும் விமர்சனம் செய்வோர் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லர்.

அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வந்தவர்களேயாவர் என அமைச்சர் சந்திம வீரக்கொடி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மகிந்த அரசின் செயற்பாடு காரணமாக திட்டமிடல் சேவை குழப்ப நிலையில்

### ரஞ்சித் மத்தும பண்டார விசனம்

(கொழும்பு)

மகிந்த ஆட்சியில் நிதியமைச்சின் தன்னிச்சையான செயற்பாடு காரணமாகத் திட்டமிடல் சேவை அலங்கோலமாகக் காட்சியளிப்பதாக அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

திட்டமிடல் சேவையுடன் தொடர்புடைய 13 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் தங்களது பிரச்சினைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடுவதற்கு கடந்த 23ஆம் திகதி அரசாங்க நிர்வாக அமைச்சிற்கு வருகை தந்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

தீர்க்க முடியாத பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நிலைமை எமது அரசிற்கு ஏற்பட்டுள்ளது. காரணம்



சென்ற அரசில் இருந்த முக்கியஸ்தர்கள் தாம் நினைத்தவாறு பல்வேறு பதவிகளுக்கு பல்வேறு நபர்களை நியமித்தனர்.

அரசியல் தலையீடுகளுக்கு அப்பால் இது தொடர்பான விசாரணைகளை நடத்தி தீர்வைப் பெறுவது அரசாங்கமாகிய எங்களது பொறுப்பாகும்.

திட்டமிடல் சேவையானது இவ்வளவு காலமும் நிதி அமைச்சின் கீழ் இருந்ததுடன், புதிய அரசின் காலத்திலேயே அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இச்சேவையில் உள்ள வெற்றிடங்களின்எண்ணிக்கை 955ஆகஉள்ளஅதேவேளை மொத்தமாக தற்போது சேவையில் 1086 பேர் உள்ளனர்.

இவ்வாறு உள்ளவர்கள் 1994, 1999, 2005 ஆகிய வருடங்களில் சேவையில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன் அதில் அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர், அபிவிருத்திகள உதவியாளர், திட்டமிடல் உதவியாளர், வரவு செலவுத்திட்ட உதவியாளர் உள்ளிட்ட பல சேவைகள் இருப்பதுடன் இதன் காரணமாக பல பிரச்சினைகளும் உருவாகியுள்ளன.


இப்பேச்சுவார்த்தையில் அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி, நிறுவன பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.டீ.சோமதாச, இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்கே.விஎம்பி.ஜேகமகே ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (இ-7)

## இலங்கைக்கான ஹஜ் கோட்டா அதிகரிப்பு!

(கொழும்பு)

இவ்வருடம் புனித ஹஜ் யாத்திரைக்கு செல்வதற்கு இலங்கைக்கு மேலதிகமாக 600 கோட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி 2800 பேரிற்கு இம்முறை ஹஜ் கடமை செய்வதற்கு வாய்ப்புகள் கிடைக்கும் என தபால் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் வினவிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



முஸ்லிம்களின்ஐம்பெரும் கடமைகளான ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு உலக நாடுகளில்இருந்து இலட்சக்கணக் கான மக்கள் சவுதி அரேபியாவிற்கு செல்கின்றனர். எனினும் கடந்த காலங்களில் மக்கா நகரின் கஃபதுல்லாவில் புனர் நிர்மாண பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தமையால் இலங்கைக்கான ஹஜ்கோட்டா மட்டுப்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பலப்பிட்டிய நீதிமன்றத்தில் வழக்கு உடமைகள் திருட்டு

(கொழும்பு)

பலப்பிட்டிய மேல் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டிருந்த வழக்கு உடமைகள் மற்றும் ஆவணங்கள் அடையாளம் தெரியாதோரால் திருடப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது. பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குறித்த உடமைகளில் பல காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

## கைக்குண்டுகளுடன் இருவர் கைதாகினர்

(கொழும்பு)

ஹிக்கடுவை மற்றும் குங்கம பகுதிகளில் கைக்குண்டுகளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய, ஹிக்கடுவை, குமார மாவத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது, கைக்குண்டுடன் ஒருவர் கைதானார்.

இதேவேளை, குங்கம, கட்டகடுவ பிரதேசத்தில்கைக்குண்டுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். (இ-7)

## இலாபமீட்டும் நிறுவனமாக சதொச – றிசாத் மகிழ்ச்சி

(கொழும்பு)

லங்கா சதொச நிறுவனம் இலாபமீட்டும் நிறுவனமாக தற்போது மாற்றமடைந்துள்ளதாக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சமகால அரசாங்கம் ஆட்சியை பொறுப்பேற்கும்வேளையில் சதொச நிறுவனம் நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்தது. இந்த நிறுவனத்தின்களஞ்சியசாலைகளில் காலாவதியான பொருட்கள் தேங்கி காணப்பட்டன. பல வருடங்களாக உரியகணக்குஆவணங்கள் பேணப்படவில்லை என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## பயங்கரவாதத்திற்கு மாற்றீடான பதிலீட்டு சட்டம் மே மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்


### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஏராளமான புதிய சட்டங்களை இவ்வருடத்திலிருந்து அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

எனவே பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு மாற்றீடான பதலீட்டுச் சட்டத்தை எதிர்வரும் மே மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.


இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக யூ.ஆர்.டி. சில்வா தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 43 ஆவது நிர்வாகக் குழுவின் உத்தியோகபூர்வ நிகழ்வு நேற்று முன்தினம் இரவு கொழும்பிலுள்ள கிங்ஸ் பெரி ஹோட்டலில் நடைபெற்றது.



அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மீனவர்கள் பிரச்சினையில் பிரதமரின் நேரடித் தலையீடு மிகவும் அவசியம்

## தமிழக முதல்வர் பழனிச்சாமி வலியுறுத்து


கோப்புப்படம்

(சென்னை)

இலங்கை சிறையில் உள்ள 38 மீனவர்களையும் 133 மீன்பிடி படகுகளையும் விடுவிக்க பிரதமர் நேரடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, பிரதமர் நரேந்திர மோடிக்கு மீண்டும் கடிதம் எழுதியுள்ளார்.

ஜெகதாபட்டினம் மற்றும் கோட்டைப்பட்டினம் பகுதிகளைச் சேர்ந்த 12 மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதையும் அவர் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, "இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என மீனவர்கள் எதிர்பார்த்திருந்த நேரத்தில், இவ்வாறான கைது சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மீனவர்களை கைது செய்வது நிறுத்தப்படவேண்டும் என இலங்கை அரசுக்கு இந்தியா உறுதியான எச்சரிக்கை அளிக்கவேண்டும்.

பிரதமரிடம் அளித்த மனுவில் மீனவர்களுக்கு ரூ.1650 கோடி நிதித்தொகுப்பு அளிக்கவேண்டும் என நான் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், நிதித்தொகுப்பை விரைவில் அளிக்க சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுக்கு உத்தரவிட வேண்டும்.

அத்தோடு மீனவர்கள் மற்றும் மீன்பிடி படகுகளை விடுவிப்பது தொடர்பாக இராஜாங்க ரீதியிலான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# சசி தலைமையிலான அ.தி.மு.க. அணியை மக்கள் விரும்பவில்லை

## சசிகலா எம்.பி. சுட்டிக்காட்டு

சசிகலா தலைமையிலான அ.தி.மு.க. அணியை மக்கள் விரும்பவில்லை என்று மாநிலங்களவை உறுப்பினர் சசிகலா புஷ்பா தெரிவித்துள்ளார்

கராத்தே செல்வின் 20-வது நினைவு தினம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு பாளையில் உள்ள அவரது நினைவிடத்தில் சசிகலா புஷ்பா அஞ்சலி செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தமிழகத்திற்கு நல்லாட்சி தேவையென மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் இன்று நிச்சயமற்ற வகையில், புரியாத ஆட்சியொன்றே தமிழகத்தில் இடம்பெற்று வருகின்றது.


ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் நான் எந்த அணிக்கும் ஆதரவளிக்கவில்லை. ஆனால் சசிகலா தலைமையிலான அ.தி.மு.க. அணியை மக்கள் விரும்பவில்லை.

மக்கள் ஆதரவு யாருக்கு உள்ளதோ அந்த அணிக்கு என்னுடைய ஆதரவை நான் வழங்குவேன்" என்று அவர் தெரிவித்தார். (இ-7)

## பாரதச் செய்தி

# எரிவாயு திட்டத்தை ரத்து செய்யாவிட்டால் மீண்டும் போராட்டம்

## நெடுவாசல் மக்கள் அறிவிப்பு



(சென்னை)

எரிவாயு திட்டத்தை மத்திய அரசு ரத்து செய்யாவிட்டால் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடுவோம் என நெடுவாசல் மக்கள் அறிவித்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசலில் இயற்கை எரிவாயு எடுக்க உள்ளதாக மத்திய அரசு அறிவித்ததைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அளித்த உறுதி, மத்திய இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணனின் வேண்டுகோளின்படி கடந்த 9ஆம் திகதி நெடுவாசல் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் நெடுவாசல், புதுச்சேரியில் காரைக்கால் உட்பட நாட்டில் 31 இடங்களில் எரிவாயு எடுக்க ஒப்பந்ததாரர்களுக்கு விடப்பட்ட ஏலத்துக்கான ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதைத்தொடர்ந்து மத்திய, மாநில அரசுகள் அளித்த உத்தரவாதத்தின்படி, இந்த திட்டத்தை ரத்து செய்ய வேண்டும். அதையும் மீறி, இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு கையெழுத்திடப்பட்டால், மீண்டும் போராட்டத்தை தொடங்குவோம் என நெடுவாசல் மற்றும் சுற்றுவட்டார மக்கள் அறிவித்துள்ளனர். (இ-3)

# வேல்முருகனுக்கு லைக்கா நோட்டீஸ்

தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகனுக்கு எதிராக, லைக்கா நிறுவனம் மான நட்டஈடு கோரி நோட்டீஸ் அனுப்பியுள்ளது. கடந்த 25ஆம் திகதி நியூஸ் 18 தொலைக்காட்சியின் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வேல்முருகன், லைக்கா நிறுவனம் தனது சொந்த பணத்தில் வீடு கட்டவில்லை என்றும், இந்திய அரசின் நிதியினால் கட்டப்படுகின்ற வீட்டுத்திட்டத்தின் ஒப்பந்தக்காரர்களாகவே செயற்படுவதாகவும் கூறினார்.

அத்துடன், ராஜபக்ஷவிற்கும் லைக்காவிற்கும் தொடர்பிருப்பதாக குறிப்பிட்டுள்ளதாகவும் ஆனால், அப்படி ஒரு தொடர்பு தங்களுக்கு இல்லை என்றும் லைக்கா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கருத்தினால், தங்கள் வியாபாரத்தில் நட்டம் ஏற்பட்டிருப்பதாகவும், தனது கருத்திற்கு வேல்முருகன் மன்னிப்பு கேட்டு, 10 கோடி நட்ட ஈடாக வழங்க வேண்டுமென்றும் வேல்முருகனுக்கு அனுப்பியுள்ள நோட்டீஸில் லைக்கா கூறியுள்ளது.

லைக்கா நிறுவனத்தினால் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள 150 வீடுகளை, மக்களுக்கு வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சுப்பர்ஸ்டார் ரஜனிகாந்த் கலந்து கொள்வதாக இருந்தது. எனினும் பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து தனது பயணத்தை அவர் ரத்து செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



# விவசாயிகளின் போராட்டத்திற்கு வைகோ நேரில் சென்று ஆதரவு



தமிழக விவசாயிகளின் போராட்டத்திற்கு மத்திய அரசு செவிசாய்க்காவிடின், குறித்த போராட்டத்தை பொது மக்களிடம் கொண்டு செல்வேன் என ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

டில்லி ஜந்தர்மந்தர் பகுதியில் தொடர்ந்து 15ஆவது நாளாக நேற்றும் தமிழக விவசாயிகள் போராட்டம் நடத்தினர். இதில் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ நேரில் சென்று ஆதரவு தெரிவித்துள்ளார்.

இதன்போது செய்தியாளர்களை சந்தித்த அவர், "இதே ஜந்தர் மந்தர் பகுதியில் இலங்கைத் தமிழர்களுக்காக சுமார் 20 போராட்டங்களை நான் நடத்தி இருக்கிறேன்.

ஆனால்கழுத்தில்மண்டை ஓடுகளை கட்டிக்கொண்டு, கோவணம் கட்டிக்கொண்டு போராடுவது என்பதெல்லாம் எனக்குத் தெரிந்த வரையில் டில்லி சரித்திரத்திலேயே கிடையாது.


தமிழகத்தின் கோடிக்கணக்கான விவசாயிகளின் பிரதிநிதிகளாகத்தான் இந்த 300 பேர் இங்கே இருக்கிறார்கள். இங்கே நான் ஒரு விவசாயியாகவே வந்திருக்கிறேன். இவர்களோடு சேர்ந்து பல போராட்டங்களில் ஈடுபட்டுள்ளேன். தமிழக அரசு நிவாரண நிதி தொடர்பாக நிறைய முயற்சிகளை எடுத்தது. ஆனால் மத்திய அரசு தமிழகத்தை வஞ்சிக்கிறது.

எனவே நிதியமைச்சர் அருண் ஜேட்லியை சந்தித்து தமிழக விவசாயிகளின் கோரிக்கையை கையளிக்கவுள்ளேன்.

அதற்கு,மத்திய அரசு செவிசாய்க்கவில்லை என்றால் விவசாயிகள் போராட்டத்தை பொது மக்களிடம் கொண்டு செல்வேன்" என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

# கறுப்புப்பணத்துக்கு எதிரான போரில் அடுத்த கட்டத்துக்கு செல்ல வேண்டும்

## பிரதமர் மோடி வலியுறுத்து



(சென்னை)

கறுப்பு பணம், ஊழலுக்கு எதிரான போரில் நாம் அடுத்த கட்டத்துக்கு செல்ல வேண்டும் என்று பிரதமர் மோடி கூறினார்.

கறுப்பு பணம், ஊழலுக்கு எதிரான போரில் அடுத்த கட்டத்துக்கு செல்ல வேண் டும் என்று பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார். பிரதமர் மோடி ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை 'மன் கீ பாத்' (மனதில் இருந்து பேசுகிறேன்) என்ற தலைப்பில் வானொலியில் உரையாற்றி வருகிறார். இந்த நிகழ்ச்சியில் கறுப்பு பணம், ஊழல் ஆகியவற்றுக்கு எதிரான போரில் அடுத்த கட்டத்தை நோக்கி செல்ல வேண்டும். இதற்காக ரொக்கமில்லா பரிமாற்றம், பணப் பயன்பாட்டின் அளவை குறைத்தல் ஆகியவற்றில் நாம் உறுதியாக இருக்கவேண் டும்.

கல்வி நிறுவனங்களில் கட்டணம் செலுத்துவது, மருந்துகள், கடைகளில்பொருட்களை வாங்குவது, விமான மற்றும் ரயில் பயண டிக்கெட்டுகள் எடுப்பது போன்ற அன்றாட பயன்பாடுகளை மின்னணு முறையில் மேற் கொள்ளலாம்.

இதன் மூலம் நீங்கள் நாட்டுக்கு மிகப்பெரிய சேவை செய்து கறுப்பு பணத்துக்கு எதிராக போராடும் தைரிய மான வீரர்என்னும்நிலையை எட்ட வேண்டும். நாட்டின் 125 கோடி மக்களும், இந்த நிதி ஆண்டு இரண்டரை இலட்சம் கோடி அளவு மின்னணு பரிமாற்றங்களை மேற்கொள்வதென பட்ஜெட்டில் இலக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதை நிறைவேற்றுவதற்கு இன்னும் ஓராண்டு காலம் இருக்கிறதே என்று மக்கள் கருதிவிடக்கூடாது.

அதுவரை பொறுத்திருக்காமல் ஆறே மாதங்களில் கூட இதை நிறைவேற்றிட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

யாழ்ப்பாண பொது நூலகம்



40 பேரின் தலையைத் துண்டித்து தீவிரவாதிகள்

# அட்டூழியம்

## 10 மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிப்பு




(கசாய்)

கொங்கோ நாட்டில் 40 பொலிஸ் அதிகாரிகளை தீவிரவாதிகள் தலை துண்டித்து படுகொலை செய்த கொடூர சம்பவம் நடைபெற்றுள்ளது.

ஆபிரிக்க நாடான கொங்கோ நாட்டில் பல தீவிரவாத குழுக்களுக்கும் அரசுக்கும் இடையே தொடர்ந்து மோதல் இருந்து வருகிறது.

இதனால் அங்கு உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. கொங்கோவின் மத்திய பகுதியில் உள்ள கசாய் மாகாணத்தில் காம்வினா சாபு என்ற தீவிரவாத அமைப்பு ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் அந்த அமைப்பின் தலைவர் ஜீன்-பியரே பன்டி என்பவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதை தொடர்ந்து இங்கு காம்வினா சாபு தீவிரவாத அமைப்பினர் கடும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் முதல் கசாய் மாகாணத்தில் இதுவரை 400 பேர் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். எனவே அங்கிருந்து 2 இலட்சம் பேர் வெளியேறி வேறு இடங்களில் குடியேறியுள்ளனர்.

அங்கு நிலைமையை சீரமைக்க பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதற்கிடையே அங்கு சிகாபா-கனங்கா இடையே பொலிஸார் வாகனங்களில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது ஒரு பொலிஸ் வாகனத்தை காம்வினா சாபு தீவிரவாதிகள் கடத்தி சென்றனர். பின்னர் அதில் இருந்த 40 பொலிஸ் அதிகாரிகளை தலை துண்டித்து படுகொலை செய்தனர்.

இச்சம்பவத்துக்கு கொங்கோ ஜனாதிபதி ஜோசப் கபிலா கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும் கசாய் பகுதியில் 10 பெரிய புதை குழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதில் உள்நாட்டு போரில் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் மொத்தமாக போட்டு புதைக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா மற்றும் சுவீடனை சேர்ந்த 2 ஐ.நா. நிபுணர்கள் 2 வாரத்துக்கு முன்பு கடத்தப்பட்டனர். 4 கொங்கோ நாட்டினரும் மாயமாகி உள்ளனர். (இ-7)

# நீரோடையில் பேருந்து கவிழ்ந்து 10 பேர் பலி!

மணிப்பூர் மாநிலம் சேனாபதி மாவட்டத்தில் நேற்று அதிகாலை பேருந்து ஒன்று நீரோடையில் விழுந்ததில் 10 பேர் பலியாகினர்.

மேலும் 25 பேர் காயமடைந்தனர்.

இம்பால்-திமாபூர் தேசிய நெடுஞ்சாலை 39 இல் மகன், சகுமாய் இடையே நேற்று அதிகாலை 3.30 மணிக்கு இந்த கோர விபத்து ஏற்பட்டது.

இம்பால் நோக்கி சென்று கொண்டிருந்த இந்தப் பேருந்து நீரோடையில் விழுந்தது.

விபத்துக்கான உடனடி காரணம் தெரியவரவில்லை. காயமடைந்த 25 பேர் அசாம் ரைஃபிள்ஸ் மாரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் 25 பேரில் பலர் ஆபத்து நிலையைக் கடக்கவில்லை என்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. (இ-3)

# திடீர் பனிச்சரிவில் சிக்கி 6 மாணவர்கள் மரணம்

(டோக்கியோ)

ஜப்பானிய பனிச்சறுக்கு விளையாட்டரங்கில் (ski resort) நேற்று திங்கட்கிழமை ஏற்பட்ட திடீர் பனிச்சரிவில் 6 பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

குறித்த பனிச்சரிவு நேற்று அதிகாலை வேளையில் நாசு (Nasu) எனும் பகுதியில் அமையப் பெற்றுள்ள நாசு ஒன்சென் பனிச்சறுக்கு விளையாட்டரங்கிலேயே ஏற்பட்டுள்ளது.

மேற்குறித்த பனிச்சரிவு ஏற்பட்ட வேளையில் 70இற்கும்மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அங்கு இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# ஜனாதிபதியாக பெண் ஹொங்கொங்கில் தேர்வு



(ஹொங்கொங்)

சீனாவின் தன்னாட்சி பிரதேசமாக திகழும் ஹொங்கொங்கின் புதிய ஜனாதிபதியை தேர்வு செய்யும் தேர்தலில் முதல் முறையாக பெண் ஒருவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சீனாவின் தன்னாட்சி பிரதேசமாக ஹொங்கொங் திகழ்கிறது. ஹொங்கொங் விவகாரங்களில் சீனா தலையிடுவதற்கு எதிராக அங்கு அவ்வப்போது போராட்டங்கள் நடந்து வருகின்றன.

இந்நிலையில், ஹொங்கொங்கின் புதிய ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் அண்மையில் நடைபெற்றது. இந்த தேர்தலில், கேரி லாம் (வயது-59) என்ற பெண் வெற்றி பெற்றார்.

இதன்மூலம் இவர், ஹொங்கொங்கின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் என்ற பெயரை பெற்றுள்ளார். ஹொங்கொங்கின் தலைமை நிர்வாகியான இவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

இவர், 1,200 சீன ஆதரவாளர்களைக்கொண்ட கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவருக்கு ஆதரவாக 777 வாக்குகள் கிடைத்தன.

இவருக்கு அடுத்தபடியாக வந்துள்ள முன்னாள் நிதித்துறை தலைவர் ஜான் சாங் 365 வாக்குகளையும், ஓய்வு பெற்ற நீதிபதியான வூ குவாக் ஹிங் 21 வாக்குகளையும் பெற்றனர். (இ-7)

# சிரியாவில் தீவிரவாதிகள் பிடியிலிருந்த விமானத்தளம் போராளிகள் வசமானது

(டமாஸ்கஸ்)

ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்த சிரியாவின் முக்கிய விமானத்தளம், சிரிய போராளிகளால் வெற்றிகரமாக கைப்பற்றப்பட்டுள்ளது.

ரக்கா நகருக்கு அருகில் அமைந்துள்ள டப்கா விமானத்தளம் (Tabqa airbase), அமெரிக்க ஆதரவு பெற்ற சிரிய போராளிகளின் தொடர் தாக்குதல்களின் பின்னர் வெற்றிகரமாக கைப்பற்றப்பட்டது.



குறித்த விமானத்தளம் கைப்பற்றப்பட்டமை, ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான யுத்தத்தில் கிடைத்த பாரிய வெற்றியாகவே கருதப்படுகின்றது.

இந்த விமான நிலையம் அமைந்துள்ள பகுதியில் குர்திஷ் தலைமையிலான போராளிகள் தொடர்ந்தும் முன்னேறி வருவதாகவும் தொடர் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் அண்மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், சிரியாவில் நடைபெறும் தொடர் தாக்குதல்களால் அங்கு வாழும் பொதுமக்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாக மனித உரிமைகள் தொடர்பில் கண்காணிக்கும் குழுக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

பிரித்தானியாவை தளமாகக் கொண்டு செயற்படும் சிரிய மனித உரிமைகள் அவதானிப்புக் குழு இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போது, இது போன்ற தாக்குதல்களால் கடந்த வாரத்தில் மாத்திரம் 89 இற்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்தனர் எனவும் தெரிவித்துள்ளது. (இ-3)

# பாக். தீவிரவாதி கொலை

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள சர்வதேச எல்லைக்கோட்டுப் பகுதி வழியாக நேற்று இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற பாகிஸ்தான் தீவிரவாதியை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

நேற்று அதிகாலை பாகிஸ்தான் எல்லைக்கோட்டின் வழியாக இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற தீவிரவாதியை துப்பாக்கியால் சுட்டபடி, திரும்பிப் போகுமாறு பாதுகாப்புப் படையினர் எச்சரித்தனர். இந்த எச்சரிக்கையை பொருட்படுத்தாமல் முன்னேறி வந்த அந்த தீவிரவாதியை நேற்றுக் காலை 6 மணியளவில் இந்திய இராணுவத்தினர் துப்பாக்கிகளால் சுட்டுக் கொன்றனர். (இ-3)

# உக்ரைனில் இராணுவ ஹெலி வெடித்துச் சிதறி ஐந்து பேர் பலி

(கீவ்)

உக்ரைன் நாட்டில் சிறிய ரக இராணுவ ஹெலிகொப்டர் வெடித்து சிதறியதில் ஐந்து பேர் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சோவியத் வடிவமைத்த Mi-2 ரக ஹெலிகொப்டர் ரமாடோஸ்க் பகுதியை கடக்கும் போது வெடித்து சிதறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹெலிகொப்டர் பெரும்பாலும் மின் கம்பத்தில் உரசியதாலேயே வெடித்திருக்கக்கூடும் என அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.



ஹெலிகொப்டர் வெடித்த விபத்தில் ஐந்து பேர் பலியாகியிருக்கும் சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இச்சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கிம் ஜாங் உன்னின் மறுபக்கம்




(பியாங் யாங்)

வடகொரியாவின் ஜனாதிபதியாக இருக்கும் கிம் ஜாங் உன் மிகவும் கண்டிப்பானவர் என்பது உலகறிந்த செய்தி. இந்நிலையில் அந்நாட்டு அரசின் செய்தி நிறுவனம் அண்மையில் சில புகைப்படங்களை வெளியிட்டது.

அதில், கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து கிம் ஜாங் புன்னகையுடன் ஏவுகணையை பார்வையிடுகிறார்.

ரொக்கெட் இயந்திர சோதனை வெற்றியால் அவர் மகிழ்ச்சியாக உள்ளார். மேலும், ஏவுகணை படையின் முக்கிய அதிகாரியான கே.பி.ஏவின் கிம் ஜாங் முதுகில் தாவுகிறார்.

அவரும் சந்தோசமாக அவரை தூக்கி கொள்கிறார். இந்த புகைப்படம், கிம் ஜாங் மகிழ்ச்சியானவர் மற்றும் இயல்பானவர் என்பதை தன் நாட்டு மக்களுக்கு காட்ட அவர் வெளியிட்டுள்ளார் என கொரியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜா-சியோன் லிம் கூறினார். மேலும் தான் அடங்காதவர் என்ற தோற்றத்தை சர்வதேச நாட்டுக்குக் காட்டவே அவர் விரும்புகிறார். அதாவது தன் இரு முகங்களைக் காட்ட அவர் விரும்புகிறார். நாட்டில் அவரது தலைமையும் நிர்வாகமும் சிறப்பாக இருப்பதாக அரசியல் ரீதியிலான நம்பிக்கையை இந்தப் புகைப்படம் ஏற்படுத்துகிறது எனவும் சியோன் தெரிவித்தார். (இ-7)

# ரஜனியின் விஜயம் இரத்து; அங்கஜன் எம்.பி.கண்டனம்



(யாழ்ப்பாணம்)

நடிகர் ரஜனிகாந்தின் இலங்கை பயண இரத்தினால் மேலும் பாதிக்கப்பட்டவர்கள் வடக்குத் தமிழர்களே ,என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் விடுத்துள்ள கண்டன ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


அடுத்த மாதம் 9ஆம் திகதி நடிகர் ரஜனிகாந் இலங்கையின் வடக்கிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு போரினால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மக்களுக்காக ஈழத்தமிழரான "லைக்கா"நிறுவன நிர்வாகியால் அமைக்கப்பட்ட வீடுகளை கையளிப்பதாக இருந்தது .

இருப்பினும் திடீரென ரஜனிகாந்தின் வடக்கு விஜயத்தை சிலர் அரசியலாக்கி வெயிலிலும் மழையிலும் பாதுகாப்பற்ற வீட்டில் வாழ்ந்து வரும் ஏழைகளின் எதிர்பார்ப்பிலும் நம்பிக்கையிலும் ஏமாற்றத்தை விதைத்துள்ளார்கள். சொல்லக்கூடிய காரணங்கள் ஏதுமின்றி நடிகர் ரஜனிகாந்த்தின் வருகையை திடீரென சிலர் அரசியலாக்கியமை இந்த ஈழத்து ஏழை மக்களுக்கான வாய்ப்புக்களில் ஒன்றை நழுவ விட்டதாகவே கருதுகிறேன். லைக்கா நிறுவன நிர்வாகி ஒரு ஈழத்தமிழர் ,

அவர் தனது முதலீட்டினை இந்தியாவிலும் செய்துள்ளார். அதில் கிடைக்கும் பணத்தை கொடிய போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பயன்படுத்துவதே பொருத்தமானது. ஆனால் ஈழத்தமிழன் ஈழத்தமிழர்களுக்கு உதவமுடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது .இதை அரசியலாக்கு முன்னர் இங்கு நடந்த போரினையும் அதனால் வரலாற்று பதிவும் சிறப்பும் மிக்க தமிழினம் தன் அடையாளங்களை இழந்து வாழ நிரந்தர வீடுகள் இல்லாமலும் தமது காணிகள் தமக்கு கிடைக்காமலும் நாடோடிகளாய் வாழ்வதை சிந்தித்திருக்க வேண்டும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-3)

# அமெரிக்க கடற்படையின் கொம்ஸ்ரொக் இலங்கையில்





(கொழும்பு)

அமெரிக்க கடற்படைக் கப்பலான "யூ.எஸ்.எஸ். கொம்ஸ்ரொக்" நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

அமெரிக்கக் கப்பலான "யூ.எஸ். எஸ். கொம்ஸ்ரொக்" பயிற்சி நடவடிக்கையின் அடிப்படையிலேயே இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளது. (இ)

# வேலைவாய்ப்பு இன்மையால் முஸ்லிம் இளைஞர்கள் பலர் போதைப்பொருள் விற்பனை

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. விசனம்

மத்திய கொழும்பில் வேலை வாய்ப்பின்றி இருக்கும் முஸ்லிம் இளைஞர்களில் அதிகமானோர் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இளைஞர்களை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்கு மத்திய கொழும்பில் தொழிற் பயிற்சி நிலையமொன்றினை நிறுவி மாதம் 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன் தொழிற் பயிற்சிகள் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பு மருதானை அஸ்ஸபாப் கேட்போர்கூடத்தில் நடை




பெற்ற அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் கொழும்பு மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பான கலந்துரையாடலில் நேற்று கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாணவர்களில் 70 சதவீதமானோர் தொழில் வாய்ப்பும் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. தொழில் இன்மையினாலே இவர்கள் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டிருக்கிறார்கள். சிறந்த பாட சாலைகளில் தமது பிள்ளைகளுக்கு அனுமதி கிடைக்காத்தினால் பெற்றோர் பிள்ளைகளை சர்வதேச பாடசாலைகளில் அனுமதிக் கிறார் கள். சர்வதேச பாடசாலைகள் கொழும்பில் சில்லறைக் கடைகள் போல் பரவியுள்ளன. அரபு பெயர்களுடன் இயங்கி வரும் சர்வதேச பாடசாலை களினால் கல்வி நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# துறைமுக ஒப்பந்தம் மேற்பார்வை குழுவிற்கு அனுப்பப்படவில்லை

## சமல் எம்.பி. தெரிவிப்பு



அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வழங்குவது தொடர்பான ஒப்பந்தம், நாடாளுமன்ற மேற்பார்வைக்குழுவுக்கு அனுப்பப்படவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வழக்கமான நடைமுறையின்படி, தன்னால் வழிநடத்தப்படும் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் சம்பந்தமான மேற்பார்வைக் குழுவுக்கு, இந்த ஒப்பந்தம் தொடர்பான உள்ளடக்கங்கள், அந்த ஒப்பந்தத்துக்குச் சம்மதம் தெரிவிப்பதற்கு முன்னரே தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். அம்பாந்தோட்டையில், இது தொடர்பான நிலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல்களில், தான் ஆரம்பத்தில் பங்குபற்றியிருந்த நிலையில், ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்கள் தொடர்பில், தனக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று அவர் தெரிவித்தார். "இது சம்பந்தமாக பல முன்மொழிவுகளை நான் முன்வைத்தேன். ஆனால், அது தொடர்பாக எனக்கு இன்னும் பதிலளிக்கப்படவில்லை" என்று அவர் தெரிவித்தார். நிலங்கள், குறைவான விலையில் கணக்கெடுக்கப்பட்டுள்ளன எனக் குற்றஞ்சாட்டிய அவர், அம்பாந்தோட்டையில், அண்மைக்காலத்தில் நிலத்தின் விலை, கணிசமானளவு உயர்ந்துள்ள நிலையில், விசேட காணி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். "அடுத்த பிரச்சினை என்னவெனில், வெளியேற்றப்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர, மாற்றுக் காணிகள் தேவைப்படுகின்றன. வேறு எங்காவது செல்லுமாறு, தனியே கூற முடியாது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வீதி அபிவிருத்தி சபையின் லொறி 400 அடி பள்ளத்தில் பாய்ந்தது

## சாரதி படுகாயம்

(கொழும்பு)

வீதி அபிவிருத்தி சபைக்கு சொந்தமான லொறி ஒன்று 400 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஸ்கெலியா நோட்டன் பிரதான வீதியின் நோட்டன் நகரை அண்மித்த பகுதியிலேயே நேற்றுக்காலை 5.30 மணியளவில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

சாரதிக்கு நித்திரை ஏற்பட்டுள்ளதால் விபத்து சம்பவித்துள்ளதுடன் விபத்தில் காயமடைந்த சாரதி லக்ஷபான வைத்தியசாலையில்



அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் விபத்துக்குள்ளான லொறி பாரிய அளவில் சேதமாகியுள்ளதாகவும், மேலதிக விசாரணை தொடர்வதாகவும் நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# மனைவி கொலை; கணவனுக்கு மறியல்

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைதீவுப் பகுதியில் மனைவியைத் தீ வைத்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரான கணவனை, அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு, சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் எச்.எம்.எம்.பஸீல், நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த 2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் காரைதீவு வெட்டு வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த மொறிஸ் மெரினா (வயது - 31) என்பவர் கொல்லப்பட்டார்.

இவர்கள் திருமணம் முடித்து மூன்று மாதங்கள் கடந்த நிலையில் இருவருக்குமிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே, இக்கொலைக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# இலங்கை உள்ளிட்ட 16 நாடுகளுடன் இந்தியா கூட்டு இராணுவப் பயிற்சி

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட 16 நாடுகளுடன் இந்த ஆண்டில் இந்தியா கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்ள விருப்பதாக, இந்தியாவின் பாதுகாப்பு இணை அமைச்சர் சுபாஸ் பாம்ரே தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

'இருதரப்பு பாதுகாப்பு உறவுகளையும் ஒத்துழைப்புகளையும் வலுப்படுத்தும் நோக்கில் 2017ஆம் ஆண்டில் 16 நாடுகளுடன் இந்தியா கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளது.

அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், சீனா, பிரான்ஸ், இந்தோனேசியா, கசகஸ்தான், கிரிகிஸ்தான், மலேசியா, மாலைதீவு, மொங்கோலியா, நேபாளம், ரஷ்யா, இலங்கை, தாய்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய 16 நாடுகளுடனேயே இந்தியா கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளது.

இராணுவ அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல், பயிற்சிக் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் இந்தக் கூட்டுப் பயிற்சிகளின் போது உள்ளடக்கப்படும்' என்றும் இந்தியாவின் பாதுகாப்பு இணை அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# உள்ளூராட்சி மன்றத்தேர்தலை தாமதங்களின்றி நடத்தவும்

## ஜனாதிபதி மைத்திரி பணிப்புரை



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை, மேலதிக தாமதங்களின்றி நடத்துமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். கொழும்பில் நேற்று நடந்த சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார். (இ-7)

# புலம்பெயர் தொழிலாளர்களால் இலங்கைக்குள் கொண்டுவரப்படும் 9 பொருட்களுக்கு தீர்வை விலக்கு

(கொழும்பு)

புலம்பெயர் தொழிலாளர்களால் இலங்கைக்குள் கொண்டு வரப்படும், மேலும் ஒன்பது பொருட்களுக்கான சுங்கத் தீர்வைகளை முற்றாக அகற்றுவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

குறைந்தது ஒரு ஆண்டு காலம் வெளிநாடுகளில் பணியாற்றி விட்டு நாடு திரும்பும் புலம்பெயர் தொழிலாளர்களின் நலன்களைக் கவனத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சுங்கத் திணைக்கள பிரதி பணிப்பாளர் பராக்கிரம தெரிவிக்கையில், வெளிநாடுகளில் பணியாற்றி விட்டு நாடு திரும்பும் தொழிலாளர்களுக்கு கூடுதல் நன்மைகளை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

குளியலறை கருவிகளின் தொகுதி ஒன்று, படுக்கையறைத் தொகுதி ஒன்று, 3500 சிசி திறனுக்குக் குறைவான உந்துருளி ஒன்று ஆகியவற்றையும் வெளிநாடுகளில் இருந்து திரும்பும் தொழிலாளர்கள் தீர்வையின்றி எடுத்து வர முடியும்.

சூரிய கலன்கள், கணனிகள், மடிக்கணனிகள், இரண்டு கைபேசிகள் ஆகியவற்றையும் தீர்வையின்றி எடுத்து வரமுடியும் என்பதுடன் 55 அங்குலத்துக்கு உட்பட்ட தொலைக்காட்சிகளையும் தீர்வையின்றி கொள்வனவு செய்ய முடியும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மட்டு. சிவில் விமான நிலையம் அடுத்த மாதம் திறந்து வைப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு விமான நிலையம், சிவில் விமான நிலையமாக அடுத்த மாத இறுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது என்று சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் நிமலசிறி தெரிவித்துள்ளார்.

இராணுவப் பயன்பாட்டுக்கான விமான நிலையமாக இருந்து வந்த மட்டக்களப்பு விமான நிலையத்தை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை பொறுப்பேற்று, சிவில விமான நிலையமாக இயக்கவுள்ளது.

இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனைத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த விமான நிலையத்தில் தேவையான இடவசதி இருப்பதால், சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநர்கள், விமானப் பயிற்சி பாடசாலை உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்த முடியும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# 16 மாதங்களில் இலங்கைக் கடற்படை 3 பில்லியனை வருமானமாக ஈட்டியது

கடந்த 16 மாதங்களில் வணிகக் கப்பல்களுக்கு அளித்து வந்த பாதுகாப்புச் சேவையின் மூலம், இலங்கைக் கடற்படை 3 பில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது.

இலங்கையை அண்டிய கடற்பரப்பு வழியாகப் பயணம்மேற்கொள்ளும்வணிகக் கப்பல்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்கியதன் மூலம் இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

முன்னர் அவன்ட் கார்ட் நிறுவனத்தினால் பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது. ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், இந்த பாதுகாப்பு சேவை இலங்கை கடற்படையிடம், கடந்த 2015 நவம்பர் மாத நடுப் பகுதியில் கையளிக்கப்பட்டது.

இதற்குப் பின்னர், காலி செயற்பாட்டு நிலையத்தின் ஊடாக பாதுகாப்புச் சேவையைப் பெற்று பயணத்தை மேற்கொண்டிருந்த 8,181 கப்பல்களின் மூலம், 3பில்லியனுக்கு அதிகமான பணம் வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

வணிகக் கப்பல்களில் பணியில் ஈடுபட்டிருக்கும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பாதுகாப்புக் குழுக்களுக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்கள்உள்ளிட்டவற்றை இலங்கை கடற்படை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## எல்லா மனைவிகளும் எதிர்பார்ப்பது என்ன?

ஓர் ஆண் நம் சமூக அமைப்பில் பெரும்பாலும் தன் தாய், தந்தை, தம்பி அண்ணன்களோடு கூடிய வரைக்கும் ஒன்றாகவே வாழ்ந்துவிடுகிறான். திருமணத்தினால் அவன் பெரும்பாலும் நட்டப்படுவது இல்லை.

ஒரு பெண் அப்படியா?

திருமணமானதுமே பெற்றோரையும் கூடப்பிறந்தவர்களையும் பிரிந்து முற்றிலும் புதிய சூழ்நிலைக்கு மாறுகிறாள். தாமாக எந்த முடிவும் எடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறாள். சுதந்திரப் பறவையாகத் திரிந்த அவள் கூண்டுக்கிளியாக ஆகிறாள். பசித்தால் கூட உடனே சாப்பிட்டுவிட முடியாது. தொலைக்காட்சி பார்க்கலாம் என்றால் கூடப் பயப்படுகிறாள். வேலை அவ்வளவு கிடக்கிறது! ஓம் மனைவி என்னடா ஒய்யாரமாக உட்கார்ந்து ரி.வி பார்க்க ஆரம்பிச்சிட்டா? என்று தன் மாமியார் கத்துவாள் என்கிற பயம் தான் இப்படித் தன் சர்வ சுதந்திரங்களையும் இழந்து தன்னிடம் உண்மையாகவே பாசத்தைக் கொட்டுகிறவர்களை விட்டுப் பிரிந்து ஏனோ தானோ என்றும் சமயங்களில் வேண்டாத விருந்தாளி போன்றும்– ஏன் சமயங்களில் பரம விரோதி போன்றும் ஒரு பெண் நடத்தப்படும் போது –

அவளுக்கு வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படுத்தக் கூடியவை இரண்டே இரண்டு விடயங்கள் தாம்.

முதலாவது கணவனின் அன்பு.

அடுத்த பிள்ளைகளின் பாசம்.

நம் கணவர் நம்மிடத்தில் மாறாத பிரியம் வைத்திருக்கிறார் என்ற எண்ணத்தைத் தன் மனைவியிடம் மிக உறுதியாக நிரந்தரமாக ஒரு கணவனால் ஏற்படுத்திவிட முடியுமானால் சிறுசிறு விடயங்களால் வரக் கூடிய சண்டைகளையோ மனத் தாக்கங்களையோ ஒரு கணவன் தவிர்த்து விட முடியும்.

பெரும்பாலான கணவர்கள் தங்களுக்கு ஏற்படுகிற சந்தோசங்களைவிட தங்களுக்கு ஏற்படுகின்ற துன்பத்தை தாம் தம் மனைவியிடம் வெளிக்காட்டுகிறார்கள். உதாரணமாக தொழிலில் நட்டம் என்றாலோ மேலதிகாரி கோபித்துக் கொண்டாலோ அதை மனத்தில் போட்டு குழம்பிக் கொண்டு அதைக் கோபம் எனும் வெடி குண்டாக உருவாக்கி மனைவி மீது வீசுகிறார்கள்.

நியாயப்படி இவர்கள் என்ன செய்திருக்க வேண்டும் தெரியுமா? இப்படி ஆகிவிட்டது என்று மனைவியிடம் சொன்னால் அவள் அதற்கு ஆயிரம் சமாதானம் சொல்வாள். மனப் புண்ணுக்கு மருந்து போடுவாள். இதைவிடுத்து தன் மனப்புண்ணை அவளுக்கு ஒட்டிவிட்டு அவளையும் காயப்படுத்துவது எந்த ஊர் நியாயம்.?

அன்பு காண்பிப்பது என்பது கொஞ்சம் கூடச் செலவில்லாத விடயம். புடைவை அல்லது நகை தான் அன்பின் அடையாளம் என்று பொரு ளல்ல, பிரியமாய் வைத்துக் கொண்டாலே போதும், புடைவை,நகை என்பவை அன்பைப் பெருக்க வல்ல கல்குலேட்டர்கள் அவ்வளவே!

ஆக ஒரு கணவன் தன் மனைவியிடத்தில் உண்மையான அன்பை வெளிப்படுத்த வேண்டுமென்பது மிக அத்தியாவசியம்.

பிற பெண்களை விரும்பாத நேர்மை ; தீய பழக்கங்களுக்கு அடிமையாகாமல் இருத்தல்; மற்றவர் மத்தியில் கௌரவமாக வாழுவது; மனைவியின் உறவினர்களை மதித்தல்; அவர்களுக்கு உதவுதல்; புகுந்த இடத்தில் மற்றவர்களால் புண்படுத்தப்படும் போது சரியோ தவறோ மனைவிக்கு அனுசரணையாகப் பேசுதல்: பிள்ளைகளிடத்தில் பாசம் காட்டுதல்; குடும்பத்தை நன்கு கவனித்தல் இன்னும் இதுபோன்ற விடயங்களையே ஒரு மனைவி தன் கணவனிடம் எதிர்பார்க்கிறாள்.

இவை அனைத்தும் ஒரு கணவனுக்குச் சாத்தியமில்லாமல் போனாலும் கூறியவற்றுள் அடிப்படையான விடயங்களிலாவது எதிர்பார்ப்பை நிறைவு செய்ய வேண்டியது மிக அவசியம்.

**லேனா தமிழ்வாணன்**

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு அரசின் முட்டாள்தனமே காரணம்


## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

நாட்டில் அரிசி விலையும் வாழ்க்கைச் செலவும் அதிகரிக்கின்றமைக்கு அரசாங்கத்தின் முட்டாள்தனமான முடிவுகளும் கவனமின்மையுமே காரணம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.



காலியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற, பெரலியக்க பெரமக என்ற, ஒன்றிணைந்த எதிரணியின் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு குற்றம் சாட்டினார். “45 தொடக்கம் 60 ரூபாய்க்கு, உங்களுக்கு இப்போது அரிசி கிடைக்கிறதா, தற்போது அது, 110 - 130 ரூபாய். இந்த நிலைமை, ஏன் வந்தது? நாட்டில், வாழ்க்கைச் செலவு ஏன் அதிகரித்தது?” என்று கேள்வியெழுப்பிய அவர், அரசாங்கத்தின் கவனயீனம் காரணமாகவும் விவசாயம் தொடர்பாக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முட்டாள்தனமான முடிவுகளாலேயுமே, இந்நிலை ஏற்பட்டது எனத் தெரிவித்தார். இந்த நிலை காரணமாக, அரிசியுடன் வரும் கப்பலை எதிர்பார்த்து, துறைமுகத்தைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை, தற்போது ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அரசாங்கம், நாட்டின் சட்டத்தை வளைப்பதாகவும் குற்றஞ்சாட்டிய அவர், விமல் வீரவன்சவுக்கு, பிணை கிடைக்காமை குறித்துக் கருத்துத் தெரிவித்தார். “சட்டம் தற்போது, உதவியற்றது. விமல் வீரவன்சவுக்கு, இன்னும் பிணை கிடைக்கவில்லை. சிறைச்சாலையில் அவர் உள்ளார். அரசாங்கம், எதை எதிர்பார்க்கிறது? “நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு, சிறைச்சாலை ஆகியன நாட்டை ஆள வேண்டுமென அரசாங்கம் நினைக்கிறது. அனைவரையும் சிறைச்சாலையில் அடைத்து விட்டு, நாட்டை ஆள விரும்புகின்றனர். இது, குழப்பத்தை ஏற்படுத்துமென்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று, அவர் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் முதல்தர திரையரங்கு திறப்பு





(கொழும்பு)

இலங்கையிலேயே அதி சொகுசான அதிக கலையம்சம் கொண்ட திரையரங்கு ஒன்று மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த திரையரங்கு நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு அன்னை செல்லம் திரைப்பட மாளிகை என்னும் பெயரில் திறந்து வைக்கப்பட்டது.

செல்லம் திரையரங்குகளின் தலைவர் க.மோகனின் தலைமையில் நடைபெற்ற இதன் திறப்பு விழாவில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி பிரதம விருந்தினராகவும் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், கிழக்கு மாகாணசபையின் பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (இ-7)

# மாணவர்களின் நலன்களைப் பேணும் வகையில் தனியார் கல்வி நிலையங்கள் இருக்க வேண்டும்

## நல்லூர் பிரதேச செயலக கூட்டத்தில் தீர்மானம்

அறநெறிப் பாடசாலைகளின் முன்னேற்றம் தொடர்பாக தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை நிர்வாகிகளுடனான கூட்டம் கடந்த 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. இக்கலந்துரையாடலில் அறநெறிப் பாடசாலைகளுக்கு இடம் வழங்கக்கூடிய நிலையில் தனியார் கல்வி நிலையங்கள் இயங்க வேண்டும் என வலியுறுத்தப் பட்டது.

இந்து ,கிறிஸ்தவ மதப் பெரியார்கள் தனியார் கல்வி நிலையங்களுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்துள்ளதாகவும் அதற்கமைய தனியார் கல்வி ,நிலையங்கள் தமது கல்வி நடவடிக்கைகளுக்காக நேர அட்டவணையில் மாற்றம் செய்தல் இன்றியமையாத ஒன்றாக காணப் படுகின்றது. எனவே பின்வரும் விடயங்களைப் பின்பற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அவையான வன,

தரம் 01லிருந்து 09 வரையான வகுப்புக்களை வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு பின்னரும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிவரையும் நிறுத்தல் வேண்டும். தனியார் கல்வி நிலையங்கள் கட்டாயமாக நிறுவனப் பதிவினை உள்ளூராட்சிச் சபையில் மேற் கொண்டிருத்தல் வேண்டும். சுத்தமான குடிநீர், மலசலகூட வசதிகள் இருப்பதனை உறுதி செய்தல் வேண்டும். வகுப்பறைகளும் இருக்கைகளும் உடல்நலத்திற்கேற்ற சௌகரியமான முறையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கட்டட வசதிகள் நிரந்தரமானதாக இருப்பதுடன் பாதுகாப்பான மின்னிணைப்பு இருத்தல் வேண்டும். மேற்கூறிய இந்நடைமுறைகள் பின்பற்றுவதைப் பிரதேச செயலகம். சிறுவர் திணைக்கள உத்தியோகத்தர்கள், சுகாதார பணிமனை உத்தியோகத்தர்கள், பிரதேச சபையினர், மாநகர சபையினர் இணைந்து பரிசீலனை செய்து உறுதிப்படுத்துவார்கள் என்றி தீர்மானிக்கப் பட்டுள்ளது என நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ-3)

# அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 200 உத்தியோகத்தர்கள் திடீர் இடமாற்றம்

அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 200 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப் படவுள்ளனர்.

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் இந்த இடமாற்ற உத்தரவு அமுல்படுத்தப்படவுள்ளது.

அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவின் கடமைகளை உரிய முறையில் செய்யத் தவறிய உத்தியோகத்தர்கள் 200 பேர் இவ்வாறு இடமாற்றப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் மேலும் 100 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவில் தற்போது சுமார் 1300 உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

இடமாற்றம் செய்யப்படுவோரில் சிலர் 25 ஆண்டுகள் வரையில் அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இடமாற்றத்தின் பின்னர் இளைய திறமையான உத்தியோகத்தர்கள் அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (இ-7)

# மீனவர்களுக்கு இலவச டப்லெட்

(கொழும்பு)

அரசாங்கத்தின் 149 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 1,490க்கும் மேற்பட்ட மீனவர்களுக்கு டப்லெட் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


சர்வதேச கடற்பரப்பில் மீன்பிடிக்கும் போது, அது தொடர்பான தரவுகளை உரிய முறையில் பதிவு செய்வதற்காகவே, இவ்வாறு டப்லெட் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

சர்வதேசக் கடற்பரப்பில் பிடிக்கும் மீன்கள் தொடர்பில் சரியான தரவு பதிவு இன்மை என்ற காரணத்தால், இலங்கைக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தினால் மீன் ஏற்றுமதிக்கு தடைவிதிக்கப் பட்டிருந்தது. இதனைக் கருத்திற் கொண்டே, மீனவர்களுக்கு டப்லட் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேசக் கடற்பரப்பில் பிடிக்கப்படும் மீன்கள் தொடர்பில் துல்லியமான தரவுகளைப் பதிவு செய்வதற்குத் தேவைப்படும் பயிற்சியை, நாட்டு மீனவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக, கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு வழங்கப்படும் டப்லெட்டுகளை கடினமான சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக தண்ணீரின் கீழும் கூட இந்த டப்லெட்டுகளுக்கு சேதம் இல்லாமல் வைத்திருக்க முடியும்.

மேலும், டப்லெட்டுகளில் VMS-Vessel Monitoring System-ஐப் பொருத்தி மீன்பிடி படகுகளின் கண்காணிப்பு வசதிகளையும் பார்க்கக்கூடிய வகையில் அமையப் பெற்றுள்ளது. (இ-7)

# காணாமற் போனவர்களின் உறவினர்கள் முன்னெடுத்து வரும் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு பல்கலை. மாணவர்கள் ஆதரவு



யாழ்.வடமராட்சிக் கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் காலவரையறையற்ற போராட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பன்னிரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது. இதில் வடமராட்சிக் கிழக்கைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 15 பேர் கலந்து கொண்டனர். (இ-60)

யாழ்ப்பாண பொதுநூலகம்



# ஒன்றரை கோடி ரூபா பெறுமதியான கிலோ ஹெரோயின் மீட்பு

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி வல்வெட்டித்துறையில் இருந்து வேறு பகுதிக்கு விநியோகிப்பதற்கு தயாராக இருந்த ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான ஒன்றரை கிலோகிராம் ஹெரோயினை பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் கைப்பற்றியதுடன் அப் பகுதியைச் சேர்ந்த ஒருவரையும் கைது செய்துள்ளனர்.



நேற்று திங்கட்கிழமை காலை வல்வெட்டித்துறையில் இருந்து ஹெரோயின் கடத்தப்படவுள்ளதாக இலங்கைக் கடற்படையினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் சோதிநாதன், மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் மதன் மோகன் ஆகியோரின் வழிநடத்தலில் பருத்தித்துறை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி சமிந்த சிறிமன் தலைமையிலான குழுவினர் வல்வெட்டித்துறையில் தயார் நிலையில் நின்றிருந்த போது ஹெரோயினை விநியோகிப்பதற்காக எடுத்து வந்த ஒன்றரைக் கிலோ கிராம் ஹெரோயினையும் மீட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர் அம்மன் கோவிலடி வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் என மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (இ-15-60)

## தேசிய மட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு யாழில்

யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, வட மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்(தமிழ்) திருமதி கௌ.முகுந்தன், வட மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (விசேட கல்வி, முறைசாராக் கல்வி) கி.கமலராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## வடக்கில் மீண்டும் பிரிவினைவாதம் பிக்குகள் குற்றச்சாட்டு

நாட்டில் தற்போதுள்ள தலைமைத்துவங்கள் யார் என்பதே தெரியாதுள்ளது. நாட்டின் வளங்களை சீனாவிற்கும் இந்தியாவிற்கும் விற்பனை செய்கின்றனர். மற்றுபுறத்தில் வடக்கு, கிழக்கிலுள்ள இராணுவம் முடக்கி வைக்கப்பட்டுள்ளதால் புலிகளும் தமிழ் பிரிவினைவாத அமைப்புக்களும் மீண்டும் தலைதூக்கியுள்ளன.

எனவே தற்போதைய ஆட்சியாளர்களை வீட்டிற்கு துரத்த வேண்டிய அவசியம் தோன்றியுள்ளதை நாம் உணர்ந்துள்ளோம். எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்குள் 15 பிக்குகள் சங்கத்தை திரட்டிக் கொண்டு தற்போதைய ஆட்சியாளர்களை வீட்டிற்கு துரத்துவோம் என பொதுபல சேனா, ராவணா பலய, சிங்கள ராவய, தாதியர் சங்கம் ஆகிய சிங்கள அமைப்புக்கள் ஒருமித்து கூளுரைத்தன.

நாரஹேன்பிட்டி அபயராம விஹாரையில் நேற்று இடம்பெற்ற மேற்படி அமைப்பினைச் சேர்ந்த பிக்குகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவ்வமைப்புக்களின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1027

Search for people places and things Nagendram Home

### தவா




### மேகலா

ஆணாக பிறந்தாலும்
பெண்ணாக பிறந்தாலும்
திருமணம் என்பது பெற்றோர்கள்
செய்து வைப்பார்கள்.

அதுவரை பெற்றோருடன்
சந்தோசமாக வாழுங்கள்.
அந்த வாழ்க்கை திரும்ப கிடைக்காது.

### அபி





### சதீஸ்




### வசந்தன்




### சிந்தியா





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்வேன் என்று சம்பந்தன் அரசை எச்சரிக்க வேண்டும்

## ஆனந்தசங்கரி அறிவுரை





(கொழும்பு)

தமிழ் மக்கள் தங்களுடைய பொறுமையின் எல்லையை அடைந்துவிட்டார்கள் என்ற ஆர்.சம்பந்தனின் கூற்றை ஏற்றுக்கொள்வதோடு, அது இன்றல்ல என்றோ நடந்து விட்டதென்று கூறி வைக்க விரும்புகின்றேன். பொதுமக்கள், தங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென்று நிர்ப்பந்திக்க தள்ளப்பட்டுள்ளார்கள். பொதுமக்கள், தமிழ் மக்கள் மட்டுமல்ல சகல இன மக்களும் இப்பதவியை தங்கள் விருப்பத்துக்கு மாறாக அரசை பாதுகாப்பதற்காகவே இதனை உபயோகிக்கின்றீர்கள் என நம்புகின்றார்கள்.

காணிகளை விடுவித்தல், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் துன்பங்கள் போன்ற குறிப்பிட்ட பிரச்சினைகள் சம்பந்தமாக நீங்கள் விரும்பியிருந்தால் என்றோ தீர்த்திருக்க முடியும். தங்களுடைய எதிர்க்கட்சித்தலைவர் பதவியை இராஜினாமா செய்வதாக எழுதி வைத்துக்கொண்டு, இரு வாரங்களுக்குள் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாவிட்டால் இராஜினாமா கடிதத்தை சமர்ப்பிப்பதாக அரசுக்கு எச்சரிக்கை விடுங்கள் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அறிவுரை கூறியுள்ளார்.

தயவு செய்து, மக்கள் உங்களை வன்மையாக கண்டிக்கின்றார்கள், கொடும்பாவி எரிக்கின்றார்கள் என்பதனை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் விரைவாக செயற்படாவிட்டால் அவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை இராஜினாமா செய்யும்படி விரைவில் வற்புறுத்துவார்கள் அன்றேல் நீங்கள் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை நிறுத்துமாறு கோருவர்.

இத்துடன் இதனை நிறுத்தி விட்டு நான் உங்களுக்கு முன் அறிவித்தலாக கூற விரும்புவது நீங்கள் அரசியலில் இருந்து விலக வேண்டுமென்ற நியாயப்படுத்தக் கூடிய வலுவான காரணங்களை முன்வைக்க வேண்டிவரும். நியாயமாக சிந்திக்கின்ற எந்த இனத்தவரும் ஆணோ, பெண்ணோ ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு 30 வருடங்களுக்கு முன்பு இருந்த இராணுவ முகாம்களை அவசியத் தேவையானவர்களுடன் வைத்துக்கொண்டு அதன் பின்பு படையினரால் கையகப்படுத்தப்பட்ட சகல காணிகளை விடுவிக்குமாறு கோரிக்கையை விடுப்பதை மக்கள் தயக்கமின்றி ஆதரிப்பார்கள் என்றும் கூறியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக கூறுவதானால் அவர்களின் உறவுகள் மிகவும் பரிதாபத்துக்கு உரியவர்களாக உள்ளனர்.

கிராமங்களில் சென்று பார்த்தால் இப்போதும் கூட தமது உறவுகளை நினைத்து, பல வீடுகளில் அழுது புலம்புவதை கேட்க முடியும். அடுத்த விடயமானது, நீண்டகாலமாக சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டவர்களின் விடுதலை சம்பந்தமான விடயமாகும்.

இந்த விடயத்தை தொடர்ந்து அனுமதிக்க முடியாது. 12 ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிடம் இத்தகையவர்களை விடுதலை செய்யுமாறு எழுதிய கடிதங்களின் பிரதி தற்போதும் என் கைவசம் உண்டு.

அரசின் விசமத்தனமான நோக்கம் பற்றி தற்போதாவது நீங்கள் அறிவீர்களென நினைக்கிறேன். பல்வேறு தரப்பட்ட பொதுமக்கள்ஜே.வி.பி. போன்ற அரசியல் கட்சிகள், இளைப்பாறிய இராணுவத்தளபதி சரத் பொன்சேகா போன்றவர்கள், பௌத்த குருமார்கள், பல்வேறு சமய குருமார்கள் அவர்களின் விடுதலைப் பற்றி விடுக்கின்ற வேண்டுகோளை அரசு உதாசீனம் செய்கிறது.

அரசாங்கம் இக் கைதிகளை ஒரு குறிப்பிட்ட தேவைக்கு துரும்புச்சீட்டாக பிரயோகிக்கக் கூடும் என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுள்ளமையால் தயவு செய்து இவர்களின் உடன் விடுதலையை அரசாங்கத்திடம் கோருங்கள். போர்க்குற்றங்களுக்காக இரு சாராரையும் விசாரணை செய்ய வேண்டுமென்று நீங்கள் விடுத்த கோரிக்கை முட்டாள் தனமானதென தற்போதாவது உணர்கின்றீர்களா? விடுதலைப் புலிகளால் சேர்த்துக்கொள்ளப்பட்ட போராளிகள் கட்டாய நிமித்தம் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதையும் ஏனென்று கேட்கக்கூடிய நிலைமையில் அவர்கள் இருக்கவில்லை என்பதையும் உணர்ந்தீர்களா?

இந்த விடயங்களை மேலும் பின்போட முடியாது. எதுவித தாமதமுமின்றி இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டும். இன்னுமொரு மிக முக்கியமான பிரச்சினை இன்று வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் சம்பந்தமானதே. பல்வேறு துறைகளில் அவர்களை வேலைக்கு அமர்த்தக் கூடியதாக ஆளணி சேர்க்கும் நடவடிக்கையை ஆரம்பியுங்கள். மிக இலகுவாகவும், விரைவாகவும் அவர்களுக்கு திருப்தித்தரக் கூடிய விடயம் யாதெனில் காலியாகவுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை அவர்கள் மூலமாக நிரப்புவதே.

தயவு செய்து நான் கூறியவற்றை பரிசீலனை செய்து விரைவில் உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி பார்க் கியூன் ஹே விரைவில் கைது

## விசாரணை முகாமை நடவடிக்கை

ஊழல் குற்றச்சாட்டுக்களால் தென்கொரிய ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்கப்பட்ட பார்க் கியூன் ஹே விரைவில் கைதாவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென் கொரியாவில் ஜனாதிபதி பார்க் கியூன் ஹே தலைமையிலான அரசின் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் பெருகிவருகின்றன. ஜனாதிபதியின் நெருங்கிய தோழியான சோய் சூன் சில் அரச விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாகவும், அரசின் மிக முக்கிய இரகசிய கோப்புகளை ஆய்வு செய்து வருவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், ஜனாதிபதியுடன் தனக்கு இருக்கும் நெருக்கத்தை பயன்படுத்தி, பல நிறுவனங்களிடம் இருந்தும் நன்கொடைகளை பெற்று, இவர் ஆதாயம் அடைந்து வருவதாகவும் அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் ஆதாரங்களுடன் குற்றம் சுமத்தின.





இதையடுத்து, கடந்த மாதம் முதலாம் திகதி சோய் சூன் சில் கைது செய்யப்பட்டார். மேலும், ஜனாதிபதி பார்க் கியூன் ஹே உடனடியாக பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையுடன் சுமார் 13 இலட்சம் மக்கள் பங்கேற்ற பேரணியும் ஆர்ப்பாட்டமும் சியோல் நகரில் கடந்த ஆண்டில் நடைபெற்றது.

இதையடுத்து, பாராளுமன்றத்தில் பார்க் கியூன் ஹே-வுக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டு இம்மாதம் 10 ஆம் திகதி அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்நிலையில், பார்க் கியூன் ஹே மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அவர் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும். அந்நாட்டின் இலஞ்ச ஊழல் தடுப்பு கண்காணிப்பக விசாரணை முகாமை நோட்டீஸ் அனுப்பி இருந்தது.

அதன்படி, சியோல் நகரில் உள்ள இலஞ்ச ஊழல் தடுப்பு கண்காணிப்பக அலுவலகத்தில் அவர் ஆஜரானார். பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் சுமார் 10 நாட்களுக்கு பின்னர் மக்களிடையே தோன்றிய முன்னாள்ஜனாதிபதியைகாண அவரது ஆதரவாளர்களும், ஊடகவியலாளர்களும் அங்கு குவிந்திருந்தனர்.

விசாரணை அதிகாரிகள் மற்றும் தென்கொரிய அரசின் தலைமை சட்டத்தரணியின் கேள்விகளுக்கு பதிலளித்த பார்க், அந்த காட்சியை வீடியோ படம் எடுக்க வேண்டாம் என கேட்டுக் கொண்டார்.

முதல்நாள் விசாரணை முடிந்து கீழே இறங்கி வந்த பார்க், மக்களிடம் நான் மன்னிப்பு கேட்டு கொள்கிறேன். நடைபெற்று வரும் இந்த விசாரணைக்கு நேர்மையான முறையில் ஒத்துழைப்பு அளிப்பேன் என்று தெரிவித்தார்.

மறுநாளும் அதற்கு அடுத்த நாளும் விசாரணைக்கு ஆஜரான பார்க்கிடம் அதிகாரிகள் துருவித்துருவி கேள்விகளை கேட்டு அவர் மீதான குற்றச்சாட்டை பலப்படுத்தும் ஆதாரங்களை சேகரித்தனர். இதில் கடந்த வாரத்தில் காலையில் விசாரணைக்கு வந்த பார்க்கிடம் மறுநாள் அதிகாலை வரை தொடர்ந்து 22 மணி நேரம் வரை விசாரணை நடைபெற்றது.

அவர் அளித்த வாக்கு மூலங்களின் அடிப்படையில் அவர் மீதான குற்றச்சாட்டுக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதால் முன்னாள் ஜனாதிபதி பார்க் கியூன் ஹே விரைவில் கைது செய்வதற்கான உத்தரவை அந்நாட்டின் தலைமை நீதிமன்றத்தில் இருந்து பெற விசாரணை முகாமை நேற்று முடிவெடுத்துள்ளது.

நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டிய - மிக உயர்வான ஜனாதிபதி பதவியை தவறாகப் பயன்படுத்தி தனியார் நிறுவனங்களிடம் இருந்து பார்க் கியூன் ஹே இலஞ்சம் பெற்றதும், அதற்காக அரச இரகசியங்களை வெளிப்படுத்தியதும் இதுவரை நடைபெற்ற விசாரணையில் தகுந்த ஆதாரங்களின் மூலமாக நிரூபணமாகியுள்ளது.

எனவே, சட்டரீதியான அடுத்தகட்ட நடவடிக்கையாக நீதிமன்றில் இருந்து அவரை கைது செய்வதற்கான பிடியாணை பெறுவதற்கான நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன என விசாரணை முகாமை அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர். இதையடுத்து, பார்க் கியூன் ஹே விரைவில் கைதாவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

## கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) கிளிநொச்சி

## பதவி வெற்றிடங்கள்

கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பின்வரும் பதவிகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி:- களஞ்சிய முகாமையாளர்
சம்பள குறியீட்டு இல:- 208/15
சம்பளத்திட்டம்:- 13,515.00-110x10-120x10-15,815.00

**தகைமைகள்:-**

அ)கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துற்றயிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ)கூட்டுறவு ஊழியர் சாதாரணதரப் பத்திரம்/க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம்/ கணிதம் உடன் சிங்களம்/ தமிழ்மொழி என்பனவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களுடனான சித்தி அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

02. பதவி:- களஞ்சிய முகாமையாளர்
சம்பள குறியீட்டு இல:- 208/16
சம்பளத்திட்டம்:- 13,160.00-105x10-115x10-15,360.00

**தகைமைகள்:-**

அ)கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ)கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரம்/ க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம்/ கணிதம் உடன் சிங்களம்/ தமிழ்மொழி என்பனவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களுடனான சித்தி.

03. பதவி:- எழுதுநர்
சம்பள குறியீட்டு இல:- 302/13
சம்பளத்திட்டம்:- 14,230.00-120x10-130x10-16,730.00

**தகைமைகள்:-**

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ)க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூய கணிதம்/ கணிதம் உடன் சிங்களம்/ தமிழ் மொழி என்பவற்றை உள்ளடக்கிய 05 திறமைச் சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தியும், கூட்டுறவுச் சங்கமொன்றில் இலிகிதர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

04. பதவி:- எழுதுநர்
சம்பள குறியீட்டு இல:- 302/14
சம்பளத்திட்டம்:- 13,875.00-115x10-125x10-16,275.00

**தகைமைகள்:-**

அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ) க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூய கணிதம்/ கணிதம் உடன் சிங்களம்/ தமிழ்மொழி என்பனவற்றை உள்ளடக்கி 05 திறமைச் சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தி.

05. பதவி:- எழுதுநர்
சம்பள குறியீட்டு இல:- 302/15
சம்பளத்திட்டம்:- 13,515.00-110x10-120x10-15,815.00

**தகைமைகள்:-**

அ)கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ) க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூய கணிதம்/ கணிதம் உடன் சிங்களம்/ தமிழ்மொழி என்பனவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றில் இலிகிதர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

06. பதவி:- விற்பனை உதவியாளர்
சம்பள குறியீட்டு இல:- 308/15
சம்பளத்திட்டம்:- 13515.00-110x10-120x10-15,815.00

**தகைமைகள்:-**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரம் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம்/ கணிதம் உடன் சிங்களம்/ தமிழ்மொழி என்பனவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

- ❖ வயதெல்லை 18-45 (சங்கப்பணியாளருக்கு இவ் வயதெல்லை பொருந்தாது)
- ❖ விண்ணப்ப முடிவுத்திகதி:- 12.04.2017

ஏனைய விபரங்கள்:-

- ❖ இப்பதவிகளுக்குரிய அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கமைய இதர படிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- ❖ குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
- ❖ சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ❖ சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி கல்வித்தகைமை சான்றிதழ், சேவைத் தகைமைச் சான்றிதழ், ஏனைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை இணைத்து, தலைவர், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கனகபுரம் கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ 12.04.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். ஏற்கனவே கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்கள் அச்சங்கத்தினூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.

25.03.2017 தலைவர் (சி-7924)
திகதி கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்,கிளிநொச்சி.

# மக்களை மறக்கும் அரசியல்வாதிகளுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள்-நிலூகா



மக்களை மறக்கும் அரசியல்வாதிகளுக்கு மக்கள் தக்க சமயத்தில் பாடம் புகட்டுவார்கள் என மத்திய மாகாண ஆளுநர் நிலூகா ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கம் ஒழுங்கு செய்திருந்த சர்வதேச மகளிர் தின விழா நேற்று முன்தினம் ஹற்றன் டி.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் வருந்தும் போது. மக்கள் துயரடையும் போது. மக்கள் அழும் போது அரசியல் வாதிகள் எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்பது தொடர்பில் பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் அண்மையில்ஆய்வினை மேற்கொண்டதாகவும் அதில் அரசியல்வாதிகள் இரண்டாம் இடத்தில் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## களுத்துறை துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

# சந்தேகநபரின் வீட்டிலிருந்து 40 துப்பாக்கி ரவைகள் மீட்பு

களுத்துறையில் சிறைச்சாலை பேருந்து மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் ரி-56 ரக துப்பாக்கி மற்றும் 40 துப்பாக்கிரவைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.பத்தரமுல்ல - தலங்கம பகுதியில் கைதுசெய்யப்பட்ட பிரதான சந்தேக நபர்களில் ஒருவரான பண்டியின் வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 RC<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:Sofware Developer<br>தொ.இ: B/5310 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 3 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: G/5013 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா:41<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:NCT, NCED/ அரசதொழில்<br>தொ.இ: B/3580 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 11செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5024 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 36<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/3594 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 28 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ:G/5036 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 37சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/கனடா<br>தொ.இ: B/3620 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 24<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ:G/5040 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.



# சிறுவர் அரங்கம்

## யார் அழகு

ஓரிடத்தில் இருந்த எலி, முயல், குரங்கு, வெட்டுக்கிளி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகி வந்தன. ஆனாலும் அவைகளுக்குள் அழகு குறித்து அடிக்கடி விவாதங்கள் எழும். ஒவ்வொன்றும் தன் பெருமையைப் பறைசாற்றும் விதத்தில் பேசும். முயல் மட்டும் மௌனமாக இருக்கும்.

"நம் நால்வரில் நான் தான் மிக அழகு! மனிதர்கள் கூட எங்கள் இனத்திலிருந்துதான் தோன்றியதாகச் சொல்வார்கள்!" குதித்துக் குதித்து நடனமாடியபடி சொல்லியது குரங்கு.


"நாங்கள் மனிதர்களின் வீட்டுக்குள்ளே புத்திசாலித்தனமாக ஒளிந்தும் வாழ்கிறோம்! எங்களிடம் அழகும் அறிவும் இருக்கிறது. எனவே நான் தான் அழகு தேவதை!" என்றது எலி. "மனிதர்கள் திட்டும் போது குரங்கு முகம், எலி முகம் என்று கூட உங்களைப் பற்றிக் கூறுவார்கள்! நான் சிறிய உருவமாக இருந்தாலும் கிளியின் நிறத்தில் அதைப் போன்றே அழகாக இருக்கிறேன்!" பெருமிதம் பொங்கக் கூறியது வெட்டுக்கிளி.

"நான் இந்த அழகுப் போட்டிக்கே வரவில்லை!" முயல் சொல்ல, மூன்றும் சேர்ந்து சிரித்தன. முயல் மெதுவாக அவ்விடத்தை விட்டு அகன்றது. "என்ன இருந்தாலும் வெள்ளை வெளேரென்று முயல் ஓடி வரும் அழகே தனிதான்!" குரங்கு சொல்லியது "ஆமாம்... ஆமாம்...!" ஒப்புக் கொண்டது வெட்டுக்கிளி.

"நிறமும் அழகும் மட்டும் இருந்தால் போதுமா? அறிவு, புத்திசாலித்தனம் எல்லாம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அழகியாக ஏற்றுக் கொள்ள முடியும்" என்றது எலி. "எனக்கொரு யோசனை தோன்றுகிறது! நமக்குள்ளே ஓர் அழகிப் போட்டி நடத்தினால் என்ன?" கேட்டது வெட்டுக்கிளி. "போட்டி நடத்தலாம். ஆனால் நடுவர் யார்?" சந்தேகம் எழுப்பியது எலி. "நடுவராக நானிருக்கிறேன்!" திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. அனைத்தும் மேலே பார்க்க, மரத்தின் மீது ஒரு காகம் இருந்தது.

"நீங்கள் எப்படி?" ஆச்சரியப்பட்டது குரங்கு. "நீங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். முயலையும் அழைத்துக் கொண்டு நாளை என் இருப்பிடம் தேடி வாருங்கள். ஆனால் நான் தேர்ந்தெடுப்பவரை அழகு ராணியாக அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ள வேண் டும்!" என்று காகம் தன் முகவரி கூறியது. "அப்படியே செய்கிறோம்..." அனைத்தும் சேர்ந்து குரல் கொடுத்தன. மறுநாள் அனைத்தும் அழகிய அழகு ராணி கனவில் மிதந்து காகத்தைத் தேடி போய்க் கொண்டு இருந்தன.

அப்பொழுது குருவி ஒன்று வலியால் துடித்துக் கொண்டிருந்தது. அதன் கால்களில் காயம் தெரிந்தது. "எனக்கு யாராவது ஒருவர் உதவி செய்யுங்களேன். ஒரு சிறுவன் கல்லெடுத்து எறிந்து காலில் காயப்படுத்தி விட்டான்!" குருவி பலவீனமாக உதவி கேட்டது. "நாங்கள் அழகிப் போட்டிக்குப் போய்க் கொண்டு இருக்கிறோம். அபசகுனமாக பேசாதே!" கடுமையாக கூறியது குரங்கு.




குருவியைப் பார்த்த எலியும், வெட்டுக்கிளியும் முகத்தை திருப்பி சென்று விட்டன. முயல் குருவி அருகே தயங்கி நின்றது.

பின்னர் அவசர அவசரமாக மருந்து தேடிக் காலில் வைத்து விட்டு அழகிப்போட்டிக்கு சென்றது. அழகிப் போட்டி தொடங்கியது. குறித்த நேரத்திற்கு முயல் மட்டும் செல்லவில்லை. மீதி மூன்றும் மனசுக்குள் மகிழத் தொடங்கின.

"அழகுக்கும் அறிவுக்கும் மதிப்பெண் போட்டு விட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப் பெண்கள் கொடுப்பேன்! இதற்குத்தான் அதிக மதிப்பெண்கள் ஒதுக்கி இருக்கிறேன்!" காகம் கூறியதும் குருவிக்கு உதவாத மூன்றும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. அப்பொழுது அறக்கப் பறக்க முயல் ஓடி வந்தது.

"முயல்தான் அழகு ராணி! இதை அழகுராணியாகத் தேர்வு செய்வதற்காக நான் பெருமைப்படுகிறேன்! குருவி என் நண்பன் தான்! ஒரு ஆபத்திலிருந்து முயல் காப்பாற்றியதாக சற்று முன்பு தான் குருவி கூறியது.

அப்பொழுது மூவரும் உதவாமல் சென்றது பற்றியும் சொல்லி வருத்தப்பட்டது! உதவும் நல்ல மனசு உள்ளவர்கள்தான் உண்மையில் அழகானவர்கள்!" காகம் கூறியதும் எலி, வெட்டுக்கிளி, குரங்கு ஆகியவற்றின் முகங்கள் அஷ்ட கோணலாகின.

நீதி : நம் யாருக்காவது உதவி செய்தால் அது ஒருநாள் நமக்கு எதிர்பாரத பயனைத்தரும்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

03.2017 28

- 193 - ரோம் பேரரசன் பேர்ட்டினாக்ஸ் படுகொலை செய்யப்பட்டான்.
- 845 - ரக்னார் லொட்புரொக் என்பவனின் தலைமையில் நடந்ததாகக் கருதப்படும் வைக்கிங் தாக்குதல்களுக்கு பாரிஸ் அடி பணிந்தது.
- 1802 - ஓல்பேர்ஸ் என்பவர் 2 பேலெஸ் என்ற சிறுகோளைக் கண்டுபிடித்தார்.
- 1809 - மெடெலின் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் பிரான்ஸ் ஸ்பெயினை வென்றது.
- 1879 - ஆங்கிலோ-சூலு போர்: பிரித்தானியப் படைகள் ஹுலோபேன் நகரில் இடம் பெற்ற சமரில் படுதோல்வியடைந்தனர்.
- 1930 - கொன்ஸ்டன்டீனபில், அங்கோரா ஆகியன இஸ்தான்புல் மற்றும் அங்காரா எனப் பெயர் மாற்றம் பெற்றன.
- 1939 - ஸ்பானிய உள்நாட்டுப் போரில் பிரான்சிஸ்கோ பிராங்கோ மாட்ரிட் நகரைக் கைப்பற்றினான்.
- 1979 ஐக்கிய அமெரிக்காவில் பென்சில்வேனியா மாநிலத்தில் ஓடும் ஸஸ்குவான ஆற்றின் கரையில் உள்ள மிடில்டன் நகரில் அணுமின் நிலையத்தில் விபத்து ஏற்பட்டது.
- 1994 - தென்னாபிரிக்காவில் சூலு இனத்தவர்களுக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் இடையில் ஜோகர்னஸ்பேக் நகரில் இடம்பெற்ற கைகலப்பில் 18 பேர் கொல்லப்பட்டனர்.
- 1988 - ஹலப்ஜா நகரின் குர்திய இன மக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டதில் சுமார் 5 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டது.
- 2005 -இந்தோனேசியாவின் சுமாத்ராவில் இடம்பெற்ற 8.7 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தினால் 1,300 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புக்கள்

- 1862 - அரிஸ்டைட் பிறயண்ட், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1932)
- 1868 - மாக்சிம் கார்க்கி, ரஷ்ய எழுத்தாளர (இ. 1936)
- 1892 - கோர்னெயில் ஹைமான்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1968)
- 1919 - டி. கே. பட்டம்மாள், கர்நாடக இசைப் பாடகி (இ. 2009)
- 1930 - ஜெரோமி பிரீட்மான், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1982 - சோனியா அகர்வால், இந்தியத் திரைப்பட நடிகை

இறப்புக்கள்

- 1943 - எஸ். சத்தியமூர்த்தி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர்
- 1982 - வில்லியம் ஜியோக், நோபல் பரிசு பெற்ற கனேடியர் (பி. 1895)
- 2006 - வேதாத்திரி மகரிஷி, தத்துவஞானி (பி. 1911)

சிறப்பு நாள்

சிலோவாக்கியா, செக்குடியரசு - ஆசிரியர் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 60 | 100 | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 90 | 100 | 120 | 150 | 100 |
| தக்காளி | 120 | 100 | 90 | 100 | 100 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 50 | 100 | 20 | 40 | 40 | 60 | 40 |
| கரட் | 100 | 100 | 80 | 100 | 100 | 120 | 70 |
| பூசணி | 80 | 100 | 30 | 60 | 60 | 80 | 60 |
| புடோல் | 80 | 100 | 50 | 100 | 60 | 200 | 60 |
| வாழைக்காய் | 80 | 80 | 50 | 60 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 80 | 60 | 80 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 75 | 90 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 400 | 110 | 200 | 200 | 200 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 80 | 100 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | - | 60 | 80 | 100 | 60 |
| பயற்றங்காய் | 180 | 100 | 110 | 100 | 100 | 200 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 60 | 80 | 80 | 120 | 60 |
| பீற்றூட் | 60 | 100 | 40 | 60 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 150 | 100 | 80 | 200 | 120 | 200 | 60 |
| முருங்கைக்காய் | 400 | 100 | 400 | 300 | 280 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 100 | 50 | 200 | 160 | 200 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 30 | 40 | 60 | - | 60 | 60 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 20 | 30 | 30 | 40 | 60 |
| தேசிக்காய் | 80 | 80 | 100 | 100 | 70 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 50 | 70 | 70 | 40-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | 180 | 200 | 200 | 200 | 140 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 40 | 100 | 100 | 200 | - |
| முள்ளங்கி | 60 | 100 | 25 | 60 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 100 | 15 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 60 | 50 | 100 | - |

தமிழனை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.
– தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களே! அவர் சொல்வது சரியா?

மூன்றாவது தரப்பால் பிரச்சினைகள் தீராது. அரசுடன் பேசியே தீர்வைப் பெற முடியும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணை தேவை. எமது விடயத்தில் சர்வதேசம் தலையிட வேண்டும். சர்வதேச அழுத்தம் இருந்தால் மட்டுமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்றெல்லாம் தமிழ் மக்கள் குரல் எழுப்பி நிற்கையில்,

தமிழினத்துக்கு துரோகம் செய்வது போல தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம்; சர்வதேசத் தலையீடு தேவையில்லை. நாங்கள் அரசுடன் பேசியே பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று சொல்லியுள்ளார் எனில்,

இவருக்கும் கருணா அம்மானுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? என்று கேட்பதை விட வேறு வழிதெரியவில்லை.

அரசுடன் பேசியே பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று துரைராஜசிங்கம் இப்போது கூறுவதை கருணா அம்மான் சற்று முன் கூட்டியே செய்துள்ளார் என்று கூறுவதில் என்ன தவறுண்டு?

தமிழினம் அழிவதற்கும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கும் கருணா அம்மான் காரணம் என்று தமிழ் உலகம் குறை கூறுகிறது.

ஆனால் கருணா அம்மானின் அதேநிலைப்பாட்டை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த துரைராஜசிங்கம் செய்கிறார் என்றால்,

விடுதலைப் புலிகளில் இருந்து விலகி இலங்கை அரசாங்கத்துடனும் இலங்கைப் படையினருடனும் கருணா அம்மான் இணைந்து செயற்படுவதற்கு மேற்குறிப்பிட்ட நபர்களின் சிந்தனைகளும் கருத்துக்களுமே காரணமாக இருந்துள்ளன என்று எண்ணுவதில் தவறில்லை.

இலங்கை அரசாங்கத்துடன் பேசித் தீர்க்கலாம் என்றால், இதுவரை காலத்தில் என்ன பேசித் தீர்த்தீர்கள்.

வருடக் கணக்கில் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க முடிந்ததா?

காணாமல்போனவர்களின் உறவுகள் இன்று வரை அழுது புலம்பி அந்தரிக்கும் அவல வாழ்வுக்கு முடிவு கிடைத்ததா?

தமது சொந்த மண்ணில் குடியமர ஏங்கும் அப்பாவித் தமிழ் மக்களுக்குத் தீர்வுதான் காணப்பட்டதா? எதுவும் இல்லாத போது அரசுடன் பேசுவதன் மூலமே பிரச்சினையைத் தீர்க்க முடியும். மூன்றாவது தரப்பால் பிரச்சினை தீர்க்க இயலாது என்று நாக்கூசாமல் சொல்லுகின்ற படுதுரோகத்தனத்தை பார்த்திருக்கும் பரிதாபத்திலேயே தமிழ் மக்கள் இப்போது இருக்கின்றனர்.

சம்பந்தனைப் புகழ்வது தேவையென்றால் புகழுங்கள். அவசியமாயின் அவர் முன் அட்டாங்க நமஸ்காரம் செய்யுங்கள். இது உங்களின் சீவியத்துக்கு ஆதாரமாக இருக்கும்.

இதைவிடுத்து சர்வதேச விசாரணை தேவை என்று வலியுறுத்துகின்ற வேளையில் அதற்கு நாசம் விளைவிக்கும் வகையில் கருத்துரைப்பதைத் தயவுசெய்து தவிர்த்துக் கொள்ளுங்கள்.

நான்கு பிள்ளைகள், மூன்று பிள்ளைகள், இரண்டு பிள்ளைகள் என்று போரில் பலிகொடுத்து வயிற்றில் நெருப்பைக் கட்டி வாழும் வயோதிப் பெற்றோர்களின் மனநிலையை இம்மியும் உணர்ந்து கொள்ள முடியாத பிரகிருதிகள் மத்தியில் எங்கள் தமிழினம் எப்படித் தப்பிப் பிழைக்கப் போகிறது?

ஆ! கடவுளே அரசுடன் பேச்சு நடத்தி தங்களுக்கு வாகனம் பெற்றதை, வாகனத்துக்கான அனுமதிப் பத்திரம் கிடைத்ததை நல்லாட்சி நல்லது செய்கிறது என்று கூறுவோரை என்ன செய்வோம் இறைவா!

தந்தை செல்வாவின் வார்த்தையைத் தவிர வேறேதுமில்லை என்பதே உண்மை.

# தேர்தலை தொடர்ந்து ஒத்திவைத்தால் அரசிற்கு எதிராகப் பாரிய போராட்டம்

## கூட்டு எதிர்க்கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் தொடர்ந்தும் தேர்தலை ஒத்திவைத்தால், 1953 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஹர்த்தாலை விட மிகப் பெரிய மக்கள் போராட்டத்தை நடத்த எண்ணியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பிவித்துரு ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாரிய போராட்டத்தை நடத்துவதற்காக நாட்டை தயார்படுத்தி வருவதாகவும் அதனை நுகேகொடையில் நடைபெற்ற கூட்டத்தில் இருந்தே ஆரம்பித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இரண்டாம் கட்ட நடவடிக்கை கடந்த சனிக்கிழமை ஹபராதுவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டது.

அடுத்த கட்ட எதிர்ப்பு கூட்டத்தை கிழக்கு மாகாணத்தில் நடத்த எண்ணியுள்ளோம்.

அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் கூட்டத்தை நடத்தும் இடம் சம்பந்தமாக சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (இ-7)

# அடுத்த நூற்றாண்டை வெற்றிகொள்ளும் சவால் பிள்ளைகளுக்கு இருக்கிறது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கடந்தகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அடுத்த நூற்றாண்டை தேசிய, சர்வதேச ரீதியில் வெற்றிகொள்ள வேண்டிய பொறுப்பு பிள்ளைகளுக்கு இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இரத்தினபுரி பெர்குஷன் உயர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் வரலாறும், வாழ்க்கை வரலாறும் அந்த நாட்டினதும் வாழ்க்கையினதும் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதற்கு சாட்சியாக இருப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, பணத்தின் அடிப்படையில் அனைத்து விடயங்களையும் தீர்மானிக்கும் தற்போதைய சமூகத்தின்பரீட்சையைப்போன்றே வாழ்க்கையிலும் வெற்றி பெறவேண்டிய சவாலை நாம் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள பாடசாலை பிள்ளைகள் பரீட்சையில் சித்தியடைவதில் முன்னிலையில் இருந்த போதிலும், அவர்களது ஒழுக்கம் தொடர்பில் திருப்தியடைய முடியாதுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி பிள்ளைகளின் ஒழுக்கம் தொடர்பில் வளர்ந்தோரும் கவனம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை நாட்டுக்கு சொல்லும் வகையில் அண்மையில் சில சம்பவங்கள் நடந்துள்ளன.

பெர்குஷன் உயர் கல்லூரியின் நூற்றாண்டு விழா முத்திரை வெளியிடப்பட்டதுடன் பாடசாலையில் திறமைகளை வெளிக்காட்டிய மாணவிகளுக்கான பரிசளிப்பு விழாவிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

உள்ளக விளையாட்டரங்கையும் ஜனாதிபதி திறந்து வைத்து, கண்காட்சிக் கூடத்தையும் பார்வையிட்டார். (இ-3)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**வீட்டில் எந்தவிதமான விளக்கை ஏற்ற வேண்டும்?**

விளக்குகள் பலவிதம் உண்டு. பித்தளையில் தயாரிக்கப்படும் விளக்குதான் மிகவும் சிறந்தது. பழைய காலத்தில் பித்தளையில் செய்த விளக்கைத்தான் அனைவரும்பயன் படுத்தினார்கள். இக்காலத்தில் ஸ்டீல் விளக்கு, வெள்ளி விளக்குமுதலியவை உண்டு. மாலை வேளையில் விளக்கேற்றுவதற்கும் விசேட நாட்களில் விளக்கேற்றுவதற்கும் தொடக்க விழாக்களுக்கும்திருமணம்போன்ற சடங்குகளுக்கும் பித்தளையில் தயாரிக்கப்பட்ட விளக்குகளையே பயன்படுத்துகிறார்கள்.




விளக்குகளில் குத்துவிளக்கு (சாதாரண விளக்கு, ஐந்து திரி விளக்கு, ஏழு திரி விளக்கு), தொங்கும் விளக்கு, கோல்விளக்கு, சங்கிலிவட்ட விளக்கு என்று பல வகைகள் உண்டு. வீடுகளில் மாலை நேரங்களில் விளக்கேற்றுவதற்கு குத்துவிளக்கைப் பயன்படுத்துகிறார்கள். சிலர் ஐந்து திரி விளக்கேற்றுவார்கள். கோல் விளக்கு கோவில்களில் இறைவன் எழுந்தருளும் வேளைகளில் ஏற்றிவைப்பார்கள்.

தொங்கும் விளக்குகளைச் சாதாரணமாக வீடுகளில் ஏற்றுவதில்லை. இவை பொதுவாக கோவில்களில் மட்டுமே ஏற்றப்படும். அட்டமங்கள காரியங்களுக்கு சங்கிலிவட்ட விளக்குகளைப் பயன்படுத்துகிறார்கள்.

(தொடரும்)

## சாஸ்திரங்கள்

✦ காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் கிழக்கு முகமாக நின்று "ஹரி ஹரி" என்று ஏழு முறை சொன்னால் முந்திய நாளில் செய்த சகல தோஷங்களும் இல்லாமற் போய்விடும். எந்தப் பாதகங்களும் அணுகாது.

-ஸ்ரீரங்க மகாத்மியம்

✦ தெய்வபூஜை நனைந்த பூக்களால் செய்ய வேண்டும். உலர்ந்தவை உதவா.

-சுந்தரர்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை வவுனியா பிரதேசத்தில் நெடுங்குளத்திலிருந்து பதவியா வரை, பொகவஸ்வேவ, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் வட்டுப்பித்தன் மடு, புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ நமது நாட்டுக்குத் தேவையானது இதுவே. பொறுமையாயிருங்கள். மரணம் வரை நன்றியோடிருங்கள். உங்களுக்குள்ளே சண்டை போடாதீர்கள். பணவிடயங்களில் முற்றும் தூய்மையாக இருங்கள். நம்பிக்கையும் நேர்மையும் பக்தியும் உங்களிடம் உள்ளவரையில் எல்லாம் முன்னேற்றமடையும்.

❖ உங்களுக்குள் பிளவு உணர்ச்சி ஏற்படாதவரையில் இறைவனருளால் உங்களுக்கு அபாயமில்லை என்று நான் உறுதி கூறுவேன். நிச்சயமாக நன்மை விளையும் என்று உணராமல் உங்கள் மனத்தில் உள்ளதை வெளியிட வேண்டாம்.

❖ மிகப் பெரிய எதிரியாயிருந்தாலும் அவனிடமும் அன்பு நிறைந்த இதமான மொழிகளையே பேசுங்கள். எல்லாப் பெருக்கமும் வாழ்வு; எல்லாச் சுருக்கமும் சாவு. எல்லா அன்பும் பெருக்கம்; எல்லாச் சுயநலமும் சுருக்கமே. எனவே வாழ்வைப் பற்றிய ஒரே விதி அன்பே.

# புதுக்குளம் ஈஸ்வரன் அணியை வீழ்த்தி சம்பியனாகியது வவுனியா யங்ஸ்ரார்





வவுனியா உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஒழுங்கமைப்பில் நெதர்லாந்து நாட்டை சேர்ந்த Quality Supply நிறுவனத்தின் அனுசரணையுடன் அணிக்கு ஒன்பது பேர்கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வைரவர் புளியங்குளம் சிறுவர் பூங்காவில் அண்மையில் நடைபெற்றுது.

இந்தப்போட்டியில்வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் புதுக்குளம் ஈஸ்வரன் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சையில் மோதின.

இப் போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணியை சேர்ந்த வீரரான குகன யங்ஸ்ரார் அணி சார்பில் கோல் ஒன்றை போட்டு 1:0 என்ற கோல்கணக்கில் யங்ஸ்ரார் அணியை முன்னிலைப்படுத்தினார்.

அடுத்த பாதி ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியினர் கடுமையாக போராடியும் துரதிர்ஷ்ட வசமாக எந்தவித கோல்களையும்போடமுடியவில்லை.

போட்டி நிறைவில் யங்ஸ்ரார் அணியினர் 1:0 என்ற கோல்கணக்கில் போட்டியை வென்று சம்பியன் பட்டத்தை தமதாக்கிக் கொண்டனர்.

கிராம உத்தியோகத்தர் யோகராசா தலைமை தாங்க பிரதம விருந்தினராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரவீந்திர சில்வாவும் அவரது குழுவினரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக் களின் பிரதி அவைத் தலை வருமான செல்வம் அடைக் கலநாதன் சார்பில் வடமா காணசபை உறுப்பினர் புவனேஸ்வரன், வடமா காண சுகா தார அமைச்சர் ப.சத்தியலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் கலந்து கொண்டுள்ளனர்.

அத்துடன், இணைய தலைவர் ஜனகன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் கண்ணன்,சிறீரெலோ கட்சியின் இளைஞரணி தலைவர் ப.கார்த்திக்,வவுனியா துடுப்பாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரதீபன் மற்றும் வவுனியா உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் யோன்சன்,செயலாளர் ராஜன் ஸ்ரீப் ஆகியோர்கலந்து கொண்டுள்ளனர்.

## 98 ஆவது சுதேசிய கொண்டாட்ட

# வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அரியாலை சரஸ்வதி சம்பியன்




அரியாலை 98வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் 25.03.2017அன்று நிலைய மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் வலைப்பந்தாட்டப் போட்டியின்இறுதிப் போட்டியில் திருமகள்சனசமூக நிலைய அணியினை எதிர்த்து அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணி மோதியது. பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் திருமகள்சனசமூகநிலைய அணியினை14:10என்றபுள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம். (க)

## அல்வாய் இளைஞர் அணியை வீழ்த்தி வெள்ளிருவை இறுதிப்போட்டிக்கு தகுதி



பிரித்தானியா,சுவிட்சர்லாந்து ஒன்றியங்களின் ஏற்பாட்டில் அல்வாய் விளையாட்டு விழா (25.03.2017) அன்று இரவு 7 மணியளவில் பெரியார் பகுதி அறிவருள் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகியது. தொடர்த்து நடைபெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஏ பிரிவில் 9 அணிகள் பங்குபற்றின. முதலாவது போட்டியில் உதய சூரியன் அணியை 8-22 செற்கணக் கிலும், இரண்டாவது போட்டியில் நாவலடி கலைமகள் அணியை 8-12 என்ற செற்கணக்கிலும் பரபரப்பான அரையிறுதிப் போட்டியில் அல்வாய் இளைஞர் அணியை 10-11 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு வெள்ளிருவை அணி தகுதிபெற்றுள்ளது. (க)

## பலாலி விண்மீன் வெற்றி



யாழ்ப்பாணம்,வலிகாமம்,பருத்தித்துறை, வடமராட்சி தீவக லீக்குகளின் அனுமதியுடன் நடை பெறும் "புதிய விடியல்-2017" உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 25.03.2017 அன்று நடைபெற்ற ஆட்டத்தில் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதிக் கொண்டது. ஆட்டம் விறுவிறுப்பை எட்டும் நேரத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் முதலாவது கோலினை பதிவு செய்தது. பதிலுக்கு வேகம் கொண்ட விண்மீன் பதிலுக்கு ஒரு கோலினைப்போட்டு சமப்படுத்தியது. ஆட்டம் முடிவில் 01:01 என்ற நிலையில் சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதிக்குள் நுழைந்தது பலாலி விண்மீன். (க)

# வல்வை விளையாட்டுக்கழகத்தின் பெண்களுக்கான மரதன் ஓட்டம்





வல்வை விளையாட்டுக் கழகத்தின் 57 ஆம் ஆண்டு நிறைவையொட்டி பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன.

இதன் வரிசையில் கடந்த சனிக்கிழமை ஆண் மற்றும் பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி இடம் பெற்றது.

பெண்களுக்கான மரதன் ஓட்டம் பொலிகண்டி சந்தியில் ஆரம்பித்து வல் வெட்டித்துறை தொண்டை மானாறு வீதியூடாக வல் வெட்டித்துறை ஆலடி வந்தடைந்து மீண்டும் வல்வெட்டித்துறை சந்தியை வந்தடைந்தது.

மரதன் ஓட்டப்போட்டியில் 14 பெண்கள் பங்குபற்றி அனைவரும் ஓட்டத்தினை நிறைவு செய்திருந்தார்கள். முதலாம் இடம் பி.பிருந்திகா- 2 Km 600m தூரத்தினை 11 நிமிடம் 36 செக்கனில் நிறைவு செய்திருந்தார் (ரேவடி நேதா ஜி விளையாட்டுக்கழகம்)

இரண்டாம் இடம் அ.கார்த்திகா- 2 Km 600m தூரத்தினை 11 நிமிடம் 39 செக்கனில் நிறைவு செய்திருந்தார் (உதய சூரியன் விளை யாட்டுக் கழகம்).

மூன்றாம் இடம் சி.பவித்திரா 2 Km 600m தூரத்தினை 12 நிமிடம் 46 செக்கனில் நிறைவு செய்திருந்தார் (இளங்கதிர் விளையாட்டுக்கழகம்) (க)

## பனிப்போர்...

த்தவரை ஆரோக்கியமானதொன்றல்ல என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸின் பொதுச் செயலாளர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

தமிழினத்திற்கு எதிரான சக்திகளுக்கு தமிழினத்தின் ஒருமைப்பாடு இன்மையைக் காட்டிக்கொடுப்பதாக இது அமைந்துவிடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழர் மீதான போர்க்குற்றங்கள் எனும் விடயத்தில் இலங்கைக்கு மீண்டும் கால அவகாசம் வழங்குவது எம்மை நாம் ஏமாற்றுவதாக அமைந்துவிடக்கூடாது என்று வலியுறுத்திய அவர்,

தங்களது தலைவர் குமார் பொன்னம்பலம், அரசியலில் நேர்மை இருக்க வேண்டும், முதலில் நாம் எமக்கு நேர்மையாக இருக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவார் எனறும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆரோக்கியமான எதிர்கால நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டிருக்கும் இன்றைய நிலை குறித்த கவலை வெளியிட்டுள்ள குமரகுருபரன்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புகுள் கலந்துரையாடி பெரும்பான்மையுடனான ஜனநாயக முடிவை கூட்டுப்பொறுப்புடன் எடுத்து செயற்பட வேண்டியது தலைமையின் கடமையாகும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ரெலோ தலைமை, புளொட் தலைமை, ஈ.பி.ஆர்.எல்.எப் தலைமை ஆகியன ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கும் அதேவேளை வடமாகாண முதலமைச்சர் உள்ளிட்ட மாகாண பிரதிநிதிகளும் இதனையே ஆதரிக்கின்றனர் என்றும் ...ர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் வேறு நிலைப்பாட்டை எடுத்து இலங்கைக்கு மீண்டும் இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்குவது சாணக்கியம் என்று கருதுமாயின், அதனைப் பற்றிய தெளிவான விளக்கத்தை மக்களை ஈர்க்க வல்ல மூத்த தலைவர்களான இரா.சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா போன்றவர்கள் நேர்மையுடன் எடுத்துரைக்க வேண்டும் எனவும் இதுவே மக்கள் பிரதிநிதிகளின் தலையாய கடமையாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## மக்களின்...

என தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மக்களுடைய போராட்டங்களுக்கு ஜனாதிபதியோ ...லது முக்கிய அமைச்சர்களோ உரிய முறையில் பதிலளிக்க வேண்டும் எனவும் இலங்கை மற்றும் மாலை தீவுகளுக்கான சுவிற்சரலாந்து நாட்டின் தூதுவர் ஹைன்ஸ் வால்கர் நெடேர்கூர்னிடம் எடுத்து கூறியுள்ளார்.

யாழ்.கோவில் வீதியில் அமைந்துள்ள முதலமைச்சரது வாசஸ்தலத்தில் நேற்று பிற்பகல் 5 மணியளவில் சுவிஸ் தூதுவருக்கும் வடக்கு முதலமைச்சருக்குமிடையில் சந்திப்பொன்று நடைபெற்றது. இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டவை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நாயாறு, கொக்குளாய், கொக்குத்தொடுவாய் போன்ற பிரதேசங்களில் அண்மையில், 250க்கு மேலான சிங்கள மீன்பிடியாளர்கள் அத்து மீறிய மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர். இதற்கு மீன்படி அமைச்சின் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளதாக அறிய முடிகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் மக்களிடையே மேலும் மேலும் பிரச்சனைகளை அதிகரிக்க கூடியது என சுட்டிக்காட்டியிருந்தேன்.

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, போன்ற இடங்களில் தமது உறவினர்கள் எங்கே என்றும், தமது காணிகளை விடுவிக்குமாறும் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால் அது சம்பந்தமாக மத்திய அரசாங்கம் கரிசனைகளை காட்டாமல் இருக்கின்றது. இது தொடர்பில் தான் அறிந்துள்ளதாக தூதுவர் கூறியிருந்தார். பொதுவாக வடக்கு மாகாணத்தில் தற்போது நடந்து கொண்டிருக்கும் நிலையைதான் தூதுவர் கேட்டார். அதற்கு நான், மக்கள் தமது உரிமைகளை பெறுவதற்கு ஒரு உற்சாகத்தை பெற்றுள்ளனர். தமது உரிமைகளுக்காக போராட ஆரம்பித்துள்ளார்கள். இதுவரை காலமும் அவர்களை அடக்கி வைத்திருந்தார்கள். தற்போது ஜனநாயக சூழல் என்பதால் அவர்கள் தமது உரிமைகளை போராட்டத்தின் மூலம் பெற ஆரம்பித்துள்ளார்கள்.

இது ஒரு நல்ல சமிக்ஞையாக இருந்தாலும் அரசாங்கம் அதற்குரிய போதுமான நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பது வருத்தமளிக்கின்றது. ஒருமாத காலமாக தமது போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில், அரசு இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என கோரியிருந்தேன். இவை தொடர்பில்தான் அரசாங்கத்துடன் பேசுவதாக தூதுவர் கூறியிருந்தார்.

எங்களை பொறுத்தவரையில் மற்றைய மாகாண முதலமைச்சர்களோடு நானும் அரசோடு பேச வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தார். வடக்கில் நடப்பது தெற்கில் உள்ளவர்களுக்கு தெரிவதில்லை எனவும் அவர் கூறியிருந்தார். அவர்களுக்கு வடக்கில் உள்ளவர்களின் கருத்துக்கள் சென்றடைய வேண்டும் எனவும், அதற்கு ஏற்றது போன்ற ஒரு சூழலை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் எனவும் கூறியிருந்தார். எனினும் மக்களுடைய போராட்டங்களுக்கு அரசாங் கம பதிலளிக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கையாக இருந்தது. இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றும் அனுப்பியுள்ளதாக முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார். (செ-4)

## ரஜினி...

தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. நேற்று மாலை மூன்று மணியளவில் இந்த போராட்டம் நடைபெற்றது.

இந்த போராட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் ஈடுபட்டிருந்த போதிலும், போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த அனைவரும் வவுனியா மாவட்டத்தை சேர்ந்தவர்களாகவே காணப்பட்டார்கள். மேலும் போராட்டத்தின் ஒருங்கிணைப்பு ஈழ கலைஞர்கள் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தாம் குறித்த போராட்டத்தை புறக்கணித்துள்ளதாக கலைஞர்கள் பலர் அறிவித்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எமது தலைவன் எம்மை பார்ப்பதனை யாரும் தடுக்க முடியாது, கலையை கலையாக பாருங்கள் அரசியலாக்க வேண்டாம், எங்கள் தலைவன் எங்களை பார்ப்பதற்கு தடைவிதிக்க நீங்கள் யார்? அபிவிருத்தி எங்களுக்கு அவசியம், கேப்பாப்பிலவு மக்களுடைய காணிகளை விடுவியுங்கள், சுயநலவாதிகளே ஈழத்தமிழர் விடயத்தில் தலையிடாதீகள் என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இந்த போராட்டம் நடைபெற்று கொண்டிருக்கும் போது குறித்த இடத்தில் கூடிய ஒருசில யாழ்ப்பாணத்து இளைஞர்கள் இங்கு மக்கள் தமது வாழ்விட காணிகளுக்காக போராடி கொண்டுள்ளார்கள் அதற்காக நீங்கள் போராடவில்லை, இறுதி யுத்தம் நடைபெற்று கொண்டிருக்கும் போது உங்கள் தலைவர்கள் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அவர் இங்கு வர வேண்டும் என நீங்கள் போராடுகின்றீர்கள்.

உங்கள் உறவுகளோடு அவர்களின் உரிமைக்காக போராடுங்கள் என கூறி ஆர்ப்பாட்டக்காரர்களோடு முரண்பட்டிருந்தனர். இதனால் அவ்விடத்தில் சற்று பதற்றம் நிலவி காணப்பட்டது. எனினும் குறித்த ஆர்ப்பாட்டம் குறுகிய நேரமே நடைபெற்றமையால் குழப்பம் தொடராது போராட்டம் நடைபெற்று முடிந்தது. (செ-4)

## சந்திரிகா தெரிவித்தது...

சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க படையினரை தண்டிகக போவதில்லை என உங்களுடைய கோரிக்கையை நிராகரித்து பேசியிருந்தார். இது தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் தமது அரசியல் நன்மை கருதி பல கருத்துக்களை வெளியிடுவார்கள். ஆனால் அவர் குறிப்பிட்டது புதுமையான விடயம் ஒன்றல்ல, ஜனாதிபதியும் பிரதமரும் அவ்வாறுதான் கூறியுள்ளார்கள். இதே கருத்தை முன்னாள் ஜனாதிபதியும் குறிப்பிட்டிருந்தார். இந்த அரசாங்கம் போரிலே வெற்றிபெற்ற எமது போர்வீரர்களை தண்டிக்க முயற்சிக்கின்றது என மகிந்த கூறியிருந்தார்.

இதற்கு நான் கூறியிருந்தேன் போரில் வென்றவர்களை தண்டிப்பது எமது நோக்கமல்ல, போரிலே வெல்லும் போது சட்டத்துக்கு புறம்பானவகையில் செயற்பட்டவர்களை தான் தண்டிக்குமாறு சர்வதேசமும் நாமும் கோரி வருகின்றோம். போரில் ஈடுபட்டமையால் அவர்களை தண்டிக்க வேண்டும் என எங்கு எவரும் சொல்லவில்லை.

ஆகவே சில நேரங்களிலே ஒரு குழுவில் ஒருவர் பிழை செய்தால் பிழை செய்தவரை தண்டிக்க வேண்டும். அதற்காக அந்த குழுவை தண்டிக்க வேண்டும் என்றல்ல. குறிப்பாக இரு அணிகளுக்கு இடையில் ஒரு விளையாட்டு நடக்கின்றது. அதில் ஒரு அணியில் உள்ள ஒருவர் தவறு இழைத்தால் அந்தத் தவறு இழைத்தவரைத் தண்டிக்க வேண்டும். அதற்காக நாங்கள் அந்தக் கல்லூரியை குற்றஞ் சாட்டுகிறோம் என்றல்ல.

தனிப்பட்ட ஒருவர் அல்லது தனிப்பட்ட சிலர் சட்டத்திற்குப் புறம்பான முறையிலே போரகாலத்திலே அல்லது போர் முடியும் காலத்திலே செயற்பட்டிருந்தால் அவர்களை அடையாளம் கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் கேட்கின்றோமேயொழிய இராணுவத்தினர் அனைவரையும் தண்டிக்கவேண்டுமென்று எங்குமே கேட்கவில்லை. இதைத்தான் நான் சந்திரிகா அம்மையாருக்கும் கூறுவேன். அங்கு நான் கடைசியாகப் பேசியிருந்தால் இதனை அன்றே அவருக்கு முன்னால் கூறியிருப்பேன் என வடக்கு முதலமைச்சர் தனது கருத்தை தெரிவித்தார். (செ-4)

## நாட்டில் தொடரும்...

ள்ளது.

நாட்டின் 14 மாவட்டங்களில் வாழும் பொதுமக்களுக்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கடும் வரட்சியின் காரணமாக பல இடங்களில் குடிநீருக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் பவுசர் கொள்கலன்களில் குடிநீரை விநியோகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் 255, 616 குடும்பங்களைச் சேர்ந்த 940, 222 பேர் வரட்சியான கால நிலை காரணமாக பல்வேறு பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டம் நாட்டின் ஏனைய மாவட்டங்களை விட கூடுதலான பாதிப்பை எதிர்கொண்டுள்ளதுடன், மாவட்டத்தில் வாழும் பொதுமக்களில் ஒரு லட்சம் வரையானோர் வரட்சியின் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## அரசியலமைப்புக்கு...

வருகின்றன.

இந்த அரசியல் சாசனம் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்பட்டு மக்களின் அங்கீகாரம் பெற்றாக வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித் தார்.

மலையகத்தில் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படுவதுடன் மலையக மக்களின் தேவைகள், விருப்பங்கள், அபிலாசைகள் ஆகியவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும். இதன் மூலமே மலையக மக்கள் வாழ்வில் ஆரோக்கியமானதோர் சூழலை அனுபவிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பண்டாரவளை இந்து இளைஞர் மன்றத்தின் 45ஆவது பூர்த்தி விழா நேற்று முன்தினம் ஆர்.சி பெரியார் அரங்கில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து இன மக்களும் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கான அரசியல் சூழல் ஏற்பட வேண்டும். நாட்டின் நலன் கருதியும் நாட்டு மக்களின் நலன் கருதியும் அனைத்து மக்களும் கௌரவத்துடனும், சுபீட்சத்துடனும் வாழக்கூடிய வகையில் உருவாக்கப்படும் அரசியல் சாசனம் அமைய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அந்த அரசியல் சாசனம் உருவாவதற்கு மலையகத்தை சார்ந்த சிறுபான்மை அமைப்புக்களும் வடக்கு கிழக்கு அமைப்புக்களும் பூரண ஆதரவை வழங்கவேண்டும் என சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (செ-11)

## நாட்டுக்கு...

ன்றம் மற்றும் சமஷ்டித் தீர்வுக்கான அரசமைப்பை ஏற்படுத்தி விட வேண்டும் என்ற அபாயகரமான உள்நோக்கத்தோடு தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு இரண்டு வருடகால அவகாசம் வழங்கப்பட்டதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அதேவேளை ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பிலான தகவல்களை 8 வருடங்களுக்கும் மேலாக மறைத்த குற்றத்துக்காக அமைச்சர் சரத் பொன்சேகாவை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிவிருது ஹெல உறுமயக் காரியாலயத்தில் நேற்றையதினம் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில, ஜெனிவா மாநாட்டில் தமக்கு வெற்றி கிடைத்து விட்டது எனக் கூறி, ஆனந்தக் கண்ணீர் வடித்துக்கொண்டு அரசாங்கம் தற்போது துள்ளிக்கொண்டிருக்கின்றது.

2015ஆம் ஆண்டு ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற தமக்கு 2 வருடகால அவகாசம் வழங்கப்பட்டமையானது இராஜதந்திர ரீதியிலான வெற்றி எனவும் அரசு தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கின்றது.

இதன்மூலம் சர்வதேசத்தின் ஊடாக சதிவலையொன்று இலங்கைக்கு எதிராக பின்னப்பட்டுள்ளமையை அரசாங்கம் இன்னும் உணரவில்லை.

அதாவது நாடானது தற்போது பாரிய பொருளாதார வீழ்ச்சியை நோக்கி பயணிக்கின்றது என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் ஒரு கசப்பான உண்மையாக இருக்கின்றது என தெரிவித்தார். (செ-11)

## யாழ்.கட்டளைத்...

ங்கை இராணுவ தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டதை அடுத்து அவருடைய பதவியின் வெற்றிடத்துக்கே தர்ஷன ஹெட்டியாரச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சி நாளைமறுதினம் 30ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் யாழ்.மாவட்டத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கவுள்ளார்

இதற்கு முன்னர் இவர் பாதுகாப்பு படைகளின் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக இரண்டு வருடங்கள் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## வீதி விபத்தில்...

சாவகச்சேரியைச் சேர்ந்த சண்முகம் கிருஷ்ணசாமி (வயது 47) என்பவரே உயிரிழந்தவராவார்.

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியைவிட்டு விலத்தி அருகில் இருந்த கல்லில் மோதியதிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (செ-283)

## 4000 ஏக்கர்...

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதியாக இருந்து இராணுவத்தின் பிரதான அலுவலராக பதவி உயர்வு பெற்றுச் செல்கின்ற மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்கவின் பிரியாவிடை நிகழ்வு நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், தேசிய பாதுகாப்பு படையினர் யாழ் மாவட்ட மக்களுக்கு ஒரு நம்பகரமான செயற்றிட்டத்தினை முன்னெடுத்துள்ளனர். இதன் மூலம் மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் காணிகளை நாங்கள் வழங்கியுள்ளோம்.

மேலும் நாம் காணிகளை விடுவிக்கவுள்ளோம். இதற்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் சுமார் 4 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிப்பு திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் காங்கேசன்துறை முகப் பகுதியின் சில இடங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில், எதிர்வரும் வருடங்களில் மீள்குடியேற்ற வேண்டிய இடங்களை அடையாளம் காணுதல், அதற்கான முன்மொழிவுகளை ஏற்படுத்திக்கொள்ளல்.

மேலும் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள இடங்களில் மக்களின் தேவைப்பாடுகள், இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ள மக்களின் காணிகளை மக்களுக்கு பெற்றுக்கொடுத்தல் மற்றும் தேசிய பாதுகாப்பின் மூலமாக யாழ்.மாவட்ட மக்களின் சமகால செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் யாழ்.மாவட்ட செயலக வட்டாரங்கள் தகவல் தெரிவித்திருந்தன. (செ-11)

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்



## விளக்கமறியல்...

பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது, கடந்த 8 ஆம் திகதி வவுனியா பஸார் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றினை உடைத்து பொருட்களை களவாட முயன்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த ரட்னாயக்க முதியன்சிலாகே ரம்பண்டா (வயது - 58) என்ற சந்தேக நபரே உயிரிழந்துள்ளார்.

வவுனியா மாவட்ட நீதிமன்றத்தினால் இவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில் வவுனியா சிறைச்சாலையில் இவர் தடுத்து வைக்கப்பட்டிருந்துள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி நுரையீரலில் கிருமி தொற்று ஏற்பட்டு சுகவீனம் அடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-15-250)

## வவுனியாவில்...

திணைக்களம் ஆகியன இணைந்து டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துள்ளன.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று காலை இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்வு கூட்டத்தினை அடுத்து வீதியோரங்களில் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவுடன் நகரசபை ஊழியர்கள் மற்றும் சுகாதார திணைக்களத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி எஸ். லவன், கடந்த பெப்ரவரி மாதம் 90 பேர் டெங்கு தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மார்ச் மாதம் இதுவரை 100 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் டெங்கு தாக்கம் அதிகமாக உள்ளமையே வவுனியாவில் டெங்கு நோயாளர்கள் அதிகரிக்க காரணமாக அமைந்துள்ளது என தெரிவித்ததுடன் இது வரை நாடு பூராகவும் 24 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (செ-11)

கைநிறைய சம்பாதிக்க கௌரவமான
தொழில் வேண்டுமா?
யாழ் - கொழும்பு - வெளிநாடுகளில் ஆயிரக்கணக்கான
ஹொட்டேல் வேலைவாய்ப்புகளைப் பெற



O/L உடன் துறைசார் பயிற்சிபெற்று உலகின் பல நாடுகளிலும் நூற்றுக்கணக்கான கிளைகளைக் கொண்ட Sheraton Hotels வலைப்பின்னலில், டுபாய், கட்டார், குவைட், ஓமான், பாஃரேன், யேமன், சுவீடன், பிரித்தானியா என பல நாடுகளிலும் 30 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி உயர் பதவி வகித்த யாழ் மண்ணின் மைந்தன்
விக்கி சுப்பிரமணியம்
கிறிஸ்ரோஃபர் பொன்னுத்துரை
General Manager - Jetwing Hotel
கார்த்திகன்
General Manager - Green Grass
மற்றும் ஹொட்டேல் உரிமையாளர்களை நேரில் சந்தித்து வேலைவாய்ப்புடன் கூடிய கற்கைநெறியில் இணையுங்கள்
O/L உடன் Diploma in Tourism &
Hotel Management
with 3 Months FREE ENGLISH COURSE
முதல் மாதத்திலிருந்தே வருமானத்துடன் தொழில்!
3 - 6 மாதத்தில் நட்சத்திர விடுதிகளில் வேலைவாய்ப்பு!
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
பிரவேசம் இலவசம்
31-03-2017 வெள்ளி காலை 10 மணி
ஞானம்ஸ் ஹொட்டேல்,
299, 301 மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
SCHOOL of HOSPITALITY
முற்பதிவு அவசியம்
077 36 16 798
பெற்றோரும் கலந்துகொண்டு விளக்கங்களைப் பெறலாம்
இல.175, 1ம் குறுக்குத் தெரு, (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்
(C-7927)

விற்பனைக்கு
நம்பர் 1 தரமான ஸ்டார் ஓடு
49/- கொண்டு வந்து
இறக்குவதாயின் 55/-
தொடர்பு :
0786155929, 0213205939
ஆனந்த கோம்ஸ் கோண்டாவில்
(8432)

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(சி-7858)

யப்பான் சயிக்கிள்
விலை
8, 500/=
லிருந்து



புதுவருடத்தை முன்னிட்டு
விசேட விலை குறைப்பு
1.லேடிஸ் சயிக்கிள்கள்
2.யென்ஸ் சயிக்கிள்கள்
3.கியர் சயிக்கிள்கள்
4.மவுண்டன் சயிக்கிள்
5.மடக்கும் சயிக்கிள்கள்
இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு
கழுவிபூட்டுதல் திருத்த வேலைகள் இல்லை
மின்னுவதெல்லாம் பொன் அல்ல
யப்பான் சயிக்கிள் ஒன்றை வாங்கி
நீண்டகாலம் (10) வருடம் பாவிக்கலாம்
அன்ரன் என்ரபிறைசஸ்
பலாலி றோட், கோண்டாவில்.
(பாம் ஸ்கூல் முன்பாக)
(8431)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பிறந்தநாள் வாழ்த்து

கௌரவ
துமிந்த
திசாநாயக்க

[ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர், விவசாய அமைச்சர்]




ஸ்ரீலங்கா சுத்ந்திர கட்சியின் பொதுச்செயலாளரும் விவசாய அமைச்சருமாகிய துமிந்த திசாநாயக்க அவர்கள் 38வது அகவையில் இன்று கால்பதிக்கின்றார். அவர்களை வடமாகாண தமிழ் பேசும் அனைத்து மக்கள் சார்பாகவும் எமது இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம். சகல சௌபாக்கியங்களையும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம் .



வாழ்த்துவோர்...
**சிவக்கொழுந்து அகிலதாஸ்**
வட மாகாணசபை உறுப்பினர்
உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர்
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி
(சி-7930)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்
**சின்னத்தம்பி சண்முகம்**



அன்பின் திருவுருவமாய்
சிறியோர் முதல் பெரியோர் வரை
அன்பாக நேசிக்கும் அன்புச்
சித்தப்பாவே!
எங்கு மறைந்ததய்யா
உமது வார்த்தை
எங்கு போனதய்யா உமது சிரிப்பு
உம்மோடு வாழ்ந்த, பழகிய நாட்களை
மீட்டுப்பார்க்கிறோமய்யா
முடியவில்லையய்யா
எம் இதயம் ஏற்கவில்லையய்யா
எங்கு செல்வோமய்யா உமைத்தேட
பதினாறு வயது மார்க்கண்டேயரே
உம்மைப் போல் வாழ, பேச
முடியாதய்யா
கனத்த இதயத்தோடு வழி முழுவதும்
விழி நீரோடு தேட அலைகின்றோம்
வருவீரா விடை தருவீரா அன்புச்
சித்தப்பாவே!

மண் : 1950.01.24
விண் : 2017.03.26

பிரிவால்
துயருறும்...
நல்லூர்
இ.இராகவன் குடும்பம்
(8430)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.